
தமிழரசு
16-9-1993 ரூ.3

பூவையர் மகிழும் வண்ணம்
புதுமைகள் படைத்திடும் கதர்பட்டுப் புடவைகள்
அணியும் அழகே ஓர் ஆனந்தம்

அனைத்து

# காதிகிராப்ட்

அங்காடிகளில் கிடைக்கும்



DIPR No.678/DIS/93/247

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்
குறளகம், சென்னை - 600 108

# இந்த இதழில்...

மக்கள் சக்தி துணையோடு
வெற்றி கொள்வோம்!
— *மாண்புமிகு முதல்வர் உரை* ... 2
பர்கூர், தருமபுரி அனைத்து மகளிர்
காவல் நிலையங்கள் திறப்பு விழா ... 6
ஒப்பற்ற தலைவர் தந்தை பெரியார் ... 9
— மாண்புமிகு முதல்வர்
டாக்டர் புரட்சித்தலைவி
வனச்சோலைத் திட்டம் ... 11
தன்மான இயக்கத்தின் முன்னோடி
சௌந்தரபாண்டியனார்
— *மாண்புமிகு முதல்வர்* ... 13
படமும் செய்தியும் ... 14
அண்ணா என்னும் வரலாறு (கவிதை) ... 16
தந்தை பெரியார்
— *பேரறிஞர் அண்ணா* ... 17
நூல்நயம் ... 18
சுற்றுலாப் பயணிகளின் சொர்க்கம் ... 19
வள்ளுவர் கூறும் பண்புடைமை ... 21
நாட்டுநலப் பணியில் நற்றொண்டு ... 23
திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்
திருக்கோயில்கள் ... 24
விடுதலை வீரர் வ.உ.சி. ... 29
மதுரையில் வ.உ. சிதம்பரனார்
பிறந்தநாள் விழா ... 33
மனநலம் ... 35
ஆட்டின் நலம் காப்போம் ... 39
கிண்டி தேசியப் பூங்கா -
ஒரு வரலாற்றுப் பின்னணி ... 41
நெல் உற்பத்தியைப் பெருக்குவது எப்படி? ... 43
கடலூர் துறைமுகம் - ஒரு கண்ணோட்டம் ... 45
இயல் இசை நாடக மன்றம் —
பாரதியார் நினைவுநாள் விழா ... 47



## தன்னம்பிக்கை தேவை!

மனிதன் கீழ்மை நிலையிலிருந்துமேம்பாடடைய வேண்டுமானால், தன்னம்பிக்கை உடையவனாகவும், தனது சக்தி என்ன என்பதை உணர்ந்தவனாகவும் இருக்க வேண்டும்.

— தந்தை பெரியார்

**தமிழரசு**

திருவள்ளுவர் ஆண்டு 2024

ஆவணித் திங்கள் - 31

மலர்:24 இதழ்:6

16-9-1993

விலை ரூபாய் மூன்று

★ கலை என்பது நெறி முறை, வீரம், ஒழுக்கம், கற்பு, காதல் என்னும் பண்புகளைத் தரக்கூடிய தாக இருத்தல் வேண்டும்.

- பேரறிஞர் அண்ணா



# தர்மபுரி மாவட்டம் - பாலக்கோட்டில் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில், மாண்புமிகு முதல்வர் உரை



நிர்வகிக்கப்படும், கூட்டுறவுப் பஞ்சாலை ஒன்றை நிறுவுவதற்கு, அடிக்கல் நாட்டினேன். மூன்றாவது முறையாக, தருமபுரிக்கு நான் வந்திருந்தபொழுது, ஓரப்பம் கிராமத்தில் நடந்த அரசு விழாவில், இம் மாவட்டம் நிரந்தரப் பயன் பெறும் வண்ணம், 238 கோடி ரூபாய் மதிப்புள்ள வளர்ச்சிப் பணிகளுக்கு, அடிக்கல் நாட்டியும், புதிய திட்டங்களைத் தொடங்கி வைத்தும், கட்டடங்களைத் திறந்து வைத்தும், நலிந்தோருக்கு அரசு நலத் திட்ட உதவிகளை வழங்கியும், எனது மகிழ்ச்சியை இந்த மாவட்டத்து மக்களோடு பகிர்ந்து கொண்டது, இன்னமும் என் நினைவில் பசுமையாக இருக்கின்றது.

இப்படி, பல நூறு கோடி ரூபாய் மதிப்புள்ள திட்டங்களை, இந்த மாவட்டத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்காக, முனைப்புடன் உங்கள் சகோதரியின் தலைமையில் அமைந்த அரசு, செயல்படுத்தி வந்தாலும், வறுமையின் காரணமாக அன்றாடம் வாழ்க்கையில் பல்வேறு சோதனைகளையும், வேதனைகளையும் சந்தித்துக் கொண்டிருக்கும்,

# மக்கள் சக்தி துணையோடு வெற்றி கொள்வோம்!

பின்தங்கிய மக்கள் வாழும் பகுதியிலிருந்து, சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டால், அப்பகுதி வாழ் மக்களின் வாழ்க்கை மேம்பாட்டிற்குப் பணியாற்றிட வாய்ப்பு கிடைக்கும் என்ற எண்ணத்துடன் தான், பர்கூர் தொகுதியில் இருந்து போட்டியிட்டு, உங்கள் அபரிமிதமான ஆதரவுடன் வெற்றி பெற்றேன்.

நான் முதலமைச்சராகப் பதவியேற்ற பின்பு, தருமபுரி மாவட்டத்திற்கு வந்தபோதெல்லாம், மனதில் உவகையுடனும், கையில் கோடிக் கணக்கான ரூபாய்க்கான அரசுத் திட்டங்களுடனும், உங்களைச் சந்தித்துள்ளேன். இந்த மாவட்டம் வளம் கொழிக்கும் பூமியாக மாறவும், இம்மாவட்டத்து மக்கள் வாழ்க்கையில் மேம்பாடு அடைய வேண்டும் என்பதற்காகவும், நான் எடுத்து வரும் நடவடிக்கைகள், உங்கள் அனைவருக்கும் தெரியும்.

1991-இல் பர்கூருக்கு வந்த பொழுது, 34 கோடி ரூபாய் மதிப்புள்ள திட்டங்களைக் கொண்டு வந்தேன். குறிப்பாக, 15 கோடி ரூபாய் செலவில், மாதேப்பள்ளியில், கருங்கல் மெருகூட்டி உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்த, அடிக்கல் நாட்டினேன். அதன் பின்னர், இரண்டாவது முறையாகப் பர்கூருக்கு மீண்டும் வந்து, பாசமும், நேசமும் நிறைந்த இம்மாவட்டத்து, கள்ளமில்லா உள்ளங்களைச் சந்தித்தபொழுது, 22 கோடி ரூபாய் செலவில், பெண்களுக்கெனப் பெண்களாலேயே

சாதாரண மக்களின் தனிப்பட்ட வாழ்க்கை, அர்த்தமுள்ளதாகவும், அமைதி நிறைந்ததாகவும் ஆக வேண்டும் என்றால், தனிப்பட்ட வகையில் அவர்கள் வாழ்க்கை வளம் அடைய, அரசு நலத்திட்ட உதவிகள் அவர்களைச் சென்றடைய, சில செயல்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்று திட்டமிட்டேன். அந்தத் திட்டத்திற்குச் செயல் வடிவம் தரும் வகையில், தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களில் இருந்தும், நானே குறிப்பிட்ட நாட்களில், மக்களிடமிருந்து பல இலட்சக்கணக்கான மனுக்களைப் பெற்று, அவற்றின் மீது நடவடிக்கைகளை எடுத்து, பல்லாயிரக்கணக்கான மனுதாரர்களை, அரசுச் செலவில் சென்னைக்கு வரவழைத்து, அவர்

களுக்கு நலத் திட்ட உதவிகளை, என் கைப்பட வழங்கி மகிழ்ந்தேன். மக்களின் வறுமைப் பிணியை அகற்றும், மாபெரும் இயக்கத்தின் ஒரு கட்டமாக, மனுதாரர்களைச் சென்னைக்கு வரவழைத்து, உதவிகளைத் தந்ததோடு, மறு கட்டமாக, மாவட்ட வாரியாக நானே சென்று, என்னிடம் மனுக்களைக் கொடுத்த நலிவுற்றோரையும், ஆதரவற்றவர்களையும் சந்தித்து, அவர்களுக்கு அரசு நலத் திட்ட உதவிகளை நேரில் வழங்கி, அவர்களின் வாழ்க்கை மேம்பாட்டிற்கு வழிவகுக்க வந்துள்ளேன்.

நம்பிக்கையும், பேரன்பும் கொண்டு உள்ள, பல இலட்சக்கணக்கான சகோதர சகோதரிகளை, நேரில் சந்தித்து, குறைகளைக் கேட்டு, மனுக்களைப் பெற்றேன். பல்வேறு அரசு நலத் திட்ட பலன்கள், மக்களுக்கு நேரிடையாகச் சென்றடைவதில்லை, என்கின்ற பரவலான குற்றச்சாட்டுக்களை மனதில் கொண்டு, என்னிடம் மனுக்கள் கொடுத்த மனுதாரர்களுக்கு, நியாயமான முறையில், அரசு நலத்திட்ட பலன்கள் சென்றடைய வேண்டும் என்ற எண்ணத்தில், மனுதாரர்களை நேரில் வரவழைத்து, உதவிகளை வழங்கும் புதிய நடைமுறையைச் செயல்படுத்தினேன்.



பொதுமக்கள் குறை தீர்க்கும் பணியை, எங்கள் அரசு, தனது தலையாய பணியாகக் கருதி, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு துணை ஆட்சியர் Deputy Collector தகுதியில் ஒரு அலுவலரையும் நியமித்து, மனுக்கள் மீது துரிதமாகவும், சரியாகவும் நடவடிக்கைகள் எடுக்க ஏற்பாடு செய்துள்ளது. சமூக நலத் திட்டங்களைத் திறம்பட செயல்படுத்த, மாவட்ட ஆட்சியாளர்கள் கோருகின்ற நிதி ஒதுக்கீடுகளை, நான் கனிவுடன் பரிசீலித்து, அதற்கான ஆணைகளைப் பிறப்பித்து, குறை தீர்க்கும் பணிக்கு, ஒரு புதிய உத்வேகத்தைக் கொடுத்துள்ளேன்.

என்னிடம் அளவிட முடியாத

'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்!' என்ற பேரறிஞர் பெருந்தகை அண்ணாவின் கருத்துக்களுக்கு, இத்தகைய விழாக்கள் மூலம், வடிவம் கொடுத்திருக்கிறோம். அடித்தளத்து மக்களின் உணர்வுகளை அறிந்து, அவர்களின் வாழ்க்கை மேம்பாட்டிற்கு, பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., ஆகியோரின் அடிச்சுவட்டில் வீறுநடை போட்டு, எத்தனை இன்னல்கள், இடர்ப்பாடுகள் வந்தாலும், அவற்றைத் தாங்கிக் கொண்டு, எங்கள் இலக்கினை அடைந்தே தீருவோம். எத்தனை தீய சக்திகள், எங்களது மக்கள் பணியில் குறுக்கிட்டாலும், அவற்றையெல்லாம் மக்கள் சக்தியின் துணையுடன், வெற்றி கொள்வோம் என்பதை, உறுதியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

உங்கள் சகோதரியின் தலைமையிலான இந்த அரசு, மகளிரின் மேம்பாட்டிற்கும், அவர்களின் பாதுகாப்பிற்கும், தேவையான நடவடிக்கைகளை எடுப்பதில், மிகுந்த தீவிரம் காட்டி வருகிறது. சட்டத்தின் கீழ், மகளிருக்குத் தேவையான பாதுகாப்பு வழங்கப்பட்டு இருந்தாலும், நடைமுறையில், நமது அன்பிற்குரிய தாய்மார்களும், சகோதரிகளும், தங்களது பிரச்சினைகளுக்கு நியாயமான தீர்வு காண முடியாமல், அவதிப்படுகின்ற நிலையைக் காண்கின்றோம். ஆண்கள் பணிபுரியும் ஒரு காவல் நிலையத்தில், ஒரு பெண், மனம் திறந்து உண்மைகளை எடுத்துரைக்க இயலாத சூழ்நிலைகளின் காரணமாகவே, தங்களுக்கு நேர்ந்த பல கொடுமைகளை, கனத்த மனத்தோடும், கண்ணீரோடும், விதிப் பயன் என்று, பல தாய்மார்கள் ஏற்றுக் கொண்டுள்ளார்கள். அந்த அவல நிலையை மாற்ற வேண்டும். மனிதாபிமான அடிப்படையில், பிரச்சினைகளை அணுகுகின்ற மனோபாவமும், இரக்கத்தின் அடிப்படையில், பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் திறமையும், மகளிருக்கு அதிகம் உண்டு என்பதால், மகளிரின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு, சென்ற தமிழ்ப் புத்தாண்டு அன்று, சென்னையில், முழுமையான மகளிரைக் கொண்டு இயங்கும், ஒரு அனைத்து மகளிர் காவல் நிலையத்தைத் திறந்து வைத்தேன். இக்காவல் நிலையம் சிறப்பாக பணியாற்றி, பலதரப்பட்ட மக்களின் பாராட்டுக்களைப் பெற்று உள்ளது.

தமிழகத்தில் உள்ள எல்லா காவல் மாவட்டத்திற்கும், மாவட்டத்திற்கு ஒரு அனைத்து மகளிர் காவல் நிலையம் தொடங்கப்படும் என்று அறிவித்தேன். அதன்படி, 28 மகளிர் காவல் நிலையங்கள், தேவையான பணியாளர்களைக் கொண்டு, ஜீப், தொலைபேசி போன்ற அனைத்து அடிப்படை வசதிகளுடன் செயல்பட, தேவையான நிதி ஒதுக்கீடு செய்ய ஆணையிட்டேன். சென்னையில், வடசென்னை மற்றும் தென்

சென்னைப் பகுதிகளுக்கென்று, மேலும் 2 அனைத்து மகளிர் காவல் நிலையங்களையும், மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிக்கென்று 2 மகளிர் காவல் நிலையங்களையும் திறந்து வைத்தேன்.

கோவையில் திறக்கப்பட்ட அனைத்து மகளிர் காவல் நிலையம், கோவை மாநகராட்சிப் பகுதிக்கு மட்டுமின்றி, கோவை மாவட்டம் முழுமைக்கும் சேவை புரியும். அதேபோல், மதுரையில் திறக்கப்பட்ட அனைத்து மகளிர் காவல் நிலையத்தை, மதுரை மாநகராட்சிக்கு மட்டுமல்லாமல், அம் மாவட்டத்திலுள்ள எல்லாப் பெண்களும் பயன்படுத்திக்கொள்ள முடியும். இன்று பிற்பகல் தருமபுரியிலும், பர்கூரிலும், 2 அனைத்து மகளிர் காவல் நிலையங்களைத் திறந்து வைக்க உள்ளேன்.

தருமபுரியில் இயங்கும் அனைத்து மகளிர் காவல் நிலையம், தருமபுரி, அரூர், பென்னாகரம் ஆகிய 3 தாலுக்காக்களை முழுமையாகவும், ஊத்தங்கரை மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய தாலுக்காக்களின் பகுதியையும், தனது ஆட்சி எல்லைகளாகக் கொண்டு செயல்படும். பர்கூரில் தொடங்கப்பட உள்ள அனைத்து மகளிர் காவல் நிலையம், ஒசூர், தேன்கனிக்கோட்டை, பாலக்கோடு ஆகிய தாலுக்காக்களை முழுமையாகவும், கிருஷ்ணகிரி, மற்றும் ஊத்தங்கரை ஆகிய 2 தாலுக்காக்களின் பகுதியையும், தனது ஆட்சி எல்லைகளாகக் கொண்டு செயல்படும். அதாவது, இம்மாவட்டத்திலுள்ள 44 காவல் நிலையங்களில், 22 காவல் நிலையங்கள், தருமபுரி அனைத்து மகளிர் காவல் நிலையத்தின் கீழும், மீதமுள்ள 22 காவல் நிலையங்கள், பர்கூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தின் ஆளுகையிலும் வரும். இம்மாவட்டத்துப் பெண்கள், இக்காவல் நிலையங்களை, முழுமையாகப் பயன்படுத்திக் கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

பெண்களின் வாழ்க்கை மேம்பாட்டிற்கு, பெண் கல்வி மிகவும் முக்கியமானது என்பதை உணர்ந்து, பெண்களின் கல்வி வளர்ச்சி அடைய, நான் பல திட்டங்களைத் தீட்டி, நடைமுறைப்படுத்தி வருகின்றேன்.

பின்தங்கிய பகுதியான இம் மாவட்டத்தில் வசிக்கும் மகளிர், பயன்பெறும் வகையில், பர்கூரில், 60 இலட்சம் ரூபாய் செலவில், ஒரு பெண்கள் கலைக்கல்லூரி தொடங்கிச் செயல்பட, சமீபத்தில் ஆணை பிறப்பித்துள்ளேன். இம்மாவட்டத்தை பெண்களின் முன்னேற்றத்திற்கு, இந்தக் கல்லூரி, உறுதுணையாக இருக்கும் என உறுதியாக நம்புகிறேன்.

இந்த நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெறும் பள்ளியைச் சேர்ந்தவர்கள் இந்தப் பள்ளிக்கென ஒரு கூடைப்பந்து விளையாட்டு மைதானம் (Basket Ball Court) ஒன்று அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று இந்தப் பள்ளியிலிருந்து கோரிக்கை வந்தன. எனவே, கடந்த ஐந்தாறு நாட்களுக்குள் விரைந்து பணியாற்றி, என்னுடைய ஆணையின் பேரில் இங்கே கூடைப்பந்து மைதானம் அமைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் இங்கே வருவதற்குள் இந்தக் கூடைப்பந்து விளையாட்டு மைதானம் அமைத்தாக வேண்டும் என்று ஆணையிட்டதின்பேரில் இவ்வளவு விரைவாக பணியாற்றிய அலுவலர்கள் அனைவருக்கும் எனது பாராட்டையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மைதானத்திற்கு இரண்டு போர்டுகள் தேவைப்படுகின்றன. இந்த (Fibre Glass) போர்டுகள் சென்னையிலிருந்து உடனடியாக இங்கே அனுப்பப்படும் என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.



சில ஆண்டுகளுக்கு முன்னால், வேறொரு ஆட்சி தமிழகத்தில் இருந்த போது இதே பாலக்கோட்டிற்கு நான் சுற்றுப் பயணம் வந்தேன். அப்போது இரவு நேரம். எனக்காக ஒரு பெரிய மேடையை எங்கள் கழகத்தினர் அமைத்திருந்தார்கள். அந்தக் கூட்டம் நல்லமுறையில் நடைபெறக் கூடாது என்று அன்றைய ஆட்சியினர் அந்த மேடைக்குத் தீ வைத்துவிட்டார்கள். அந்த மேடை

முழுவதும் எரிந்து சாம்பலாகி விட்டது.

நன் இங்கே வந்து சேர்ந்தவுடன், மேடை சாம்பலாகி விட்டது என்று உடன் பிறப்புகள் தெரிவித்தார்கள். ''அம்மா என்ன செய்வது? நீங்கள் நின்று பேச மேடையில்லையே'' என்று ஊருக்கு வெளியே என்னைச் சந்தித்துக் கூறினார்கள். ''மேடை இல்லாவிட்டால் என்ன? நான் என்னுடைய பிரச்சார வேன் இருக்கிறது'' என்று கூறி நான் இந்த ஊருக்குள் வந்தேன். ஆனால், ஊர் எல்லைக்குள் நான் வந்தபோது இந்த ஊருக்கான மின்சாரத் தொடர்பை அடியோடு துண்டித்து விட்டார்கள். எங்கேயும் இருட்டாக இருந்தது, ஆனால், மக்கள் சுற்றி நின்று கொண்டிருந்தார்கள். என் வேனில், என்னைச் சுற்றி விளக்குகள் அமைக்கப்பட்டிருந்தது. அதிலிருந்துகொண்டே, வெளியிலிருந்த மக்கள் கண்ணுக்குத் தெரியாவிட்டாலும், அந்தக் காரிருளில் மக்களிடம் பேசினேன். அதனைத் தொடர்ந்து மக்கள் செய்த ஆரவாரத்தின் மூலம் அவர்கள் சுற்றிலும் நின்று கொண்டிருந்தார்கள் எனக் கண்டு கொண்டேன். அத்தகைய ஒரு சூழ்நிலையில் பாலக்கோட்டிற்கு வந்து சென்ற என்னை இன்று முதலமைச்சராக வந்து இத்தனை நல்ல திட்டங்களை, நலத் திட்டங்களை உங்களுக்காகத் தருகிற வாய்ப்பைத் தந்த தமிழக மக்களுக்கு எனது நன்றியை மீண்டும் மீண்டும் காணிக்கையாக்கிக் கொள்கிறேன்.



இன்று 15,000-க்கும் மேற்பட்ட இம்மாவட்ட மக்களுக்கு, அரசு நலத்திட்ட உதவிகளை, 10 கோடியே 39 இலட்சம் ரூபாய் செலவில் வழங்குவதில், மகிழ்ச்சியும், பேருவகையும் அடைகின்றேன்.

உங்கள் ஒவ்வொருவருக்கும், தனிப்பட்ட முறையில், உதவிகளை நானே நேரில் வழங்க வேண்டும் என்று விரும்பினாலும், நேரமில்லாமையால், 100 பேருக்கு மட்டும், உதவிகளை நானே வழங்க உள்ளேன். மற்ற பயனாளிகள் அனைவருக்கும், மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் அரசு அதிகாரிகள் எனது முன்னிலையிலேயே வழங்குவார்கள்.

இந்த விழாவில் உதவிகளைப் பெறும், எனது அன்பிற்குரிய சகோதர, சகோதரிகள் அனைவரும், உழைப்பு, உண்மை, உறுதி என்ற கொள்கையை பின்பற்றி துணிவுடன் செயல்பட்டு, வாழ்க்கையில் அனைத்து வளங்களும், நலன்களும் பெற வேண்டுமென, என் நெஞ்சார்ந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## என்னுடைய தொண்டு!

என் தொண்டெல்லாம், நம் மக்கள் உலக மக்களைப் போலச் சரிசமமாக வாழ வேண்டும், அறிவிலே முன்னேற வேண்டும் என்பதற்குத்தான்.



## சீர்திருத்தங்கள்

சீர்திருத்தங்கள் - மக்களுக்கு ஒழுக்கத்தைக் கற்பிக்கவும், அறிவை விசாலப்படுத்தவும், உயிர்களிடத்தில் அன்பும் இரக்கமும் காட்டவும், சமத்துவத்தையும் சுயமரியாதை உணர்ச்சியையும் அதிகப்படுத்தவுமே அமைய வேண்டும்.

# பர்கூர், தருமபுரி அனைத்து மகளிர் காவல் நிலையம் திறப்பு விழா

மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், தர்மபுரி மாவட்டம் பர்கூர் மற்றும் தர்மபுரியில் 30.8.93 அன்று அனைத்து மகளிர் காவல் நிலையங்களைத் திறந்து வைத்தார். அப்போது, காவல் நிலையப் பார்வையாளர் புத்தகத்தில் (Visitors Book) அறிவுரை வழங்கிக் கையெழுத்திட்டார். அதன் விவரம் வருமாறு:

**முதல் அட்டை சொல்லும் செய்தி:**



**பர்கூர் அனைத்து மகளிர் காவல் நிலையம்**

பர்கூரில் இந்த அனைத்து மகளிர் காவல் நிலையத்தைத் திறந்து வைத்துப்பதில் நான் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். இது பர்கூரில் முதலாவதும் தருமபுரி மாவட்டத்தில் இரண்டாவதும் ஆன காவல் நிலையம் ஆகும். மேலும் மாநிலத்தில் அனைத்துப் பகுதிகளிலும் திறக்கப்படவிருக்கும் அனைத்து மகளிர் காவல் நிலையத் தொடரில் இதுவும் ஒன்றாகும்.

தமிழ்நாட்டில் அனைத்து மகளிர் காவல் நிலையம் முதன்முதலாக 1992-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் சென்னையில் திறந்து வைக்கப் பட்டு, இன்றுவரை அந்தக் காவல் நிலையம் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. பெண்கள் தங்கள் சட்ட உரிமைகள் பற்றி நன்கு தெரிந்து கொள்ள இந்தக் காவல் நிலையங்கள் துணைபுரிவதோடு, தங்களின் நியாயமான குறைகள் பரிவோடு கேட்கப்பட்டு உடனடி நிவாரணம் பெற முடியும் என்ற நம்பிக்கையையும் அளித்துள்ளது.

சென்னையில் தொடங்கி வைக்கப்பட்ட முதலாம் அனைத்து மகளிர் காவல் நிலையம் அடைந்துள்ள அளப்பரிய மதிப்பும் பொது மக்களிடம், அதிலும் குறிப்பாகப் பெண்களிட



மிருந்து இது பெற்றுள்ள மிகப்பெரிய வரவேற்பும் மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளிலும் இது போன்ற அனைத்து மகளிர் காவல் நிலையங்களை நிறுவ எனக்கு ஊக்கமளித்தது.

இந்த அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் பணிபுரியும் ஆய்வாளர், காவலர் மற்றும் பிற அலுவலர்கள் தங்கள் பணிகளைப் பாராட்டத்தக்க வகையில் நிறைவேற்றி, பொதுமக்கள் – அதிலும் குறிப்பாகப் பெண்கள் எதிர்பார்த்த அளவுக்குச் செயலாற்றி, தமிழ்நாடு காவல் துறைக்கு மேலும் பெருமையையும் புகழையும் சேர்ப்பார்கள் என்பதில் எனக்கு ஐயமில்லை.

**தருமபுரி அனைத்து மகளிர் காவல் நிலையம்**

தருமபுரியில் இந்த அனைத்து மகளிர் காவல் நிலையத்தைத் திறந்து வைப்பதில் நான் பெரு





மகிழ்ச்சி அடைகிறேன்.

இது, தருமபுரி மாவட்டத்தில் முதலாவதும் இதே போன்று தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் திறக்கப்படவிருக்கும் அனைத்து மகளிர் காவல் நிலையங்களின் தொடர்ச்சியில் ஒன்றும் ஆகும்.

தமிழ்நாட்டில் முதல் அனைத்து மகளிர் காவல் நிலையம் சென்னையில் 1992-93-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் தொடங்கி வைக்கப்பட்டது. இந்த முதலாவது காவல் நிலையம் அன்றிலிருந்து இதுவரை தொடர்ந்து வெற்றிகரமாகச் செயல்பட்டு வருகிறது. இந்தக் காவல் நிலையம் பெண்கள் தங்கள் சட்ட உரிமைகளை நன்கு உணர்ந்துக்கொள்ள உதவுவதோடு தங்களின் நியாயமான குறைகள் பரிவோடு கேட்கப்பட்டு உடனடி நிவாரணம் பெறமுடியும் என்ற நம்பிக்கையையும் மகளிருக்கு அளித்துள்ளது.

சென்னையில் தொடங்கி வைக்கப்பட்ட முதலாம் அனைத்து மகளிர் காவல் நிலையம் அடைந்துள்ள அளப்பரிய மதிப்பும், பொது மக்களிடமிருந்து, அதுவும் குறிப்பாகப் பெண்களிடமிருந்து இந்தக் காவல் நிலையம் பெற்றுள்ள மிகப்பெரிய வரவேற்பும் இதுபோன்று அனைத்து மகளிர் காவல் நிலையகளை மாநிலம் முழுவதும் நிறுவ அறிவிப்பு வழங்க எனக்கு ஊக்கமளித்திருக்கிறது.

இந்த அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் பணிபுரியும் ஆய்வாளர், அலுவலர்கள் மற்றும் பிற ஊழியர்கள் தங்கள் பணிகளில் பாராட்டத்தக்க வகையில் செயலாற்றி, பொதுமக்கள் அதிலும் குறிப்பாகப் பெண்கள் எதிர்பார்த்த அளவுக்குப் பணியில் சிறந்தோங்கி தமிழகக் காவல் துறைக்கு மேலும் பெருமையையும் புகழையும் சேர்ப்பார்கள் என்பதில் எனக்கு ஐயமில்லை.

## அண்ணா போற்றிய பெருமக்கள்

### தமிழ்த் தென்றல் திரு.வி.க.



தமிழ்நாட்டிலே நல்ல தமிழிலே மேடையில் பேசமுடியும் என்பதை முதன் முதல் பேசிக் காட்டியவர் திரு.வி.க. (திருவாளர் வி. கலியாண சுந்தரனார்).

அழகிய தமிழிலே அரசியலைப் பற்றியும் எழுத முடியும் என்பதை முதலாவதாக எழுதிக் காட்டியவர் திரு.வி.க.

அரசியலில் புயலாகவும் தமிழில் தென்றலாகவும் இருப்பவர் நம் திரு.வி.க.

நூல்களிலே நுண்ணிய உரையைத் தீட்டியவர் நம் திரு.வி.க.

எதிர்கால உலகத்துக்காகச் சிறந்த ஏடுகளைத் தயாரிப்பவர் நம் திரு.வி.க.

(தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்கள் தலைமையில், பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆற்றிய உரை)



# ஒப்பற்ற தலைவர் தந்தை பெரியார்

## -மாண்புமிகு முதல்வர்

தந்தை பெரியாரது வாழ்க்கை வரலாறு ஒரு பயன் மரம். பலரும் படித்துத் தெரிந்துகொள்ள வேண்டிய அனுபவச் சுரங்கம். இறக்கும்வரை சமூக மேம்பாட்டிற்காக உழைத்த ஒரு பெரிய தலைவர் நம்மிடம் உண்டென்றால் அது தந்தை பெரியார் தான்.

பெண்கள் முன்னேற்றத்தைப் பற்றிப் பேசி அதற்காக உழைத்த உலகத் தலைவர்களின் வரிசையில் தந்தை பெரியார் அவர்களுக்கு முதலிடம் என்றைக்குமே உண்டு என்பது நாம் அனைவரும் அறிந்த உண்மையாகும்.

நமக்கெல்லாம் மகிழ்ச்சி தருகிற மற்றொரு செய்தி, பெரியார் என்கிற சிறப்புப் பட்டம் 1938-இல் சென்னையில் நடத்தப்பட்ட தமிழ்நாட்டுப் பெண்கள் மாநாட்டில்தான் அவருக்கு வழங்கப்பட்டது.

ஒரு பெரியாரைக் கண்டுபிடிப்பதில் ஆண்களைவிடப் பெண்களுக்கு எப்படிப்பட்ட தொலைநோக்கு எண்ணம் இருந்திருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கும்போது இன்னும் மகிழ்ச்சியாகவும், பெருமையாகவும் இருக்கிறது! அதுவும் தமிழ்நாட்டுப் பெண்களுக்குத் தலைவர்களைத் தேர்ந்தெடுப்பதில் இருக்கிற சாதுரியம், வேறு எந்த மாநிலப் பெண்களுக்கும் இல்லை என்றே கூற வேண்டும்.

ஒரு பெண்ணை முதலமைச்சர் ஆக்கியிருக்கிற தமிழகத்தின் பெருந்தன்மைக்கு, தொலைநோக்குப் பார்வைக்கு, அரசியல் துணிவுக்கு, தந்தை பெரியாரின் பெண்ணடிமை ஒழிப்புக் கருத்துக்களே உரமாய், ஊக்கமாய் இருந்துள்ளன என்பதை எவரும் மறுத்திட இயலாது.

தந்தை பெரியார் அவர்கள் இன்று நம்மிடையே இருந்தால், ஒரு பெண் தமிழகத்தின் முதல்வராய் இருப்பதைக் கண்டு பேரானந்தம் கொண்டிருப்பார். பெருமகிழ்ச்சி அடைந்திருப்பார். ஏனெனில், தனது வாழ்நாள் இலட்சியங்

களில் மிக முக்கியமான பெண்ணுரிமை மேம்பாட்டிற்குக் கிடைத்த மாபெரும் வெற்றியாக இதைக் கருதியிருப்பார்.

சமுதாயச் சிந்தனைகளின் மூலம் புரட்சிக் கனல் வீசிய பெரியாரின் மென்மையான குணங்களைப் பற்றிப் படித்து, நான் நிறைய சந்தர்ப்பங்களில் மெய்சிலிர்த்துப் போயிருக்கிறேன்.

குறிப்பாக, நட்புக்குத் தமிழகத்தில் இலக்கணம் வகுத்தவர் தந்தை பெரியார்தான் என்றால் அது மிகையாகாது. ''ஈ.வே.ரா. அவர்களுக்கும், எனக்கும் உள்ள அகநகும் நட்பு யார் என்ன சொன்னபோதிலும் என்றும் குறையாது' என்றார் அவரது நண்பர் மூதறிஞர் இராஜாஜி அவர்கள். இராஜாஜி அவர்கள் மறைந்தபோது, அந்த இழப்பைத் தாங்காது குலுங்கிக் குலுங்கிக் கண்ணீர்விட்டு அழுதவர் தந்தை பெரியார். இருவருக்கும் கொள்கையில் பெரிய வித்தியாசம், ஆனால் கொண்டிருந்த நட்பில் அழுத்தமான பிடிப்பு; ஆழமான பாசம்! அரசியல் கட்சியிலிருக்கிற தலைவர்கள் பின்பற்ற வேண்டிய உன்னதமான பாடம் இது. பிரான்ஸ் நாட்டுத் தத்துவ மேதை வால்டேரின் கூற்றுப்படி, 'நீ சொல்வதை நான் ஏற்காமல் போகலாம். ஆனால் அதை நீ சொல்வதற்கான உரிமையை, என் உயிர் கொடுத்தேனும் காப்பேன்'.

கருத்து வேற்றுமைகளுக்கு மதிப்பு அளிப்பது சாதாரண மனிதர்களுக்கு இயல்பாகவே வராது; சரித்திரப் புருஷர்களுக்கு மட்டும் அது சாத்தியம். அந்த வகையில் தந்தை பெரியார் அவர்களை அணுகி ஆராய்ந்தோமானால் நமக்குக் கிடைக்கிற அனுபவங்கள் ஏராளம்.

தேசிய கீதம் இசைக்கப்படுகிறபோது தள்ளாத வயதிலும் அவர் எழுந்து நிற்கிற பாங்கும், குறைந்த வயதுடையவர்களையும் 'வாங்கய்யா' என்று அவர் கூப்பிடுகிற நேயமும், தந்தை பெரியார் அவர்களுக்கு மட்டுமே கைவரப்பெற்ற கலையாகும்.

தமிழ்நாட்டின் தலைவர்கள் எல்லாம் தந்தை பெரியாரைப் பற்றிப் புகழ்வதற்குக் காரணமே அவரிடம் இருந்த நேர்மை, நியாயம், கொள்கை உறுதி, வெற்றியை ஈட்டவிடா முயற்சி ஆகியவைகள்தான். நமது நாட்டில் தலைவராகவே தோன்றி, தலைவராகவே ஒருவர் மறைந்தார் என்றால் அவர் தந்தை பெரியார் ஒருவர்தான்!

நமது பாசத்திற்குரிய பேரறிஞர் அண்ணா அவர்கள், 'நான் கண்ட ஒரே தலைவர், நான் கொண்ட ஒரே தலைவர் தந்தை பெரியார்தான்' என்றும், 'தந்தை பெரியார் ஒரு தனி மரமல்ல; அவர் ஒரு சகாப்தம்' என்றும் தந்தை பெரியாருக்குப் புகழாரம் சூட்டினார். ஏனென்றால் தமிழர்களுக்கு வழி காட்டியதோடு மட்டுமல்லாமல், தமிழகம் வளர்வதற்கான விஞ்ஞானச் சிந்தனைகளைத் தமிழ்நாட்டில் மன தைரியத்தோடு அறிமுகப்படுத்துவதற்கு அடிகோலியவர் தந்தை பெரியார்தான்.



## 'பெரியார்' என்று பட்டம் வழங்கிய பெண்கள் மாநாடு!

**''இந்தியாவில் இதுவரையும் தோன்றிய சீர்திருத்தத் தலைவர்கள் செய்ய இயலாமற்போன வேலைகளை இன்று நமது தலைவர் ஈ.வெ.ராமசாமி அவர்கள் செய்து வருவதாலும், தென்னாட்டில் அவருக்கு மேலாகவும், சமமாகவும் நினைப்பதற்கு வேறொருவருமில்லாமையாலும், அவர் பெயரைச் சொல்லிலும், எழுத்திலும் வழங்கும்போதெல்லாம் 'பெரியார்' என்ற சிறப்புப் பெயரையே வழங்குதல் வேண்டுமென இம் மாநாடு எல்லோரையும் கேட்டுக் கொள்கிறது''.**

**(13.11.1938 அன்று தமிழ்நாட்டுப் பெண்கள் மாநாடு சென்னை ஒற்றைவாடை நாடகக் கொட்டகையில், திருவாட்டி திருவரங்க நீலாம்பிகை அம்மையார் அவர்களின் தலைமையில் நடைபெற்றபோது நிறைவேற்றப்பட்ட தீர்மானம்).**

**— நன்றி: 'பெரியார் களஞ்சியம்'**



# டாக்டர் புரட்சித்தலைவி வனச்சோலைத் திட்டம்

கி. விசுவநாதன், இ.வ.ப.,
வனத்துறைத் தலைவர்



மனித சமுதாயத்தின் நல்வாழ்விற்கு மரங்களும் காடுகளும் மிகவும் அவசியமென்பதை நாம் அறிவோம். அன்றாடத் தேவைகளுக்கும் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் பலவிதமான பொருட்களை மரங்களிலிருந்து நாம் பெறுகின்றோம். இதைவிட, முக்கியமாக நாம் சுவாசிக்கும் காற்றிலுள்ள நச்சுத் தன்மையையும், தூசிகளையும் அகற்றி சுத்தமான காற்றைத் தாவரங்கள் நமக்கு அளித்து சுற்றுப்புறச் சூழலை மேம்படுத்துகிறது.

தட்பவெட்ப நிலையைச் சீராக்கி, மண் அரிப்பைத் தடுத்து, நீரோட்டத்தைச் சமப்படுத்தி, நில நீர் வளத்தையும் காப்பதில் மரங்கள் பெரும் பங்கை வகிக்கின்றன.

உள்ளூர் மழைப் பொழிவிற்கும் பெய்யும் மழையைச் சீராக்கித் தருவதிலும் மரங்கள் செயற்கரிய செயல்கள் புரிகின்றன. எல்லாவற்றுக்கும் மேலாக நம்முடைய உயிர் வாழ்வுக்குத் தேவையான பிராண வாயுவைத் தந்து மரங்கள் உயர்ந்து நிற்கின்றன. ஆனால், மக்கட் தொகை பெருகி, தேவைகளும் அதிகரித்து வருவதால் மரங்கள் வெட்டப்பட்டு வனங்கள் சீர் குலைந்து, நில வளம் குறைந்து வறட்சி பெருகி அவதிப்படுகிறோம். இதனைக் கருத்தில் கொண்டு தமிழக அரசு வனங்களை மேம்படுத்தவும் மர வளத்தைப்



பெருக்கவும் பலவித மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாட்டில் மழைக் காலத்தில் பொது மக்களுக்கு மரம் நடுவதன் அவசியத்தை வலியுறுத்துவதோடல்லாமல், அதற்கான நாற்றுக்களை வழங்கித் தேவையான தொழில் நுட்பத்தைப் பரப்புவதற்கு, மாண்புமிகு வனத்துறை அமைச்சர் ''டாக்டர் புரட்சித்தலைவி வனச் சோலைத் திட்டம்'' என்ற திட்டத்தை அறிவித்துள்ளார். இத்திட்டம் செப்டம்பர் திங்கள் ஒன்பதாம் நாளில் தொடங்கி, பேரறிஞர் அண்ணா பிறந்த தினமான செப்டம்பர் பதினைந்தாம் நாள் முடிய தமிழ்நாட்டில் உள்ள நகரங்களிலும், கிராமங்களிலும், பொது இடங்களிலும், கல்லூரி, பள்ளி ஆகிய இடங்களிலும் ஒருவார கால விழாவாகக் கொண்டாடப்படுகிறது. இத்தருணத்தில், இத்திட்டத்தின் கீழ் பயன் தரும் தேக்கு, புளி, புங்கம், வேம்பு உட்பட சுமார் 20 இலட்சம் மரக் கன்றுகள் வனத்துறையினரால் தமிழ்நாடு முழுவதும் நியாய விலையில் விநியோகிக்கப்படும்.

''மரப் பயிரும் பணப் பயிரே' என்ற கூற்றுக்கேற்ப மானாவாரி நிலங்களில் வருவாய் தரக் கூடிய மரக்கன்றுகளை நடுவதன் மூலம் சில ஆண்டுகளில் பன்மடங்கு இலாபம் பெறக்கூடிய வாய்ப்பு உள்ளது. எனவே வேளாண் பெருங்குடி மக்கள் இந்த அரிய வாய்ப்பினைப் பயன்படுத்தி மரப்பயிர்களைத் தங்கள் நிலங்களில் பயிரிடுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்கள்.

டாக்டர் புரட்சித்தலைவி வனச் சோலைத் திட்டத்தின் கீழ் வனக் கோட்டங்களில் பணியாற்றும் ஒவ்வொரு வனச்சரக அலுவலரும் சம்பந்தப்பட்ட வனச்சரகத்தில் 5000 மரக்கன்றுகள் நடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த விழா அந்தந்த வட்டாரங்களில் உள்ள சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசு உயர் அதிகாரிகள், மாவட்ட ஆட்சித்தலைவர்கள் பத்திரிகையாளர்களை அழைத்து சிறப்பாக நடைபெற உள்ளது.

பொதுமக்கள் தம்முடைய நல்வாழ்வுக்கு மட்டுமல்லாமல், வருங்காலச் சந்ததியினரின் நலத்தையும் கருத்திற் கொண்டு மரம் நட வேண்டும். பெருமளவில் எங்கெல்லாம் மரம் நட முடியுமோ அங்கெல்லாம் பலன் தரும் மரங்கள் நட முன் வர வேண்டும். நம்முடைய ஒவ்வொரு தேவையையும் பூர்த்தி செய்யக் கூடிய மர வகைகள் உள்ளன. விறகு, தடிமரம், கால்நடைத் தீவனம், பசுந்தாள் உரம் காகிதம், ரேயான் இழைகள் தோல் பதனிடடானின் எனப் பல்வேறு பொருட்களை மரங்கள் தரவல்லன.

மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களின் வனச்சோலைத் திட்டத்தின் கீழ், நாம் ஒவ்வொருவரும் பெருமளவில் மரம் நடுவோம்! நிரந்தரமான வளம் பெறுவோம்!

## பார்த்தோம் படித்தோம் :

### 'தமிழரசு' 'தமிழ் டைஜஸ்ட்' போல் வெளிவருகிறது!

'தமிழரசு' இதழ் தமிழ் டைஜஸ்ட் போல் வெளிவருகிறது. மகிழ்ச்சிக்குரியது.

—இரா. இராகவன்
ஸ்ரீரங்கம்.

★ மாணவர் பக்கம், பெரியவர்களுக்கும் பயன்படும்படி இருக்கிறது; பொதுவாகப் பக்கங்களை அதிகரிப்பது பற்றி யோசிக்கவும்.

- சு. பெரியசாமி
வெங்கமேடு, கரூர்.

★ மருத்துவப் பகுதியை வினா-விடை பகுதியாக்கி, என் போன்ற வாசகர்கள் குறைபாடுகளையும், பிரபல டாக்டர்கள் மூலம் தீர்க்கும் தங்களது நன்முயற்சி பெரிதும் போற்றத்தக்கது, தொடரட்டும்.

- ஸ்ரீநிவாஸ் பிரபு சென்னை-90.

(சௌந்தரபாண்டியனார் நூற்றாண்டு விழா குறித்து இக்கட்டுரை வெளியிடப்படுகிறது.)



மொழியைக் காத்து, நமக்கு வழி காட்டிய தலைவர்களுக்கு வீர வணக்கம் செலுத்துவது நமது பண்பாடு.

சமுதாய சீர்திருத்தங்களைத், தனது தலையாய நோக்கமாகக் கொண்டிருந்த நீதிக் கட்சியின், திராவிட இயக்கத்தின் சரித்திரத்திலும், முன்னணி வீரராகத் திகழ்ந்து, தனக்கென ஒரு நிரந்தர இடத்தைப் பெற்றவர், பெரியவர் திரு. டபிள்யூ. பி.ஏ. சௌந்திர பாண்டியனார் பிடத்தைப் பெற்றவர். சாதி வேற்றுமை ஒழியவும், தீண்டாமை அகலவும், பெண்கள் சம உரிமை பெறவும், இடைவிடாது பாடுபட்ட முற்போக்குச் சிந்தனையாளர் அவர். தந்தை பெரியார் அவர்களால், சுயமரியாதை இயக்கத்தின் அஸ்திவாரம் என்றே பாராட்டப்பட்டவர். 1929-ஆம் ஆண்டு, செங்கல்பட்டு நகரில் நடைபெற்ற, சுயமரியாதை இயக்கத்தின் முதல் மாநில மாநாட்டிற்குத் தலைமை ஏற்றவர்.

## தன்மான இயக்கத்தின் முன்னோடி

# சௌந்தர பாண்டியனார்

**- மாண்புமிகு முதல்வர்**

நாட்டின் விடுதலைக்கு வித்திட்டு, நாட்டிற்காகவும், மொழிக்காகவும், பாடுபட்ட நல்லோரை நாள் தோறும் நினைவு கூர்வது நமது கடமை. அந்த வகையில் தமிழகத்தில் சமுதாயத்தொண்டு ஆற்றி, சுயமரியாதைக்கு வித்திட்டு, தாய் ஆவார்.

அச்சம் அகற்றிய அண்ணல், சுயமரியாதைச் சுடரொளி, தன்னிகரில்லாச் சிங்கம், என்றெல்லாம் புகழப்படும் பெரியவர் சௌந்திர பாண்டியனார் அவர்கள், தமிழகத்தின் வரலாற்றில் அழியாத சிறப்

'விவேகம் துணைக்கு வராவிட்டால் வீரம் விலை போகாது' என்ற தத்துவத்திற்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர் 12 ஆண்டுகள் சட்டமன்ற மேலவை உறுப்பினராக பணி புரிந்தவர், பெரியவர் சௌந்தர பாண்டியனார் அவர்கள். வகுப்புரிமை காக்கவும், தாழ்த்தப்பட்டோர் நிலை உயரவும், அவர் ஆற்றிய ஆங்கில உரைகள் புகழ் பெற்றவை. சமுதாயக் கொடுமைகளால் அழுத்தப்பட்டு அடக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு, புறக்கணிக்கப்பட்ட மக்களுக்கு, புத்தெழுச்சியைத் தந்தவர், அவர் சட்டமன்ற உறுப்பினராகவும், சுயமரியாதை இயக்கத்தின் முன்னணி வீரராகவும், மக்கள் தொண்டாற்றிய பெரியவர்.

உள்ளாட்சி நிர்வாகத்திலும் பங்கேற்று, இராமநாதபுரம் மற்றும் மதுரை ஜில்லா போர்டு தலைவராகவும், சிறப்பாகப் பணி புரிந்தவர்.

தமிழும், தமிழரும், தமிழ்நாடும் மேன்மை பெற வேண்டும் என்ற தீவிர வேட்கை கொண்ட கொள்கைக் கோமானாகத் தன் வாழ்நாள் முழுவதும் திகழ்ந்தவர். 1938-ஆம் ஆண்டு, இந்தியை எதிர்த்து தொடங்கப்பட்ட முதல் மொழிப் போரில், முன்வரிசையில் நின்ற வீரர் அவர்.

## மாண்புமிகு முதல்வர் உதவி!

• **சென்னை**, லாயிட்ஸ் காலனியைச் சேர்ந்த செல்வி பானு என்கிற பாத்திமா, தனது இருதய அறுவைச் சிகிச்சைக்காக நிதியுதவி கேட்டிருந்தார். செல்வி பானு என்கிற பாத்திமாவின் மருத்துவச் சிகிச்சைக்காக ரூ.15,000 முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் வழங்க ஆணையிட்டுள்ளார்.

• **சேலம்** மாவட்டம் - அரிசிபாளையத்தைச் சேர்ந்த திரு. ராஜ்குமார் என்பவர் தனக்குச் சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டதைத் தொடர்ந்து மருத்துவச் செலவிற்கு உதவி கோரியிருந்தார். அவரது மனுவினைக் கனிவுடன் பரிசீலனை செய்த மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், அவருக்கு ரூ.5,000 முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க ஆணையிட்டார்.

# படமும் செய்தியும்



பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், ஈரோட்டில் உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். (15.9.93)

பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, சென்னை அண்ணா சாலையிலுள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். (15.9.93)



‘‘செக்கிழுத்த செம்மல்’ வ.உ. சிதம்பரனார் அவர்களின் பிறந்த நாளையொட்டி, சென்னைத் துறைமுக வளாகத்திலுள்ள அவரது திருவுருவச் சிலைக்கு, மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும், அமைச்சர் பெருமக்களும் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். (5.9.93)





சென்னை கலைவாணர் அரங்கில் கொண்டாடப்பட்ட ஆசிரியர் தினவிழாவில், மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு கே. பொன்னுசாமி அவர்கள் நல்லாசிரியர் விருது வழங்கிச் சிறப்பித்தார். கல்வித்துறைச் செயலாளர் திருமதி ஜெயந்தி, இ.ஆ.ப., உடன் உள்ளார். (5.9.93)



# அண்ணா என்னும் வரலாறு

— கவிஞர் கரு நாகராசன்

இமயம் மனிதஉருப் பெற்றதோ? - அது
  இனியதமிழ் ஆங்கிலத்தைக் கற்றதோ? - இங்கு
அமைந்த கொடுமைகளை அடியோடு வேரறுத்து
  சமதர்மப் பயிர்வளர தமிழாறாய் நடந்துவந்து
அறுவடையைக் கண்முன்னே கண்டதோ? - அது
  'அண்ணா' எனும் நாமம் கொண்டதோ?

பொங்குகடல் மனிதஉரு ஏற்றதோ? - அதன்
  புலமையின்முன் அறிவுலகம் தோற்றதோ? - தமிழ்ச்
சங்கமென வலம்வந்து தத்துவங்கள் பலதந்து
  சிங்கமெனத் தினம்முழங்கி தெருவெல்லாம் தமிழ்வளர்த்து
ஆட்சியையும் அன்புவழி வென்றதோ? - நம்
  அகங்களிலே தெய்வமென நின்றதோ?

பொன்வானம் கால்பதித்து வந்ததோ? - இந்த
  பூமிக்கு அறிவொளியைத் தந்ததோ? - இங்கு
தன்மானம் ஏதுமின்றித் தவித்தோர்க்கு உணர்வூட்டி
  சன்மானம் அன்புயென்ற சரித்திரத்தை நிலைநாட்டி
புத்துலகைப் படைத்துவைத்துச் சென்றதோ? - பெரியார்
  போதனைதான் வேதமிங்கு என்றதோ?

காலம் நமக்களித்த ஞானி - நாம்
  கரையேறத் துணைசெய்த தோணி - இந்த
ஞாலம் தொழுதேத்தும் நல்லறிஞர் அண்ணாவின்
  சீலமிகு பேர்சொன்னால் சிந்தையெல்லாம் தமிழ்மணக்கும்;
வாழ்க அவர் நாமமெனச் சொல்வோம் - அந்த
வரலாற்றுச் சுவட்டின்வழி செல்வோம்.



# தந்தை பெரியார்

மக்களிடம் உள்ள மூடப்பழக்கவழக்கங்கள் மாறவேண்டும் - மக்கள் பகுத்தறிவாளர்களாக மாறவேண்டும் என்பதற்காக அரும் பாடுபட்டவர் பெரியார்.

ஜப்பான் போன்ற நாடுகளில் 200 ஆண்டுகள் கழித்துத்தான் பகுத்தறிவுப் புரட்சியை உண்டாக்க முடிந்தது. ஆனால், பெரியார் 20 ஆண்டுகளிலேயே பகுத்தறிவுப் புரட்சியை ஏற் படுத்தித் தந்திருக்கிறார்.

இது பெரியதொரு சாதனையாகும்.

எனக்கு அவரோடு - பெரியாரோடு தொடர்பு ஏற்பட்டது 1935-ஆம் ஆண்டில்தான்.

அப்போது நான் பி.ஏ., (ஆனர்சு) தேர்வு எழுதியிருந்தேன். தேர்வு முடியாத நேரம் அது.

அப்போது கோவைக்கு அடுத்த திருப்பூரில் ஒரு வாலிபர் மாநாடு நடந்தது. அங்கேதான் பெரி யாரும் நானும் முதன் முதலில் சந்தித்துக் கொண் டோம்.

அவர்மீது எனக்குப் பற்றும் பாசமும் ஏற் பட்டன. அவருடைய சீர்திருத்த கருத்துக்கள் எனக் குப் பெரிதும் பிடித்தன.

பெரியார் என்னைப் பார்த்து, "என்ன செய்கிறாய்"? என்று கேட்டார்.

"படிக்கிறேன்; பரிட்சை (தேர்வு) எழுதியிருக் கிறேன்!" என்றேன்.

"உத்தியோகம் பார்க்கப் போகிறாயா?" என்றார்.

"இல்லை! உத்தியோகம் பார்க்க விருப்பம் இல்லை; பொதுவாழ்வில் ஈடுபட விருப்பம்!" என்று பதிலளித்தேன்.

அன்று முதல் அவர் என் தலைவரானார். நான் அவருக்குச் 'சுவிகாரப் புத்திரனாக' (வளர்ப்பு வழித்தோன்றலாக) ஆகி விட்டேன்.

14 ஆண்டுகள் அவரோடு பழகினேன்.

இத்தனை ஆண்டுகளிலும்,

நான் அறிந்த தலைவர், தெரிந்த தலைவர், பார்த்த தலைவர் இவர் ஒருவர்தான்!

—பேரறிஞர் அண்ணா




### புதியதோர் உலகு செய்வோம்

**ஆசிரியர்: டாக்டர் மா.பா. குருசாமி**

**வெளியீடு:**

காந்திய இல்க்கியச் சங்கம்,
மதுரை-625 020.

பக்கம்:82 விலை:ரூ.9/-

'எல்லாரும் ஒன்று' என்ற மனநிலை மலர வேண்டும் என்கிற வேட்கை இன்று பலரிடம் பரவலாக இருக்கின்றது. அந்த வேட்கையைத் தணிக்கும் வகையிலே அண்ணல் காந்தியடிகளின் கருத்துரைகள் இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன. அவரது அற்புதமான வாசகங்கள் நம் வாழ்க்கை வளமுடன் திகழ வழிகோலும் என்பதை அழகுறச் சித்திரிக்கிறது இந்நூல்.

### சிறுவர்க்கு ஏற்ற சிறந்த பாடல்கள்

**ஆசிரியர்: புலவர் அண்ணாமலை**

**வெளியீடு:**

பம்மி பதிப்பகம்
32, வெங்கட்டரங்கம் பிள்ளை தெரு,
சென்னை-5.

பக்கம்:64 விலை:ரூ.10/-

சிறுவர்களை மகிழ்விப்பது கதைகள் மட்டுமல்ல, பாடல்களும் கூடத்தான் என்பதை மெய்ப்பிக்கும் வகையில் இந்நூலில் இடம் பெற்றுள்ள பாடல்கள் அமைந்துள்ளன. எல்லாப் பாடல்களுமே எளிமை, இனிமை.

### இந்தியத் தூண்கள்

**ஆசிரியர்: கவிஞர் கு. காண்டீபன்**

**வெளியீடு:**

கோமளா பதிப்பகம்
2/198, வெங்கடேசபுரம்,
வண்டலூர், சென்னை-48.

பக்கம்:88 விலை:ரூ.15/-

நாளைய தலைமுறைகளான இன்றைய குழந்தைகளுக்கான எளிமையான பாடல்கள் இத்தொகுப்பை அலங்கரிக்கின்றன. மாணவ மணிகள் படித்துப் பயன் பெறலாம்.

### நெஞ்சில் நிலைத்த கவிதைகள்

**ஆசிரியர்: பெ.கி. பிரபாகரன்**

**வெளியீடு:**

எழில் பதிப்பகம்,
ஏபி 1449 முதல்பிரிவு
இரண்டாவது தெரு,
கே.கே. நகர், சென்னை-600 078.

பக்கம்:92 விலை:ரூ.10/-

குறள், அகம், புறம், கலித்தொகை, குறுந்தொகை, பட்டினப்பாலை, கம்ப ராமாயணம் முதலான கவிதைகளின் கருத்துக்களை இதமாக, பதமாக இதயங்களில் விதைக்கிறார் கவிஞர். நல்ல தொகுப்பு.

### அணையா விளக்கு

**ஆசிரியர்:**

செங்காடு ஆ. கிருஷ்ணமூர்த்தி,

**வெளியீடு:**

முத்து பதிப்பகம்,
7, வில்லியம் லே-அவுட்
இரண்டாவது தெரு,
கே.கே. ரோடு, விழுப்புரம்-605 602.

பக்கம்:128 விலை:ரூ.20/-

'வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்' என்று பாடிய, இராமலிங்க வள்ளலாரின் வாழ்க்கையை, படிப்போரின் கண்முன் கொண்டுவரும் வகையிலே நாடகமாக்கியுள்ளார் ஆசிரியர். படிக்கவும் நடிக்கவும் ஏற்றது.

### விபத்துக்களுக்கு முதல் உதவிச் சிகிச்சை

**ஆசிரியர்: சூரியநாத்**

**வெளியீடு:**

தமிழ்மணி பதிப்பகம்
107-ஏ, பெரியார் பாதை (மேற்கு),
சென்னை-94.

பக்கம்:112 விலை:ரூ.15/-

விபத்துக்களின்போது, உயிரைக் காப்பாற்ற முதலில் தேவைப்படுவது, முதல் உதவிச் சிகிச்சை அதை விளக்குகிறது இந்நூல். தீ, வெட்டுக்காயம், இரத்தக் கசிவு, எலும்பு முறிவு முதலான வற்றுக்கான முதல் உதவிச் சிகிச்சைகள் குறித்து இந்நூலைப் படித்துத் தெரிந்து கொள்ளலாம்.

### சைவம் அசைவம் சமைத்துப்பார்

**ஆசிரியர்: வசந்தி அம்மாள்**

**வெளியீடு:**

மயிலவன் பதிப்பகம்
92, கங்கையம்மன் கோயில் தெரு,
சென்னை-26.

பக்கம்:128 விலை:ரூ.18/-

சுவர் இருந்தால்தான் சித்திரம் எழுத முடியும்? அதைப்போல, உடல் நலத்துடன் இருந்தால்தான், செயலாற்ற முடியும். உடல் நலத்துடன் இருக்க உணவு மிகமிக அவசியம். அவரவர்களுக்குப் பிடித்த சைவ-அசைவ உணவு வகைகள் குறித்த ஏராளமான குறிப்புகள் உள்ளன.

### தெளிவற்ற மனமும் தெளிவுற்ற மனமும்

**ஆசிரியர்: மயிலைத் தொண்டன்**

**வெளியீடு:**

தமிழ்மணி பதிப்பகம்
107-ஏ, பெரியார் பாதை (மேற்கு)
சென்னை-94.

பக்கம்:112 விலை:ரூ.15/-

'உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்' என்றார் திருமூலர். எனவே, உள்ளத்தை உண்மையில் தூய்மையாக வைத்திருக்க வேண்டும். அதாவது தெளிவுற்ற மனமாக இருந்திட வேண்டும். அதற்கு என்ன வழி? என்பதைத் தக்க மேற்கோள்களுடன் கூறுகிறது இந்நூல். படித்துப் பயன் பெறலாம்.

### ரஸ்ஸலின் நம்மை மேம்படுத்தும் எண்ணங்கள்

**ஆசிரியர்: சோ. சேசாசலம்**

**வெளியீடு: பாரதி நிலையம்**

108, உஸ்மான் சாலை
சென்னை-17.

பக்கம்:124 விலை:ரூ.16/-

தத்துவமேதை, சிந்தனையாளர் என்று உலகமே போற்றிப் புகழும் பெர்ட்ராண்ட் ரஸ்ஸலின் கருத்துரைகள் காலகாலத்துக்கும் நிற்பவை. சமுதாய வளர்ச்சிக்கு அவரது கருத்துரைகள் அடித்தளமாக அமையும் என்பதை இந்நூலைப் படித்தால் உணர்ந்து கொள்ளலாம். பயனுள்ள நூல்.

# சுற்றுலாப் பயணிகளின் சொர்க்கபூமி

தென்பாண்டி மண்டலத்தில் நெல்லைச் சீமை மிகவும் பழமை வாய்ந்த வரலாற்றுக் கால உணர்வு களைப் பிரதிபலிக்கின்ற பூமியாக விளங்குகிறது.

காண்போர் கண்களை வியக்க வைக்கின்ற இயற்கை எழில்மிக்க கோடை வாழ் தலங்களும், எல் லோரா, அஜந்தாவை நினைவூட்டு கின்ற சிற்ப வேலைப்பாடுமிக்க அழகிய கற்கோவில்களும், மண் டபங்களும் நிறைந்து காணப்படு கின்றன.

ஐந்திணை நிலங்களாகக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகியவை ஒருங்கமையப் பெற்ற ஒப்பு உயர்வற்ற ஒரே மாவட்டமாக இது திகழ்கிறது. இயற்கை எழில் கொஞ்சும் வானளாவிய மலை களும், மனதைக் கவர்கின்ற தெளிந்த நீரோடைகளும், பசுமையான புல் வெளிகளும், பாலைவனத்தை நினை வூட்டுகின்ற மணல் திட்டுகளும் இயற்கை அன்னை தந்த வரப்பிர சாதங்களாகக் காட்சியளிக்கின்றன.

வனங்களிலே துள்ளித் திரிகின்ற புள்ளிமான்களும் வீர சாகசம் புரிகின்ற யானைகளும், புலிகளும், விளையாட்டு காட்டுகின்ற மந்தி இனங்களும் ஒன்றாகக் கொஞ்சிக் குலாவுகின்றன. அழகிய கடற்கரை யும் இம்மாவட்டத்தில் காணப்படு வதால், இது சுற்றுலாப் பயணி களின் சொர்க்க பூமியாக விளங்கு வதில் ஐயமில்லை!

### வழிபாட்டுத் தலங்கள்

இம்மாவட்டத்தில் இந்து, இஸ்லா மிய, கிறித்துவப் பேராலயங்கள் நிறைந்து காணப்படுகின்றன. நெல் லையில் அமைந்துள்ள நெல்லை யப்பர் கோவிலிலுள்ள அர்ச்சுனன், பகடை ராஜா போன்ற சிற்பங்கள், உயிரோட்டமாக விளங்குகின்றன. இங்குள்ள இசைத் தூண்கள் முக்கியமானவை. கிருஷ்ணாபுரம் விஷ்ணு கோவில் ரதி-மன்மதன் சிலைகள் இன்னும் உயிரோட்டமாக நின்று மொழி பேசுகின்றன. தென் காசி காசி விஸ்வநாதர் கோவில் கல்தூண்கள் தட்டினால் இசை பாடும், கண்டாலே கவிபாடும், திருக்குரங்குடி விஷ்ணுகோயில் சிற்பங்கள் ஆயகலை அறுபத்தி நான்கும் தத்துரூபமாகச் செதுக்கப் பட்டு இன்றும் அழியா ஓவியமாகக் காட்சி தருகின்றன. இவை இந்து அறநிலையத் துறையினரால் பேணிப் பாதுகாக்கப்பட்டு வருகின்றது. அது போன்று, இஸ்லாமிய மக்களுக்கு பொட்டல்புதூர் பள்ளி, ஆத்தங் கரை பள்ளி வாசல்களும் கிறித்து மக்களுக்குக் கதிரல் பேராலயமும், உவரி மாதாகோயிலும் சிறந்து விளங்குகின்றது. இம்மாவட்டத் திற்கு வருகின்ற சுற்றுலாப் பயணிகள் இவைகளைக் காணத் தவறுவதில்லை.

### இயற்கை வனப்பு

திருநெல்வேலி மாவட்டத்தின் மேற்கு எல்லையின் அரணாகத் திகழ்கின்ற பொதிகைமலை இயற்கை கொஞ்சும் மலையாக விளங்கு கின்றது. இங்கு சுற்றுலாப் பயணி களை ஈர்க்கின்ற வகையில் உலகத் தில் புகழ் பெற்று விளங்குகின்ற 'நயஹாரா' நீர் வீழ்ச்சியை நினைவு கூரத்தக்க வகையில் திருக்குற்றாலம் அமைந்துள்ளது. பருவ காலங்களில் பல்வேறு அருவிகளில் குளிப்பதற்குச் சுற்றுலாப் பயணிகள் குவிந்த வண்ணம் இருக்கிறார்கள்.

குற்றால மலை அருவிகள் பாலாறாகப் பெருக்கெடுத்து தேனரு வியாகப் பொழிந்து, செண்பகா தேவி யாக மலர்ந்து, பேரருவியாக பெருமையோடு வந்து, சிற்றருவி யாகச் சிதறி விழுகின்ற காட்சி காண்போரைக் களிப்புறச் செய் கிறது. சுற்றுலாத் துறையினராலும், பொதுப்பணித்துறையினராலும், பல் வேறு வசதிகள் செய்யப்பெற்று பாதுகாக்கப்பட்டு வருகிறது. ஆண்டு தோறும் அதன் வளர்ச்சித் திட் டங்கள் தீட்டப்பட்டு மாவட்ட ஆட் சித் தலைவரால் கண்காணிக்கப் பட்டு வருகின்றது.

### வனவிலங்குச் சரணாலயங்கள்

இம்மாவட்டத்தில் வன விலங்கு களைப் பாதுகாக்கின்ற வகையிலும், முண்டந்துறை வனவிலங்குச் சரணா லயமும், களக்காடு வனவிலங்குச் சரணாலயமும் வனத்துறையினரால் பேணிப் பாதுகாக்கப்பட்டு வரு கின்றன. இவ்விரு சரணாலயங்களி லும் புள்ளிமான்களும், சிங்கவால் குரங்குகளும், யானைகளும், புலி களும், காட்டு மிருகங்களும் நிறை யவே உள்ளன. முண்டந்துறையில் புலிகள் நடமாடுவதால் அகில இந்திய அளவிலான சரணாலயமாக விரிவுபடுத்த அரசு திட்டங்களைத் தீட்டியுள்ளது.

மேலும், வெளிநாட்டிலிருந்து பருவ காலங்களில் தென்னிந்தியாவை நோக்கி வருகின்ற பறவை இனங்கள் பாளையங்கோட்டை அருகே உள்ள அரியகுளத்திலும், நாங்குநேரி அருகே உள்ள கூந்தன்குளத்திலும், சங்கமிப் பதால் அங்கு பறவைகள் புகலிடம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இங்கு செங்கால்நாரை, நாரை, இரும்பு உண்ணி போன்ற வெளிநாட்டுப் பறவைகள் கோடை காலங்களில் இங்குள்ள நீர்த்தடாகங்களில் குவிந்த வண்ணம் உள்ளன. இப்பறவை இனங்களைப் பாதுகாக்கின்ற நோக் கோடு தாமிரபரணி தண்ணீர் இப் பகுதிகளுக்கு வழங்கப்படுகிறது. இப் பகுதி வாழ் மக்களும் சுற்றுலாப் பயணிகளும் இதனைக் கண்டு இன் புறுகின்றனர்.

### தாமிரபரணி முகத்துவாரம்

நெல்லை மாவட்டத்தில் மேற்குப் பகுதியில் இன்னொரு இயற்கை



## பெண்ணுரிமை

• ஒவ்வொரு பெண்ணும், தானும் ஏதாவது சம்பாதிக்கும் தகுதி பெறத்தக்கபடி ஒரு தொழில் கற்றிருக்க வேண்டும். குறைந்தது தன் வயிற்றுக்குப் போதுமான அளவாவது சம்பாதிக்கத் தகுந்த திறமை இருந்தால், எந்தக் கணவனும் அடிமையாய் நடத்தமாட்டான்.

• நமது பெண்கள், தங்களைப் பிறவி அடிமை என்று நினைத்துக் கொண்டிருப்பதை மாற்றிக் கொள்ள வேண்டும்.

• பெண்களுக்குப் பகுத்தறிவுக் கல்வியும், உலக நடப்புக் கல்வியும் தாராளமாகக் கொடுத்து, மூடநம்பிக்கை, பயம் ஆகியவற்றை ஊட்டக்கூடிய கதைகளையோ, சாத்திரங்களையோ, இலக்கியங்களையோ காணவும் கேட்கவும் சிறிதும் இடமில்லாமல் செய்ய வேண்டும்.

— தந்தை பெரியார்



வனப்பு பகுதியாகத் தாமிரபரணி முகத்துவாரத்தில் 'பாபநாசம்' அமையப்பெற்றுள்ளது. இது தொல்காப்பியத்தை நினைவூட்டுகின்ற அகஸ்தியம் வாழ்ந்த இடம் ஆகும். இங்கு அகஸ்தியம் அருவி பெருமையோடு காட்சி தருகிறது.

சிவபெருமானின் திருக்கல்யாணம் அமையப்பெற்ற காட்சியும், கல்யாண தீர்த்தமும், பாணர் தீர்த்தமும் இங்கு வரலாற்று உண்மைகளை நினைவூட்டுகின்றன. இங்கு ஆண்டு தோறும் ஏராளமான உல்லாசப் பயணிகளும், பக்த கோடிகளும் வருகை தருகின்றார்கள். வனத்துறையும், சுற்றுலாத்துறையும் பொதுப் பணித்துறையும் இங்கு அக்கறை செலுத்தி இவ்விடங்களை வளர்ச்சி அடையச் செய்வதோடு பாதுகாத்தும் வருகிறார்கள்.

**நீர்த்தேக்கங்களும் மாவட்டச் சுற்றுலா மையங்களும்**

மேற்குமலைத் தொடர்ச்சியில் உற்பத்தியாகி, கிழக்கு நோக்கி வருகின்ற ஆறுகளின் குறுக்கே மணிமுத்தாறு அணைக்கட்டு பாபநாசம் அணைக்கட்டு, கடனாநதி அணைக்கட்டு, குண்டாறு அணைக்கட்டு போன்று நீர்த்தேக்கங்கள் நிறுவப்பெற்று இயற்கையையும் மிஞ்சுகின்ற அளவிற்குப் பூங்காக்களையும் நந்தவனங்களையும் உருவாக்கி, மாவட்டச் சுற்றுலாத் தலங்களாகக் காட்சி அளிக்கின்றன. இவைகள் பொதுப் பணித்துறையினரால் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இப்பகுதிகளுக்கு இம்மாவட்ட மக்களும், சுற்றுலாப் பயணிகளும், அண்டை மாவட்டத்தினரும் கண்டு களிக்கின்றனர்.

**எழில்கொஞ்சும் கடற்கரை**

முக்கடலும் சங்கமம் ஆகும். குமரி முனைக்கருகாமையில், இம்மாவட்டத்தில் தெற்கு எல்லையாக உவரிக் கடற்கரை சிறந்து விளங்குகின்றது. இங்கு ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்றனர். இம்மாவட்டத்தில் இக்கடற்கரை நீண்டு, விரிந்த மணற்பரப்பைக் கொண்டு விளங்குவதோடு, பல்வேறு பிரிவினர் வந்து செல்கின்ற அளவில் மாதாகோவிலும், இந்துக்கோவிலும் இணைந்து அமையப் பெற்றுள்ளது.

திருநெல்வேலி மாவட்டத்திற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் இம்மாவட்டத்திலுள்ள கைவினைப் பொருட்களைக் கண்டு வியப்புறுகின்றனர். விஸ்வநாதபுரத்திலுள்ள பிரம்பு மற்றும் மூங்கில் தொழிற்கூடமும், பத்தமடைப் பாய் உற்பத்திக்கூடமும், தேன்பொத்தை மண்பாண்டத் தொழிற்கூடமும், இன்னும் கைவினை சிற்ப வேலைகளை நினைவுகூருகின்றன. இவை அரசால் ஆதரிக்கப்பட்டு வளர்க்கப்படுகின்றன.

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், சுற்றுலாப் பயணிகள் கண்டு ரசிக்கத்தக்க வகையில் இயற்கை வளமும், வரலாற்றுக் கால நினைவுச் சின்னங்களும், பண்டைய கலாச்சாரங்களையும், புராணகாலக் கோயில்களையும் கொண்டு விளங்குகிறது என்பதில் ஐயமில்லை.



# வள்ளுவர் கூறும் பண்புடைமை

— டாக்டர் அரங்க. இராமலிங்கம்
தமிழ்த் துறை
அஞ்சல்வழிக்கல்வி நிறுவனம்
சென்னைப் பல்கலைக்கழகம்

இலக்கிய விருந்து

அகச் செம்மையைப் பண்பு எனவும் புறச் செம்மையை நாகரிகம் எனவும் கூறலாம். மனம் பண்படப் பண்பட அகம் தூய்மையாகும். அகத் தூய்மையே புறவாழ்வில் நாகரிக ஒழுகுவாறுகளுக்கு வித்தாக அமைகிறது. எனவே, பண்புடைமை எனும் அகச் செம்மையே புறச் செம்மையாகிய நாகரிக வாழ்விற்கு அடிப்படை. இதனைக் குறிப்பாக,

''பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அதுஇன்றேல்
மண்புக்கு மாய்வது மண்'' ...(996)

எனக் குறிப்பிடுகிறார் வள்ளுவர். பண்பு உடையவர்கள் வாழ்வதினாலேயே உலகம் இயங்குகிறது. அஃது இல்லையானால் மண்ணில் புகுந்து அழிந்து போகும். நல்ல ஆடவர்கள் பண்போடு வாழ்கிற பொழுதுதான் நாடும் நாடாக இருக்கும். இதனை,

''நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே'' ...(புறம்: 187)

எனக் குறிப்பிடுகிறார் ஒளவையார்.

அரம்போல் கூர்மையான அறிவு பெற்றிருந்தாலும் மக்களுக்குரிய பண்பினைப் பெறாதவர் ஓரறிவுயிராகிய மரத்தைப் போன்றவரே ஆவர்,

''அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண்பு இல்லா தவர்'' ...(997)

என்கிறார் திருவள்ளுவர். பலரும் உடம்பால் மக்கள் போல் பார்வைக்குத் தெரிகின்றனர். இவ்வாறு உடம்பின் ஒப்புமையை வைத்து மனிதரை மனிதராகக் கருதக் கூடாது; அவரவரின் பண்பை வைத்தே அவர் மனிதரா! இல்லையா என்பதை அறிய வேண்டும் என்கிறார் திருவள்ளுவர்.

''உறுப்பொத்தல் மக்களொப்பு அன்றால் வெறுத்தக்க
பண்பொத்தல் ஒப்பதாம் ஒப்பு'' ...(993)

பண்பு இல்லாத மனிதனை மனிதனாகத் திருவள்ளுவர் கருதவில்லை. இப்படிப்பட்ட மனிதனிடம் இருக்கும் செல்வம் எப்படி பிறருக்குப் பயன்படும்? பண்பில்லாதவனிடம் இருக்கும் செல்வம் சமுதாயத்தில் இருக்கும் பிற வளங்களையும் அழித்துவிடும்.

''பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்
கலந்தமை யால்திரிந் தற்று'' ...(1000)

எனக் குறிப்பாகப் புலப்படுத்துகிறார்.

இவ்வளவு சிறப்புக்கும், பெருமைக்கும் உரிய பண்பு உடைமையை நாம் எப்படிப் பெறுவது? இதற்கு ஒரு எளிய வழியைக் காட்டுகிறார் திருவள்ளுவர். யாரிடத்திலும் மிகப் பணிவோடும் எளிய தன்மையோடும் இருந்தால் எளிதாகப் பெறலாம்.

''எண்பதத்தால் எய்தல் எளிதென்ப யார்மாட்டும்
பண்புடைமை என்னும் வழக்கு'' ...(991)

என்கிறார் வள்ளுவர். பண்புடைமை எனும் பெறற்கரிய பெருஞ்செல்வத்தைப் பெறுவதற்கு எளிமையே சிறந்த வழி என்பதை மிக எளிமையாக உணர்த்தியுள்ளார்.

''நாகரிகப் பண்பைச் சுட்ட வந்த திருவள்ளுவர்,

''பெயக்கண்டும் நஞ்சுண்டு அமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்'' ...(580)

என்கிறார். இதனையே பழந்தமிழ் இலக்கியமான நற்றிணை

''முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின்
நஞ்சும் உண்பர் நனி நாகரிகர்''

எனக் குறிப்பிடுகிறது. சமுதாய வாழ்விற்குச் சொல்லப்பட்ட நெறிகளாக இவை திகழ்கின்றன.

நமக்கு வேண்டியவர்கள் நஞ்சினைக் கொடுத்தாலும் அதனை அமைதியாக உண்டு அமர்வதுதான் நாகரிகம் என்பதை ஏற்றுக்கொள்ள இயலுமா? இப்படி பொருள் கூறினால் இன்றைய இளைஞர் உலகம் ஏற்றுக் கொள்ளுமா? நஞ்சை உண்ணுமாறு சான்றோரும் கூறியிருப்பார்களா? எனவே இக்கருத்திற்கு வேறு பொருள் இருக்க வேண்டும். இக் கருத்திற்கு இரண்டு வகையாகப் பொருள் கொள்ளலாம்.

# 'வைக்கம் வீரர்!'



நாயக்கர் பேச்சு மழையாகும்; கன மழையாகும்; கல் மழையாகும்; மழை மூன்று மணி நேரம் - நான்கு மணி நேரம் பொழியும்.

வைக்கத்தில் (1924) தீண்டாமை ஒழிப்புப் போராட்டம் எழுந்தது. நாயக்கர் அங்கே சென்று சத்தியாக்கிரகஞ் செய்தார். திருவாங்கூர் அரசாங்கம் அவரைச் சிறைப்படுத்தியது. அப்பொழுது யான் 'வைக்கம் வீரர்' என்ற தலைப்பீந்து, பெரியாரின் தியாகத்தை வியந்து வியந்து 'நவசக்தி'யில் எழுதுவேன். 'வைக்கம் வீரர்' என்பது பெரியாருக்கொரு பட்டமாகவே வழங்கலாயிற்று.

இராமசாமிப் பெரியார், ஈரோட்டில் பிறந்து வளர்ந்தவர். அவர் தம் புகழோ, தென்னாட்டிலும், வடநாட்டிலும், பிற நாடுகளிலும் மண்டிக் கிடக்கின்றது! காரணம் என்ன? தோழர் ஈ.வெ.ரா.வின் உண்மையும், வாய்மையும், மெய்மையுஞ் செறிந்த அறத்தொண்டாகும்.

ஈ.வெ.ரா.விடம் ஒருவித இயற்கைக்கூறு அமைந்துள்ளது. அதனின்றும் அவரது தொண்டு கனிந்தது அஃதென்னை? அஃது அகவுணர்வு வளர்ந்து செல்லும் பேறு. இப்பேறு பலர்க்கு வாய்ப்பதில்லை; மிகச் சிலர்க்கே வாய்க்கும்.

உரிமைவேட்கை, அஞ்சாமை முதலியன ஈ.வெ.ரா.வின் தோற்றத்திலேயே பொலிதல் வெள்ளிடை மலை.

''...தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன்'' இது பெரியாருக்குத்தான் பொருந்தும்.

— தமிழ்த்தென்றல் திரு.வி.க.

1. நமக்கு வேண்டியவர்கள் நஞ்சு போன்ற கொடிய செயலை நம் கண் முன்னே செய்தபோதும் (அஃது சொல்லால் சுட்டாலும் அல்லது செயலால் இழிவு படுத்தினாலும் எப்படியிருப்பினும்) அதனை அமைதியாகப் பொறுத்துக் கொண்டு இருத்தலே நாகரிகம்.

2. நஞ்சு என்ற சொல்லுக்கு மிகை, ஒவ்வாமை என்ற இரு பொருளைக் கூறுவர் வாழ்வியற் புலவர் தவத்திரு தேமொழியார் அவர்கள். நமக்கு வேண்டியவர் வீட்டில் நாம் விருந்துண்ணச் செல்கிறோம், அவர்கள் அன்பின் மிகுதியால் மிகுதியாக உணவினை உண்ணச் செய்கிறார்கள். நம்மால் முடியவில்லை என்றாலும் அன்பிற்காக உடன்பட்டு மிகையாக உண்டு துன்பப்படுகிறோம். அது போலவே நமக்குச் சில உணவுப் பொருள்கள் ஒவ்வாமையாக இருக்கும். சிலருக்குக் கத்தரிக்காய் ஒத்துக்கொள்ளாது. விருந்துக்காகச் சென்ற இடத்தில் உறவினர்கள் அன்போடு நமக்கு ஒவ்வாத உணவை அளிக்கின்ற போது நமக்கு ஒத்துக்கொள்ளாது எனத் தெரிந்திருந்தாலும் அதனை உண்டு அமைதியாக வந்து விடுகிறோம்.

இவ்வாறு மிகை, ஒவ்வாமை என்ற இரு நிலைகளில் நாகரிகம் கருதி உண்டு அமைவதையே திருக்குறளும் நற்றிணையும் குறிப்பிடுகின்றன எனக் கொள்வதில் தவறில்லை. இந்த நாகரிகப் பண்பு உள்ளச் செம்மையாகிய பண்புடையவரிடத்திலே தான் அமையும். இதனைக் கலித்தொகை,

''பண்பெனப் படுவது பாடறிந்து ஒழுகுதல்''

எனக் குறிப்படுகிறது.

அகவாழ்விற்கும் புறவாழ்விற்கும் அடித்தளமாக அமைகின்ற பண்புடைமையை முயற்சியின்வழி பெறுவோம். நல்லேர் உழவனொருவன் நாள்தோறும் நிலத்தைக் கண்காணித்துக் களை எடுத்து, உழுது பண்படுத்துவதுபோல நாமும் நம் மனம் எனும் நிலத்தை நாள்தோறும் உள்நோக்கிக் கவனித்து, தீய எண்ணங்களாகிய களையினைக் களைந்து பயன்நோக்காது செய்யும் தொண்டினால் உழுது நல் எண்ணங்களை வித்திட்டுப் பண்படுத்துவோமாக!



# நாட்டு நலப்பணியில் நற்றொண்டு!

திருநெல்வேலி-கட்டபொம்மன்-மாவட்டத்திலுள்ள மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக் கழகத்தின் நாட்டு நலப்பணித் திட்டத்தை (என்.எஸ்.எஸ்.) 1992-93-ஆம் ஆண்டில் பல சிறப்பு முகாம்களை நடத்தி, பலரும் பாராட்டும் வகையில் தொண்டாற்றியுள்ளது. 1992 ஏப்ரல், மே திங்களில் மாவட்ட அளவில் கலாச்சார நிகழ்ச்சிகளின் மூலம் மக்களுக்குக் கல்வியின் அவசியத்தையும் அருமையையும், போதைப் பொருட்களின் தீமைகளையும், வரதட்சணைக் கொடுமைகளையும் விளக்கிக் கூறியது.

1992 ஆகஸ்ட் திங்களில் 'வெள்ளையனே வெளியேறு' தினவிழா, விடுதலை நாள் விழா, சத்பவான நாள் ஆகியவை சிறப்பாகக் கொண்டாடப்பட்டன.

ஆகஸ்ட், செப்டம்பர் திங்கள்களில், இரத்த வகைக் கண்டுபிடிக்கும் முகாம்களை நடத்தி அடையாளச் சீட்டுகள் வழங்கப்பட்டன. நாடகக் கலை மூலம் சமுதாய விழிப்புணர்ச்சியும், நாட்டு ஒற்றுமையும் வலியுறுத்தப்பட்டன.

மகாகவி பாரதியார் பிறந்த நாளான செப்டம்பர் திங்கள் 11-ஆம் நாளன்று கவிதை, கட்டுரை சுவரொட்டிப் போட்டிகளின் மூலம், பாரதியின் சமுதாயக் கொள்கைகள் வலியுறுத்தப்பட்டன.

தமிழகத்தின் தென் மாவட்டங்கள் 1992 அக்டோபர் நவம்பர் திங்களில் புயலால் மிகவும் பாதிக்கப்பட்டபோது, நிவாரணப் பணிகளில் என்.எஸ்.எஸ். தொண்டர்கள் தீவிரமாக ஈடுபட்டு, மக்களால் மறக்க முடியாத சேவை புரிந்தனர். என்.எஸ்.எஸ். பிரிவினர், நிதிவசூல் செய்து, பல்கலைக்கழகத் துணை-வேந்தர் மூலம் மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் ரூ.50,000 வழங்கினார்.

நாற்பது இளைஞர்களைக் கொண்டதொரு இசைக்குழு அமைக்கப்பட்டு, தேசிய ஒற்றுமைக்கும், மகளிர் முன்னேற்றத்திற்கும் அரும்பாடுபட்டு வருகின்றது.

28.1.93-ஆம் நாளன்று சமுதாய நல்லிணக்க நாள் கொண்டாடப்பட்டது. அனைத்துக் கல்லூரிகளின் என்.எஸ்.எஸ். தொண்டர்கள் பெரியதொரு ஊர்வலத்தை நடத்திக் காண்பித்தனர். ஊர்வலத்தைத் தொடர்ந்து நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தவத்திரு குன்றக்குடி அடிகளாரும், பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் வி. வசந்திதேவி அவர்களும், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு ஆர்.வேலு அவர்களும், பங்கேற்றுச் சிறப்புரையாற்றினார்கள்.

என்.எஸ்.எஸ். தொண்டர்கள் இரத்த தான முகாம்கள் மூன்று மாவட்டங்களில் வெற்றிகரமாக நடத்திக் காட்டினர். தேசிய அளவிலான மூன்று தேசிய ஒருங்கிணைப்பு முகாம்களையும் இத்தொண்டர்கள் நடத்திக் காட்டினர்.

மாநில அளவில் இளைஞர் விழா நடத்த என்.எஸ்.எஸ்.க்கு, தமிழ்நாடு அரசு ரூ.1,30,000 ஒதுக்கியுள்ளது. ஆனைமலையில் மலையேறும் பயிற்சி முகாம் நடத்தப்பட்டது. இதற்காக மத்திய அரசு ரூ.25,000 ஒதுக்கியது.

சென்னையில் இவ்வாண்டு பிப்ரவரியில் நடைபெற்ற 'எய்ட்ஸின் தற்போதைய நிலைமை' பற்றிய இந்திய-இங்கிலாந்து செயலரங்கில் திட்ட ஒருங்கிணைப்பாளரும், மூன்று என்.எஸ்.எஸ். திட்ட அலுவலர்களும் கலந்துகொண்டனர்.

26.4.93 முதல் 1.5.93 முடிய திருநெல்வேலியில் என்.எஸ்.எஸ். திட்ட அலுவலர்களுக்கும், ஆர்வமுள்ள பொதுமக்களுக்கும் திரைப் படத் திறனாய்வுப் பயிற்சி முகாம் நடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

— டாக்டர் டி. யேசுதாஸ்
திட்ட ஒருங்கிணைப்பாளர்,
நாட்டு நலப்பணித் திட்டம்.

# திருக்கோயில்கள்

அருள்மிகு நெல்லையப்பர்-அருள்தரும் காந்தியம்மாள் ஆலயம், திருநெல்வேலி நகரின் மையத்தில் சிறப்புடன் விளங்குகிறது. அழகிய பசுமையான நெல் வயல்கள் வேலி போல் நகரைச் சூழ்ந்து காட்சி தருகிறது. இத்திருக்கோவிலில் எழுந்தருளியிருக்கும் இறைவனின் திருப்பெயர் திருநெல்வேலி உடையார் (நெல்லையப்பர்) என்பதாகும். எழுந்தருளியிருக்கும் இறைவியின் திருப்பெயர் திருகாமகோட்டமுடைய நாச்சியார் (காந்திமதி) என்பதாகும்.

இக்கோவில் 850 அடி நீளமும், 756 அடி அகலமும் கொண்டது. அம்மன் கோவில், சாமி கோவில் சமமாக இரு பிரிவாக இருக்கின்றன.

தமிழகத்தில் ஒன்றாகிய தாமிர சபை இத்திருக்கோவிலில் உள்ளது. இக்கோவிலில் அமைந்திருக்கும் சோலையின் நடுவில் நூறு கால்களுடன் கூடிய வசந்த மண்டபம் உள்ளது. இளவேனில் காலமாகிய சித்திரை, வைகாசி மாதங்களில் நெல்லையப்பருக்கும், காந்திமதி அம்பாளுக்கும் வசந்த விழா சிறப்பாக நடைபெறும்.

சுவாமி சன்னதியில் பெரிய ரிஷபம் உள்ளது. இந்த ரிஷபத்திற்குத் தெற்கே கல்தூண்களில் நுட்பமான கலையழகு மிக்க பல சிற்பங்கள் உள்ளன பெரிய கொடி மரத்திற்கு மேற்குக் கோவில் முகப்பு மண்டபத்துத் தூண்களில் விளங்கும் வீரபத்திரர் முதலிய விக்கிரகங்களும் மிகவும் அருமையாகக் காட்சியளிக்கின்றன. சுவாமி கோவிலில் உள்ள பெரிய சபாபதியின் செம்பு விக்ரகம் உண்மையில் ஒருவர் ஆடுவது போன்று அழகுடன் விளங்கு கிறது. இத்திருக்கோவிலின் கல்வெட்டுகளும், சாதனங்களும் வட்ட எழுத்துக்களால் எழுதப்பட்டுள்ளன.

**திருவிழாக்கள்:**

ஆண்டுதோறும் ஆனி மாதத்தில் ஆனிப் பெருந்திருவிழா 10 நாட்கள் நடைபெறும். ஐப்பசி மாதத்தில் திருக் கல்யாணத் திருவிழா நடைபெறும். ஆனிப் பெருந்திருவிழாவில் தேரோட்டம் மிகவும் சிறப்பாக நடைபெறும். தமிழகத்தில் உள்ள பெரிய தேர்களில் நெல்லையப்பர் திருக்கோவில் தேரும் குறிப்பிடத் தக்க தேராகும்.

### கிருஷ்ணாபுரம் திருவேங்கடநாதர் திருக்கோவில்

திருநெல்வேலிக்கு கிழக்கே 12 கி.மீ. தொலைவில் மதுரை நாயக்க மன்னர்களில் ஒருவரான குமார கிருட்டிணப்ப நாயக்கன் உருவாக்கிய, திருவேங்கடநாதர் கோவில் ஒன்று திகழ்கிறது. சிற்பக்கலை நுட்பம் நிறைந்த பல சிற்பங்களை இங்கே காணலாம். இத்திருக்கோவில் பெருமாள் பாம்பணையில் கிடந்த திருக்கோலத்தில் காட்சி அளிக்கிறார்.

### பக்தவத்சலர் திருக்கோயில்

சேரன்மகாதேவியில், முதலாம் ராஜராஜன் முதலாம் இராஜேந்திரன் முதல் குலோத்துங்கன் ஆகியோரின் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. இவ்வூரின் வழியாக ஓடும் பொருனை ஆற்றின் கரையில் பக்தவத்சலர் திருக்கோவில் உள்ளது. இக்கோவிலில் தைத் திங்கள் முழு நிலவு நாள், மிகச் சிறப்புக்குரிய திருநாளாகக் கொண்டாடப்படுகிறது.

### திருப்புடைமருதூர் கோயில்

பொருநை ஆற்றுக் கரையோரம் எல்லாம் ஒரு காலத்தில் மருத மரங்கள் நிறைந்திருந்தன. முன்பு இவ்வூரில் இருந்த மரத்தில் புடை ஒன்று காணப்பட்டது. அதில் ஒரு சிவலிங்கம் இருந்தது. அதனால், திருப்புடைமருதூர் எனப் பெயர் பெற்றது. சிற்பக் கலைக் களஞ்சியமாக விளங்கும் அளவில் இக்கோயிலின் சிற்பக் கோபுரம் அமைந்துள்ளது. இக்கோவிலின் அம்பிகையின் பெயர் கோமதி அம்பாள். இங்கு, தைப்பூசத் திருநாள் மிகச் சிறப்பு வாய்ந்த திருநாளாகக் கொண்டாடப்படுகிறது.

### செப்பறைத் திருக்கோயில்

செம்பினால் ஆகிய அறை என்னும் பொருளைக் கொண்டு, திருநெல்வேலிக்குக் கிழக்கே பொருநைக்கரையில் செப்பறை என்னும் திருக்கோவில் உள்ளது. செப்பறையில் திருவாதிரைத் திருநாள் மிகவும் சிறப்பு வாய்ந்ததாகத் திகழ்கிறது.

### முக்கூடல் அழகர்கோயில்

குற்றாலத்தில் தோன்றும் சிற்றாறு, கயத்தாறு என்னும் உப்போடையோடு இணைந்த பொருநை ஆற்றுடன் சேரும் இடம் முக்கூடல் ஆகும். இதனைச் சீவலப்பேரி முக்கூடல் எனவும் அழைக்கலாம். சீவலன் என்ற பாண்டிய மன்னின் பெயரால் இவ்வூர் வழங்கப்படுகிறது. இவ்வூரில் முக்கூடல் அழகர் கோவில் உள்ளது. தமிழ் மூவேந்தர்களின் கல்வெட்டுகளும் இங்கு உள்ளன. நயினார் புலவர் இயற்றிய முக்கூடல் 'பள்ளு' இவ்வூரை அடிப்படையாகக் கொண்டவை. வைணவர்களுக்கு இது ஒரு சிறந்த தலமாகக் காட்சியளிக்கிறது. தேசியக் கவிஞர் சுப்பிரமணியப் பாரதியாரின் பாட்டனார் இவ்வூரில் வாழ்ந்தவர். மாட்டுச் சந்தை இவ்வூரில் சிறப்புப் பெற்றது.

### வள்ளியூர் முருகன்கோவில்

வள்ளியூரில் முருகன் எழுந்தருளி உள்ளான். வள்ளி பிறந்து வளர்ந்ததும், முருகனைத் திருமணம் புரிந்ததும் இந்த ஊரில்தான் என்று கூறப்படுகிறது. எனவே, இவ்வூர் தொன்றுதொட்டு வள்ளியூர் அயிற்று.



சங்கரன் கோவில் திருக் கோயிலின் தோற்றம்



நெல்லையப்பர் திருக்கோவில்

இங்குள்ள கோவில் பழங்காலத்துக் குகைக் கோவில் வகையைச் சார்ந் தது.[1] இக்குகையில் மூவேந்தர் காலத்து கல்வெட்டுகள் உள்ளன.

### நாகன்நாதர் திருக்கோயில்

நாங்குநேரியில் வடபுறம் இருக் கும் பெரியகுளம் நாகன் என்ப வனால் வெட்டப்பட்டது. அதற்கு நாகன் ஏரி எனப் பெயர் வந்தது. இதற்குச் சான்றாக இவ்வூர் கோவி லுள்ள சிவனின் திருப்பெயர் நாகன் நாதர் என விளங்குகிறது. இது நாகனால் வழிபடப் பெற்ற மூர்த்தி யாம். நாகன் ஏரி என்ற காலத் தால் நான்குநேரி என அழைக்கப்படு கிறது. இவ்வூரில் பங்குனி உத்திரத் திருநாள் அன்று தங்கத் தேர் ஓடும்.

### திருக்குறுங்குடி நம்பிராயர்கோயில்

இந்த ஊர், நம்பி ஆற்றங்கரை யில் உள்ளது. இவ்வாற்றங்கரையில் அழகிய நம்பிராயர் கோவில் உள் ளது. இத்திருக்கோவில் பழம்பெரும் சிற்பங்களைக் கொண்டு இருப்ப தோடு, சிற்பக் கோபுரத்தோடும் விளங்குகிறது.

### தென்காசி காசி விசுவநாதர் திருக்கோயில்

குற்றாலம் மலையில் தோன்றி ஓடும் சிற்றாற்றின் கரையில் உள் ளது தென்காசி. இவ்வூரின் நடுவில் காசி விசுவநாதர் திருக்கோவில் உள்ளது. சிறப்பு வாய்ந்த சிற்ப நுணுக்கங்கள் பொருந்திய கோபுரங் களும், திருக்கோவிலின் உள்ளே பல சிற்பங்களும் அமைந்து இவ்வூர் சிறப்புறக் காட்சியளிக்கிறது.

### திருமலைக்கோயில்

தென்காசிக்கு வடமேற்கே உள்ள மேற்குத் தொடர்ச்சி மலையின் ஒரு பகுதியாகத் திருமலை விளங்குகிறது. இங்குக் குமரன் குடியிருக்கும் குன்று உள்ளது. இதன் அடிவாரத்தில் பசுமையான சோலைகள் சூழ்ந்த பைம்பொழில் என்ற ஊர் உள்ளது. இந்தத் திருமலைக் கோவிலில் விசாகத் திருநாளும், பங்குனி உத் திரமும் சிறப்பாகக் கொண்டாடப் படுகிறது.

### சங்கரநயினார் திருக்கோயில்

திருநெல்வேலியிலிருந்து 53 கி.மீ. தூரத்தில் இவ்வூர் அமைந்து உள்ளது. இம் மாவட்டத்தில் உள்ள பெரிய கோவில்கள் உள்ள ஊர் களில், சங்கரன்கோவிலும் ஒன் றாகும். சங்கரநயினார் திருக்கோவி லுக்கு 9 தட்டுக்களுடைய கோபுரம் உள்ளது. இத்திருக்கோவிலில் 3 கருவறைகள் உள்ளன. ஒன்று சங்கர லிங்கம் கருவறை, இரண்டாவது சங்கரநயினார் கருவறை, மூன் றாவது கோமதி அம்பாள் கருவறை. புற்றிலிருந்து சங்கரலிங்கர் தோன் றியதால் வன்மீகநாதர் என்ற பெயர் இப்பெருமானுக்கு உண்டு. கோமதி அம்மை திருவுருவம், பார்ப்பவர் உள்ளத்தை ஈர்க்கக்கூடியது. தங்கப் பாவாடை அணிந்திருக்கும் காட்சி, உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் தனிப் பெருங்காட்சி. சித்திரைத் விழாவில் இவ்வூரில் தேர் ஓடும். சங்கரநயினார் தேர் மிகப் பெரிய தேர். பல புராணங்களைக் கொண் டது இவ்வூர்.

### பாபநாச ஈசுவரர் திருக்கோயில்

பொதிகை மலையில் தோன்றும் பொருநை ஆறு மலை அருவிகளில் 24 கி.மீ. அளவில் ஓடி முதன் முதலாகச் சமநிலைப் பகுதிக்கு வருகிற இடம் பாபநாசம் என்று அழைக்கப்படுகிறது.

மலை மீது பழைய பாபநாசம் என்று ஒரு இடம் உள்ளது. அந்த இடத்தில் அகத்திய மாமுனிவரால் வழிபடப்பட்ட முருகக் கடவுளுக் கும், வழிபட்ட இம்முனிவருக்கும் திருக்கோவில்கள் உள்ளன. இப் பொதிகை மலையில் அகத்தியருக்கு இறைவன் கயிலைத் திருமணக் காட்சியைக் காட்டியதால் இக் கோவிலுக்கு மேலே கலியாணத் தீர்த்தம், பைரவர் தீர்த்தம் என்ற அருவிகள் உள்ளன.

நூற்றாண்டுகளாகச் சிற்றாறு விளங்கும் பாபநாச ஈசுவரர் திருக் கோவில் உள்ளது. இஃது அகத்தியர் வழிபட்ட சிறப்பினை உடையது. இத்திருக்கோவிலிலுள்ள இறை வனின் பெயர் முக்கால லிங்கர். இறைவி பெயர் உலகம்மை. திருக் கோவிலின் முன்புறம் பொருநை ஆறு ஓடுகிறது. பொருநை ஆற்றுப் புண்ணியத் தலத்துள் இது ஒன் றாகும்.

### குற்றாலம்

தென்றல் காற்றையும் தென்

பொதிகைச் சாரலையும் ஒருங்கே பெற்ற திருக்குற்றாலம் இம்மாவட்டத்திலிருந்து தென்காசிக்குத் தென் மேற்கே 5 கி.மீ. தூரத்தில் மேற்குத் தொடர்ச்சி மலையின் அடியில் உள்ளது.

பாண்டிய நாட்டிலுள்ள சிவத் தலங்கள் பதிநான்கிலும் தொன்மையும் கீர்த்தியும் வாய்ந்ததாகும். திருக்குற்றாலம்கடல் மட்டத்திற்கு மேல் 550 அடிக்கு மேல் உள்ளது. குற்றால மலை. உச்சியில் 3 சிகரங்கள் இருப்பதால் திரு‹ூடமலை அல்லது திரிகூடசலம் என்று அழைக்கப்படுகிறது. திரிகூட மலை அடிவாரத்தில் இறைவன் இருப்பதால் திரிகூட நாதன் என அழைக்கப்படுகிறார். இத்திருக்கோவிலைச் சேர்ந்த சித்திரச்சபை இறைவன் திருநடனமாடும் ஐந்து சபைகளில் ஒன்று.

### அகத்தியர்கோயில்

வடமொழி புலமையும், தென் மொழிப் புலமையும் முழுவதும் உணர்ந்த சிவஞான முனிவர் தோன்றிய தலம் விக்கிரமசிங்கபுரம் ஆகும். இவ்வூரின் கிழக்கே 8 கி.மீ. தூரமுள்ள நகரமே அம்பாசமுத்திரம் ஆகும். இவ்வூரில் பல கோயில்கள் உள்ளன. அவற்றுள் பொதிகை மலை அகத்தியருக்கும் இங்கே ஒரு கோவில் உள்ளது. அம்பாசமுத்திரத்தின் வடக்கே பிரம்மதேசம், மன்னார்கோவில் ஆகிய இரண்டு பழைய ஊர்கள் உள்ளன. சோழர்கள் பாண்டிய நாட்டை ஆண்டபோது இவ்வூர்களில் உருவாக்கிய திருக்கோவில்கள் சோழர் காலக் கலை வண்ண உருவச் சிலைகள் இன்றும் காணப்படுகின்றன.

### திருக்குறுங்குடி அழகிய நம்பி திருக்கோயில்

தென்பாண்டி நாட்டில் அமைந்துள்ள 18 வைணவத் தலங்களில் ஒன்றாகச் சிறந்து விளங்குகின்றது. இக்கோயில் நெல்லை-கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலையில் அமைந்து இருக்கின்ற நாங்குனேரி என்னும் இடத்திலிருந்து சுமார் 12 கி.மீ. தூரம் மேற்கு நோக்கிச் செல்ல வேண்டும்.

இக்கோயில் மிகப் பெரிய அளவிலான மதில் சுவர்களோடு அமையப் பெற்றுள்ளது. இக்கோயிலில் அழகிய கற்சிற்பங்களும், கற்தூண்களும், சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடிய அழகு ஓவியங்களும் காட்சி அளிக்கின்றன.



**தமிழகத்தின் பண்பாட்டு மையங்களான ஆலயங்களின் புனிதத்தன்மை காக்கப்பட வேண்டும்; மரபுகள் கெடாத வகையில் திருக்கோயில்களின் நிர்வாகங்கள் சரியான முறையில் அமைத்துச் செயல்பட வேண்டும். பல்லாயிரக்கணக்கில், பராமரிப்பு இன்றி, பாதிக்கப் பட்டுள்ள புராதனக்** கோயில்கள் சிறப்பான முறையில் பராமரிக்கப் பட வேண்டும்; அவற்றின் அன்றாடத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும், என்ற எங்களுடைய எண்ணம், நாங்கள் அமைக்க இருக்கின்ற ஆலய நிர்வாக வாரியத்தின் மூலம் நிறைவேற்றப்படும் என்பதில் நம்பிக்கை கொண்டு உள்ளோம்.

திருக்கோயில்களால் 5 கல்லூரிகளும், 10 மேல்நிலைப் பள்ளிகளும், 9 உயர்நிலைப் பள்ளிகளும் நடத்தப்பட்டு வருகின்றன. மற்றும் வேதபாடசாலை, தேவாரப் பாடசாலை, தவில் நாதஸ்வரப் பள்ளி, காது கேளாதோர் பள்ளி, சித்த மருத்துவமனைகள், முதியோர் இல்லங்கள், அன்பு இல்லங்கள் ஆகியவை பராமரிக்கப்பட்டு வருகின்றன.

அரசு சார்ந்த மற்றும் அரசு சார்பற்ற நடவடிக்கைகள் மூலம் தமிழ்நாட்டில் கலைப் பொக்கிஷமாகத் திகழும் திருக்கோயில்களைப் பழுதடையாமல் பாதுகாக்கவும், கோயில்களின் கலாச்சாரத்தை, தொன்மையைக் காலவெள்ளம் அழித்துவிடாமல் அரவணைக்கவும் இந்த அரசு தொடர்ந்து பாடுபடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் தலத்தினுடைய பெருமானுக்கு 'அழகியநம்பி' என்று பெயர். நம்மாழ்வார், திருமொழி இசையாழ்வார், பெரியாழ்வார், திருமங்கையாழ்வார் ஆகிய நான்கு ஆழ்வார்களால் இதன் புகழ் பாடப் பெற்றுள்ளது. மேலும், இத்தலத்து 'நம்பி' தான் நம்மாழ்வாராக அவதரித்தார் என்று வைணவ வரலாற்று நூல்கள் கூறுகின்றன. திருமங்கையாழ்வார் முக்தியடைந்த தலமும் இதுவே ஆகும்.

முக்கியமாக இந்தத் தலத்தில் 'ஸ்கைதீகம்' என்னும் புராண நிகழ்ச்சிகள் நடந்துள்ளதாகப் புராணக்கால நிகழ்ச்சிகள் கூறுகின்றன. வைணவ சமய ஆச்சார்யரான ஸ்ரீராமாநுஜர் சுமார் 900 ஆண்டுகளுக்கு முன்பு இவ்வூருக்கு வருகை செய்து, நம்பியைத் தொழுது, ஒரு மடத்தை நிறுவி இருந்தார். இந்த மடமே இன்று 'ராமாநுஜ ஜீயர்' மடமாக அமைந்து அங்கு நாள்தொறும் சன்னியாசிகளால் பணி செய்யப்பட்டு வருகின்றது.

இக்கோவிலில் பாண்டியர் காலத்துக் கல்வெட்டுக்கள் மிகுதியாகக் காணப்படுகின்றன. 'கோமாறன் சடையன்' நம்பிக்குப் பல நிபந்தனைகள் விடப்பட்டதாகக் கல்வெட்டுகள் கூறுகின்றன. இன்றைக்கும் சுமார் 72 கல்வெட்டுக்கள் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களால் கண்டெடுக்கப்பட்டு ஆராயப்பட்டு வருகின்றன.

மேலும், நாயக்க மன்னர்கள், கேரள அரசன் உதயமார்த்தாண்ட வர்மா போன்றவர்களும் இப்பகுதியில் ஆட்சி செய்த வரலாற்றுக் கல்வெட்டு உண்டு. கேரள அரசன் ஆதித்த வர்மன் 1468-ஆம் ஆண்டு இந்த ஆலயத்திற்கு வெண்கலத்தால் ஆன ஆலயமணி வழங்கியதாக வரலாறு கூறுகிறது. விஜய நகர மன்னர்களால் ராஜகோபுரம் அமைக்கும் பொருட்டு அடித்தளம் போடப்பட்ட நிலைமை இன்றைக்கும் அப்படியே அமைந்துள்ளது.

# பண்டைய பூம்புகாரின் கட்டடப் பகுதிகள் கண்டுபிடிப்பு!

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையும், தேசீய கடலாய்வு நிறுவனமும் இணைந்து பூம்புகார் கடற்பகுதியில் மேற்கொண்ட ஆழ்கடலாய்வின்போது, வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த தொன்மை நகரமாகப் பூம்புகார் திகழ்ந்தமைக்கான தொல்லியல் சான்றுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

1993-ஆம் ஆண்டு சனவரி மற்றும் பிப்ரவரி திங்களில் மேற்கொண்ட இரண்டாம் கட்ட ஆழ்கடலாய்வின்போது காவிரியாறு வங்கக் கடலுடன் கலக்கின்ற இடத்திலிருந்து சுமார் 300 மீட்டர் முதல் 400 மீட்டர் தொலைவில் கடல் பகுதியில் ஏழு முதல் எட்டு மீட்டர் ஆழத்தில் தொடர்ச்சியான கட்டடப் பகுதிகள் இருப்பது கண்டறியப்பட்டது. மேலும் பூம்புகாரில் தற்போது அமைந்துள்ள கலங்கரை விளக்கத்திற்கு அருகாமையிலும் கடற்பகுதியில் தொடர்ச்சியான கட்டடப் பகுதிகள் இடைவெளி விட்டு இருப்பதும் கண்டுணரப்பட்டது.

இம்முறை, கட்டடப் பகுதியின் மேல் படிந்து காணப்பட்ட வண்டல் படிவத்தினை அகற்றும் பணி மேற்கொண்டனர். அதே சமயம் குறிப்பிடத்தக்க அளவில் கருப்பு, சிவப்பு பானை ஓடுகள், சிவப்பு வண்ணப் பானை ஓடுகள், மதுக்குடுவை, பானை ஓடுகள் மற்றும் செங்கல் துண்டுகள் சேகரிக்கப்பட்டன. இத்தொல்பொருட்களைக் கருத்தில் கொண்டு பார்க்கும்போது இக்கட்டடப் பகுதிகள் கி.மு. 300 - கி.பி. 400 ஆகிய இடைப்பட்ட காலத்தைச் சார்ந்ததாகும் என அறிய முடிகிறது.

1991-இல் மேற்கொண்ட முதற்கட்ட ஆழ்கடலாய்வின்போது கண்பிடிக்கப்பட்ட கட்டடப் பகுதியில் மூழ்குநர்களைக் கொண்டு விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்வாய்வின்போது மூழ்குநர்களால் சுத்தம் செய்யப்பட்ட கட்டடப் பகுதியின் செம்புராங் கற்களால் (Laterite) அமைக்கப்பட்ட சுவர்ப் பகுதி, தெளிவாகக் காணும் வண்ணம் வெளிப்படுத்தப்பட்டது. இக்கட்டடப் பகுதியின் அமைப்பு முக்கால் வட்ட வடிவமாகவும், இரு பக்கங்களிலும் உயரமான சுவர் வடக்கு மற்றும் தெற்காகவும் காணப்படுகின்றன. இரு பக்கச் சுவர்களுக்கும் உள்ள இடைவெளிப் பகுதி சுமார் 25 மீட்டர் ஆகும். இக்கட்டட அமைப்புகளை நோக்கும்போது, புகழ்வாய்ந்த பூம்புகார் நகரத்தின் கோயிலாக இது இருக்கக்கூடும்.

மேலும், இங்கு தரை தட்டிய கப்பல் உள்ள பகுதியில் மேற்கொண்ட விரிவான ஆய்வின்போது சுமார் 1.25 மீட்டர் நீளமுடைய இரும்பு பீரங்கி ஒன்றும், இரும்பு மற்றும் செம்பினாலான ஆணிகளும் மற்றும் மரச் சட்டங்களும் வெளிப்படுத்தப்பட்டன. உடைந்த கப்பலில் காணப்பட்ட ஈயக் கட்டிகள் சுத்தம் செய்யப்பட்ட நிழற்படம் மற்றும் வீடியோ படங்கள் எடுக்கப்பட்டன. இக்கப்பல் கி.பி.18-ஆம் நூற்றாண்டில் மூழ்கியது என அறியப்படுகின்றது.

பூம்புகார் ஆழ்கடலாய்வுப் பணியுடன் கரையோர ஆய்வும் மேற்கொள்ளப்பட்டபோது பூம்புகார்த் தொடர்பான தொல்லியல் சான்றுகள் சேகரிக்கப் பெற்றன. பூம்புகார்க் கரையோரத்தில் அமைந்துள்ள கண்ணகி சிலைக்கருகாமையில் செங்கற் கட்டடப் பகுதி ஒன்று வெளிப்படுத்தப்பட்டது. இச் செங்கற்கள் கீழையூர் பகுதியில் முன்னே கண்டுபிடிக்கப்பட்ட படகுத்துறையில் காணப்படுகின்ற செங்கற்களைப் போன்று அமைப்பிலும், அளவுகளிலும் ஒத்துக் காணப்படுகின்றன.

மேற்கண்ட பூம்புகார் ஆழ்கடலாய்வு மற்றும் கள ஆய்வுத் தொல்பொருள் ஆய்வுத்துறை இயக்குநர் திரு. நடன. காசிநாதன் மற்றும் தேசிய கடலாய்வு நிறுவனத்தைச் சார்ந்த டாக்டர் எஸ்.ஆர். ராவ் மற்றும் டாக்டர் வோரா ஆகியோரின் மேற்பார்வையில் இத்துறை அலுவலர்கள் திரு. அ. அப்துல் மஜீத், தொல்லியல் துணைக் கண்காணிப்பாளர், திருவாளர்கள் சம்பத், செல்வராஜ், இராஜேந்திரன் மற்றும் ஸ்ரீ குமார், தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழக டாக்டர் இராஜன் மற்றும் தேசிய கடலாய்வு நிறுவனத்தைச் சார்ந்த ஆய்வாளர்கள் திருவாளர்கள் குடிகார், சுந்தரேஷ், கவுர், சீலா திருப்பாதி, பந்தூர்கர் ஆகியோரால் மேற்கொள்ளப்பட்டன.

காவிரிப்பூம்பட்டினத்திற்குத் தென் மேற்கே நான்கு கி.மீ. தொலைவில் அமைந்துள்ள மேலப் பெரும்பள்ளம் கிராமத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் பெருங்கற்காலத்தைச் சார்ந்த ஆண், பெண் சுடுமண் பொம்மைகளுடன் கூடிய ஈமத் தாழியின் உடைந்த பகுதி கண்டுபிடிக்கப்பட்டது. ஏற்கெனவே இத்துறையின் அலுவலர்களால் மேற்கூறப்பட்ட பகுதியின் அருகாமையில் அமைந்துள்ள பகுதிகளில் இதுபோன்ற சுடுமண் பொம்மையுடன் காணப்பெறும் ஈமத்தாழிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. குறிப்பாகக் குன்னூர்ப் பகுதியில் இதனைப் போன்ற ஈமத் தாழிகளின் மூடிப்பகுதியில் சுடுமண் உருவம் உள்ளவை சேகரிக்கப்பெற்றிருக்கின்றன. மேற்கண்ட சான்றுகளைக் கொண்டு நோக்கும்போது பூம்புகாரின் தொன்மை வரலாறு பெருங்கற்காலத்திலிருந்தே தொடங்குகின்றது என்பது தெளிவாக அறிய முடிகின்றது.

— தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத் துறை



# விடுதலை வீரர் வ.உ.சி

— ஜீவா மணிகுமார்

"சுதந்திரம் எங்களது பிறப்புரிமை" என்று இந்தியாவின் வடக்கே எழுந்த முழக்கத்தின் எதிரொலி தென்னாட்டில், திருநெல்வேலிச் சீமையில் சீற்றத்துடன் எதிரொலித்தது.

இந்த எதிரொலியினைக் கேட்ட வெள்ளையர்கள் இடியோசை கேட்ட நாகம்போல் நடுநடுங்கினர். வாணிபம் என்பது பொருள்மட்டும் சேர்க்க அல்ல, மற்றவர்களை அடிமைப்படுத்தவும் என்பதை உலக வரலாற்றில் ஏற்படுத்தி, பொருளை மட்டுமல்ல, அடுத்த நாட்டின் மானத்தையும் சேர்த்தே கப்பலேற்றுவோம் என்ற பறங்கியரின் பாதையினை, அவ்வாணிபத்தைக் கொண்டு கப்பலோட்டி தடுத்து, நமது தேசத்தின் தன்மானத்தை நிலை நாட்டுவோம் என்று சிலிர்த்து பணம் தேட வந்தவர்களின் பிடரியில் மரண பயத்தை ஏற்படுத்திய மகத்தான சக்தி ஒன்று தென்பாண்டிச் சீமையில் ஒளிவிட்டது.

''இழப்பதற்கு ஒன்றும் இல்லை நம் அடிமை விலங்குகளைத் தவிர'' என்பதைத் தொழிலாளர் தோழர்கட்கு உணர்த்தி அவர்களை ஒருங்கிணைத்துப் போராட வைத்த புரட்சிப் புயல் ஒன்று பொது வாழ்வில் புறப்பட்டு, சூரியனே அஸ்தமிக்காத பேரரசுக்குப் புதுப்பாடம் கற்பித்தது கவின்மிகு நெல்லைச் சீமையிலே. அது 1872-ஆம் ஆண்டு, செப்டம்பர் 5-ம் நாள் நெல்லாலே வேலியிட்டு நெறிவளர்க்கும் நெல்லை மாவட்டத்திலே, ஒட்டப்பிடாரத்தில் தமிழ் வளர்த்த வேளாளர்குடி உலகநாதருக்கும், பிரமாயி அம்மாளுக்கும் அருந்தவப்புதல்வனாக அவதரித்த சிதம்பரனார் அவர்கள்.

சொல்லேரு ழ்வராக, செயல் வீரராகத் தோன்றிய இவருடைய பாட்டனார் சிதம்பரக் கவிராயர் தமிழ்ப் புலமையிலே தன்னேரின்றி விளங்கியவர். பாட்டன் வழி பேரனும் இளமையிலேயே பைந்தமிழ் நூல்களையெல்லாம் பொருளுடன் கற்று கவி அருளுடன் விளங்கினார். அறிவை ஊட்டுவது தந்தையின் கடன் என்பதை வழுவாது உணர்ந்த சிதம்பரனாரின் தந்தை உலகநாத பிள்ளை, மகனின் கல்விக்கென ஒட்டப்பிடாரத்திலேயே பள்ளி ஒன்று கட்டி மகனின் அறிவுச் செல்வத்தை மேன்மை அடையை வைத்தார்.

மகனின் அறிவாற்றல் இளமையிலேயே, ஒரே ஆண்டில் இரண்டு வகுப்புகள் கடக்கும் அளவிற்கு ஒளி பெற்றது. உயர்நிலைப் பள்ளியை தூத்துக்குடிக்குச் சென்று கற்ற சிதம்பரனார் குமாஸ்தாவாகப் பணிபுரிந்து பின்பு சட்டக் கல்லூரியில் படித்து சிறந்த வழக்கறிஞராக ஆனார். இளமைப் பருவத்திலேயே ஆற்றல் மிகக் கொண்ட சிதம்பரனார் அன்றிருந்த சமூகச் சூழ்நிலையையும், அரசியல் சூழ்நிலையையும் தெளிவுற உணர்ந்து படிப்படியாகத் தனது வாழ்க்கைப் பாதையினைச் செம்மைப்படுத்தினார். நமது நாடு அன்னியனிடம் அடிமைப்பட்டுக் கிடப்பதையும், அதற்கான நமது சமூகப் பிளவுகளையும், பேதங்களையும் ஆய்ந்துணர்ந்த சிதம்பரனார் தன்னுடைய வழக்கறிஞர் தொழிலையே பல புரட்சிகளைச் செய்தார். ''வழக்கறிஞர்களெல்லாம் பொய்யர்கள்'' என்ற வாதத்தைப் பொய்யாக்கி, 'சட்டம் என்பது இருட்டறை, அதில் வக்கீல்களின் வாதம் ஒரு விளக்கு' என்ற அறிஞர் அண்ணாவின் கருத்தினை அன்றே, தனது வாதத்தில் மெய்யாக்கினார்கள்.

காசுக்காகவே சோரம் போகும் கூட்டம் என்று கூறப்பட்ட தொழிலில் நேர்மையான வழக்குகளையே ஆய்ந்து தேர்ந்தெடுத்து வாதாடி வெற்றி பெற்றார். பாதிக்கப்பட்ட ஏழைகளின்பால் பாசம் மிகக் கொண்ட சிதம்பரனார் அவர்களுடைய வழக்குகளை இலவசமாக வாதாடி வெற்றி பெற்று அவர்கள் இதயத்திலும் குடிபுகுந்தார். வழக்கு மன்றங்களில் நடைபெறும் தவறுகளை 'நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்' என்பதற்கிணங்க அஞ்சாது எடுத்துரைத்தார். தொழிலில் உண்மையன்றிப் பொய் பேசுவதில்லை என்று உறுதிபட வாழ்ந்தார்.

அந்நாளில் நீதிமன்றங்களில் நீதிபதிகள் பெரும்பாலும் ஆங்கிலேயர்களே இருந்தனர். அவர்களில் பலர் நம்மவர்கள்பால் காட்டிய அலட்சியமும், வழங்கிய தீர்ப்பில் காணப்பட்ட பேதமும் சிதம்பரனாரைச் சிந்திக்கச் செய்தன. நம் நாட்டில், நம்மை அடிமைப்படுத்தியும், சுரண்டியும் வாழ்பவர்கள் நம்மைக்

# அண்ணா போற்றிய பெருமக்கள்

## வ.உ. சிதம்பரனார்

**உண்மையாகவே நாட்டுக்கு விடுதலையும், மக்களுக்கு நல் வாழ்க்கையும் ஏற்பட வேண்டும் என்ற பொதுநல நோக்குடன் - பேரையும் புகழையும் விரும்பாமல் - ஆடம்பரம் அற்ற வாழ்க்கையை நடத்தி நாட்டுப் பணியாற்றியவர் வ.உ.சி.!**

கிள்ளுக்கீரைகளாக மதிப்பதையும், அவற்றைத் தாங்கி அடிமைப்பட்டுக் கிடக்கும் நம்மவர்களின் அறியாமையையும் அதற்கான காரணங்களையும் கண்ட சிதம்பரனார் நம்மில் மண்டிக் கிடக்கும் பேதங்களும், ஆண்டாண்டுக் காலமாக நம்மை மயக்கிய மூடப்பழக்க வழக்கங்களும் ஒழியின் நம்மவர்க்கு மேன்மை என்றறிந்து இவைகளைக் களைவதில் தம்மை இணைத்துக் கொண்டார்.

நம்மிடையே உள்ள சாதிமத பேதங்களை உணர்ந்த சிதம்பரனார், தாழ்த்தப்பட்டவர் என்ற பொய்வாதத்தை உடைக்க, தாமே அரிசனக் குழந்தையைத் தத்தெடுத்து வளர்த்தார். தம்முடைய குழந்தைகளில் ஒருவனாக மேன்மையுற வளர்த்தார். மேலும், தம்முடன் நட்பு பாராட்டிய சென்னையைச் சார்ந்த சுவாமி சகஜானந்தர் என்ற அரிசனப் பெரியாரை அழைத்துச் சென்று தம்முடன் வைத்துக்கொண்டு குறள் கற்பித்து, சைவ சித்தாந்தமும் போதித்தார். ''நீதி வழுவாத நெறிமுறையில் இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்'' என்ற வாக்கினைத் தனது வாழ்நாளில் சிறப்பாகக் கடைப்பிடித்த செம்மல் சிதம்பரனார் அவர்கள்.

நமது சமுதாயம் மேன்மையுற வேண்டுமெனில் அன்னியர் ஆதிக்கம் அழிய வேண்டும் என்று தெளிந்த சிதம்பரனார், தேசீயத்தின்பால் தனது எண்ணத்தைச் செலுத்தினார். நாட்டில் அன்னியராட்சிக்கு எதிராக நடைபெறும் போரில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். இளமை முதலே இலக்கியத்தில் ஈடுபாடு கொண்டு, தனது தமிழறிவைக் கூர்மையாக்கிக் கொண்ட சிதம்பரனார் மக்களிடம் சுதந்திர வேட்கையை ஊட்டினார். சுதந்திரப் போராட்டத்தை அவர் ஒரு அரசியல் இயக்கமாகக் கருதவில்லை. அதனைப் புனித வேள்வியாகக் கருதினார். தெய்வபக்தி நிறைந்தவராதலால் அன்னை பூமியையே ஒரு தெய்வமாகக் கருதி, தேசியத்தை ஒரு சமயமாகவும், தேசியப்பற்றை சமயக் கோட்பாடாகவும் கருதினார். இயற்கையிலேயே அஞ்சா நெஞ்சமும், உண்மை ஒளியும், ஆழ்ந்த தமிழறிவும், உறுதியான கோட்பாடும் கொண்ட சிதம்பரனாரின் பேச்சு வீர முழக்கமாக, சத்தியத்தின் ஒலியாக இருந்தது. கேட்பவரைத் தன் வயப்படுத்தும் ஆற்றல் மிக்கதாக விளங்கியது. ஒத்த மனதுடையவர்கள் உண்மை நண்பர்கள் என்ற வாக்குக்கிணங்க சுதந்திரப் போராட்டத்தில் சூறாவளியாய்த் திகழ்ந்த சுப்பிரமணிய சிவாவும், கனல்மிகு கவிதையின் களமாக விளங்கிய பாரதியும் சிதம்பரனாரின் இரு கண்களாக விளங்கினார்கள்.

ஒரே மேடையில், சிதம்பரனார், சுப்பிரமணிய சிவாவின் உரிமைக் குரல்கள் முழங்கும் போது, சிவாவின் பேச்சில் நெருப்புப் பொறி பறக்கும்; சிதம்பரனார் பேச்சு சூறைக் காற்றுப் போல் சுழற்றியடிக்கும். ஏற்கெனவே சுதந்திர வேட்கை எனும் தீ எரிந்து கொண்டிருக்கும்போது, காற்றும் சேர்ந்தால் கேட்கவும் வேண்டுமா? விடுதலை வெறி மக்களிடையே தூண்டி எழுந்தது நாட்டுப்பற்று கொழுந்துவிட்டு எரியலாயிற்று. சிதம்பரனாரின் பேச்சு பாரதியின் கவியாயிற்று; மக்கள் அனற்பிழம்பாயினர்; வெள்ளையரின் ஆதிக்கத்தைச் சுட்டது. வெள்ளையன் நடுங்கினார். சிதம்பரனார் கூட்டத் தடை விதிக்க எண்ணினான். வழக்கறிஞரான சிதம்பரனார் வெள்ளையனின் வஞ்சக மண்டபங்களிலும், அறைகளிலும் அரங்கேற்றினார். மேலும், பாதிக்கப்பட்டவர்களைப் பதறிவந்து அணைக்கும் சிதம்பரனார், தொழிலாளர்களின் தோழராகவும் விளங்கினார்.

தொழிலாளர்களை வெள்ளை முதலாளிகள் வயிற்றில் அடிப்பதைக் கண்டு, தொழிலாளர்களை ஓரணியில் நிறுத்தி அவரது கோரிக்கைகளுக்காகப் போராடினார். தூத்துக்குடி கோரல் மில்லில் வேலை நிறுத்தம் ஏற்பட்ட போது, வேலை நிறுத்தத்தால் பாதிக்கப்பட்ட தொழிலாளிகளுக்கு மாற்று வேலை கிடைக்கும்படி செய்து, அவர்தம் குடும்பங்களை அவல நிலைக்கு ஆட்படாமல் காப்பாற்றினார். மேலும் அவர்களது கோரிக்கையின் நியாயத்தை முதலாளிகளிடம், தனிப்பெரும் தலைவராக நின்று வாதாடி வெற்றியும் பெற்றார். இவர்தம் பேச்சில் உள்ள நியாயத்தை நிராகரிக்க முடியாத முதலாளிகள் ஆங்கிலேய அரசின் உதவியினை நாடினார்கள். ஏற்கெனவே, சிதம்பரனாரின் சுதந்திர முழக்கத்தால் மக்களிடையே ஏற்பட்டுள்ள கொதிப்பினால் பாதிக்கப்பட்ட வெள்ளையர் ஆட்சி சிதம்பரனாரின் தொழிலாளர் அன்பு கண்டு கோபத்தால் குமுறினர். "தேச ஆட்சியின் மீட்சிக்கான முதல்வழி, வியாபாரம் செய்ய வந்த வெள்ளையர்களை விரட்டி அடிக்க வேண்டும் என்பதுதான். வெள்ளையர்களை விரட்டுவதென்றால் நம்மவர்க்குக் கடல் ஆதிக்கம் வேண்டும். ஆங்கிலேயர் நம் அரசைப் பறித்தது பொருள் பறிக்க

### செந்தமிழ்ச் செல்வன்!

கப்பலை யோட்டிக் கடுங்காவல் தண்டனையில்
உப்பிலாக் கூழுண் டுடல்மெலிந்தோன்-ஒப்பிலாச்
செந்தமிழ்ச் செல்வன் சிதம்பரனை அன்போடு
சிந்தனைசெய் நெஞ்சே தினம்.

வஞ்சிலா வான மதியின் ஒளி போல
விஞ்சிநீ டூழி விளங்குகவே- வன்சிறையில்
செக்கிழுத்த வீரன் சிதம்பரன் மெய்புகழ்தான்
மக்களிடை ஓங்கி வளர்ந்து.

—கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை

வேயாம். ஆகவே, பொருள் பறிக்கும் வாணிபக் கப்பலுக்கு வேட்டு வைத்தா லொழிய அவ்வாங்கிலேயர் இந்தியாவை விட்டு வெளியேறார்'' என்று 1906-இல் தம்முடைய சொத்துக்களையெல்லாம் விற்று, கப்பல் ஓட்டி தம்முடைய பொருளெல்லாம் இழந்தாலும், மனம் தளராது போராடியவர் சிதம்பரனார். இச்செயல் ஆங்கிலேயர்களை மேலும் ஆத்திரமூட்டியது. இப்படிப் பல்வேறு வழிகளில் அன்னிய ஆதிக்கத்தை இந்திய மண்ணிலிருந்து விரட்ட சிதம்பரனார் செய்த செயல்களால் சினத்தின் எல்லையை அடைந்த அன்னியர் ஆட்சி, 1908-ஆம் ஆண்டு விபின்சந்திரபாலரின் விடுதலை விழாவை தடையை மீறி நடத்தியதற்காக, சுப்பிரமணிய சிவாவுடன் கைது செய்து நாற்பது ஆண்டுகள் சிறையிலடைத்தது. வெள்ளை ஆட்சியின் தீர்ப்பு வெள்ளை யரையே வெகுளச் செய்தது. இங்கிலாந் தில் இந்திய மந்திரியாக இருந்த மார்லி பிரபு இத்தண்டனை நியாயமற்றது என்று உரைத்த பின்னர் சென்னை உயர்நீதி மன்றம் சிதம்பரனாரின் சிறைத் தண் டனையைப் பத்து ஆண்டுகளாகக் குறைத் தது. பிறகு இலண்டன் பிரிவு கவுன்சில் முறையீடு மூலமாக அது ஆறு ஆண்டுகள் குறைக்கப்பட்டது.

சிதம்பரனார் சிறைக்குச் செல்கையில் வயது முப்பத்தைந்து. சிறையிலே சிதம்பரனார் பட்ட கொடுமைகள் கொஞ்ச நஞ்சமல்ல. கோவைச் சிறை யிலே கல்லுடைக்கவைத்து, செக்கிழுக்க வைத்து கொடுமைப்படுத்தினார்கள். இவ்வளவிற்கும் அஞ்சாத நெஞ்சம் கொண்டு சக கைதிகளின் பிரிவையும் பாசத்தையும் பெற்ற பெரியார் சிதம்பரனார். சிதம்பரனார் கைது செய்யப்பட்டபோது தமிழகமே எரி நெருப்பாகி பின் அணைந்தது. ஆம்! செக்கிழுத்தசெம்மல் 1912-இல் சிறை யிலிருந்து வெளிவந்தபோது அவரை எதிர் கொள்ள எவருமில்லை. வறுமையில் வாடி, வெள்ளையர்களால் வழக்கறிஞர் தொழிலையும் செய்யவிடாமல் தடைபடுத் தப்பட்டு துன்பம் மிக உழன்ற வேளையிலும், சிதம்பரனார் மனம் தளராமல் சென்னையில் அரிசி, நெய் வாணிபம் செய்து வாழ்ந்தார்.

தான் மூட்டிய சுதந்திரக் கனல் அணைந்தும், தன்னாட்சியின் சின்ன மாகத் தான் நிறுவிய கப்பல் கம்பெனி மூடப்பட்டும் கிடந்த நிலை கண்டு, எதற்கும் கலங்காத இரும்பு இதயம் படைத்த சிதம்பரனார் கண்ணீர் வடித் தார். வாழ்க்கையையே போர்க்களமாகக் கண்ட சிதம்பரனார் அரசியல் சூழ் நிலையைக் கண்டு தம்மை இலக்கியப் பணியில் ஈடுபடுத்திக் கொண்டார். சுதந்திர இயக்கத்தில் திலகரின் தலைமை யேற்று, தனது தீவிர கொள்கைகளாலும், செயல்களாலும் பீடுநடைபோட்ட சிதம்பரனார் சிறையிலிருந்து வெளிவந்த பிறகு சுதந்திர இயக்கத்தில் காந்தி அடிகளின் தலைமையில் செயல்படும் ஊக்கத்தை இழந்தார். அரவிந்தர், திலகர் இவர்களோடு புரட்சி, தேவையானால் வன்முறைப் புரட்சி என்ற தீவிர நெறிகளில் செயற்பட்ட வ.உ. சிதம்பரனார், காந்திஜி கொள்கையுடன் பெரிதும் மாறுபட்டார்.

1920-ஆம் ஆண்டு கல்கத்தா காங்கிரசிலும் தம்முடைய கொள்கைக் காகப் போராடித் தோற்றார். 1927-ஆம் ஆண்டு சேலம் மாநாட்டிலும் தம் கவலையை வெளியிட்டார்.

தம்முடைய செல்வாக்கு, தனித் தலைமை, தியாகம் இவற்றை முதலீடாகக் கொண்டு புதுக்கட்சித் தொடங்கி, உட் பூசல்களை வளர்க்க விரும்பவில்லை. விடுதலை என்ற முடிவு நோக்கிய பயணத் தில் பாதைகள் மாறினாலும் பயன் ஒன்றே எனக்கருதி குருட்டுச் செருக்கு, தற்பெருமை, தன்னலம் இவற்றிற்கு இடம் தராமல், புதிய சக்திக்குத் தலை வணங் கினார், தனி மனிதனைவிட நாடே பெரிது என்ற உண்மையை உணர்ந்த சிதம்பரனார்.

மகாபாரதத்தின் முடிவில், காண்டீபத் தைத் துறந்து இமயத்தை நோக்கி நடந்த அருச்சுனனைப் போல தமது வீரம் பெரும் அரசியல் தலைமையைத் தாமே துறந்து மொழிப் பணியிலும், சமய வாழ்விலும் ஆழ்ந்தார். இதுவே வ.உ. சிதம்பரனார் அவர்களுடைய தியாகத்திற் கெல்லாம் மணிமுடியாக அமைந்தது.

## அண்ணா போற்றிய பெருமக்கள்:



பாரதியார்

'மக்கள் கவிஞர்' ஆக மாறுவது எளிதான செயல் இல்லை. மிகவும் கடினமான இந்தச் சாதனையில் தான் முயன்று வெற்றி பெற்றிருக் கிறார் சி. சுப்பிரமணிய பாரதி.

பாரதியார் - ஏரோட்டும் சாதாரண உழவனுக் குப் பாட்டுப் பாடினார். தொட்டில் ஆடும் தாய்மார்களுக்கு - விளையாட்டு வெளிகளிலே ஓடியாடும் குழந்தைகளுக்குக் கவிதைகள் இசைத்தார்.

கடந்த காலப் புலவர் சிகாமணிகளைப்போல, வேதாந்த வியாக்கியானங்களை விடுதலைக் கோரிக்கைக்குச் சப்பைக் கட்டாக அவர் பயன் படுத்தவில்லை. உலகின் மிகத் தொலைவில் உள்ள நாட்டு மக்களின் விடுதலைப் போராட்டங் களைக் கவிதைகள் ஆக்கி, மக்களுக்குப் படைத்தார்.

TNSC BANK

# The Tamil Nadu State Apex Co-Operative Bank Ltd.,

233, N.S.C. Bose Road, Madras-600 001.

**Rate of Interest on Deposits**
**(Effective from 1.3.1993**

| Sl.No. | Type of Deposit | Rate of Interest per annum |
|---|---|---|
| 1. | Savings Bank Accounts | 5.25 % w.e.f. 1.7.93 |
| 2. | Fixed Deposits : | |
| | For 46 DAYS and above but upto 270 days | 11.25% |
| | For 271 DAYS and above but upto 364 days | 11.00% |
| | For 1 YEAR and above | 11.25% |

**Interest on Fixed Deposit for 1 year and above will be paid Quarterly**

- NRO & NRE Accounts Facilities are available in 6 designated Branches.
- Interest rates are subject to RBI directives from time to time.

THE BANK AT YOUR SERVICE



மதுரையில்

# வ.உ. சிதம்பரனார் பிறந்தநாள் விழா!

தமிழக அரசு செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் கப்பலோட்டிய தமிழன், வ.உ. சிதம்பரனார் அவர்களின் 122-வது பிறந்தநாள் விழா, மாநில அளவில் மதுரையில் 5.9.93 அன்று மாலை விக்டோரியா எட்வர்ட் அரங்கில் சிறப்பாக நடைபெற்றது.

மாண்புமிகு செய்தி விளம்பரத் துறை அமைச்சர் திரு மு.தென்னவன் அவர்கள் தலைமையில், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் மேலூர் திரு அ.மா. பரமசிவன் அவர்கள்- வ.உ.சி. அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்து ஏழை எளியோருக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். விழாவுக்கு மாண்புமிகு தமிழக அரசின் சிறப்புப் பிரதிநிதி திரு எஸ்.டி.கே. ஜக்கையன் அவர்கள் முன்னிலை வகித்து உரையாற்றினார்.

இவ் விழாவில், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் மேலூர் திரு அ.மா. பரமசிவன் அவர்கள் வ.உ.சி. அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்து, அரசின் பல்வேறு துறையின் சார்பில் ஏழை எளியோருக்கு இலவசத் தையல் இயந்திரங்கள், மின்சார குலாலச் சக்கரம், திருமண நிதியுதவி, புரட்சித்தலைவி டாக்டர் ஜெயலலிதா பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் நிதி உதவி, மானிய விலையில் இரும்புக் கலப்பை, களைக்கொல்லி, இலவச உரம் மினிகிட், மற்றும் செம்மறி ஆடுகள் உழவு மாடுகள், மூன்று சக்கர வண்டி, நெசவுக் கருவி, பெட்டிக்கடை, விதவைகள் நிதி உதவி, மற்றும் பல்வேறு திட்டத்தின் கீழ் 85 நபர்களுக்கு ரூ.2,55,000 மதிப்புள்ள உதவிகளை வழங்கினார்.

மாண்புமிகு செய்தி விளம்பரத் துறை அமைச்சர் திரு மு.தென்னவன் அவர்கள் தமது தலைமையுரையில்,

"சுதந்திரம் எனது பிறப்புரிமை" என முழங்கிய வ.உ. சிதம்பரனார் அவர்களின் 122-வது பிறந்தநாள் விழா மிகச் சீரோடும் சிறப்போடும் மாநில அளவில் இங்கு கொண்

பாடப்படுவதில் பெருமகிழ்ச்சி கொள்கிறேன்.

"வெள்ளைக்காரனை எதிர்த்து, அவனது ஏகாதிபத்தியத்தை எதிர்த்து எத்தனையோ பேர் போராடி இருக்கலாம். இந்த நாட்டிற்குச் சுதந்திரம் வேண்டும் என்று பல்லாயிரக் கணக்கானோர் சிறையில் அடைக்கப்பட்டிருக்கலாம். ஆனால், வெள்ளைக்காரனின் பொருளாதார ஆதிக்கத்தை எதிர்த்து, சுரண்டலை எதிர்த்துப் போராட்டம் நடத்திய பெருமை வ.உ.சி. அவர்களுக்கு மட்டுமே உண்டு. வெள்ளைக்காரனை எதிர்த்து அவர்களுக்குப் போட்டியாக சுதேசி இயக்கத்தை ஆரம்பித்து, கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. அவர்கள் இந்தச் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டார் என்பதற்காக, தேசத்துரோகக் குற்றம் சாட்டப்பட்டு, ஆயுள் தண்டனை பெற்று சிறையில் அடைக்கப்பட்டு, இந்த நாட்டு மக்களின் சுதந்திரத்திற்காகத் தன் வாழ்வையும், நலனையும், அர்ப்பணித்துக் கொண்டவர். அத்தகைய பெருமையும், துணிச்சல் மிக்க, வீரம் மிக்க இந்த மண்ணில் பிறந்த ஒரு மாபெரும் தலைவர் பிறந்த நாளைத்தான் நாம் இன்று கொண்டாடுகிறோம்.

"அன்று நாட்டு மக்களின் நலன் ஒன்றையே இலட்சியமாகக் கொண்ட வ.உ.சி. அவர்களைப் போலவே, இன்றைய தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் செயலாற்றி வருகிறார்கள். எத்தகைய இன்னல்களையும் இன் முகத்துடன் அன்று ஏற்றுக் கொண்ட வ.உ.சி. போலவே இன்றைய தமிழக முதல்வர் அவர்களும் பணியாற்றி வருகிறார்.

"சுதந்திரப் போராட்டத் தலைவர்களை மதிக்கும் வகையில் இன்றைய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு "வெள்ளையனே வெளியேறு" தியாகிகளின் நினைவாக நினைவுத்தூண் அமைக்கபடப்பட்டதும், வ.உ.சி. அவர்களின் பேத்திக்கு அரசுப் பணியும் தந்ததோடு மட்டுமன்றி, மாநில அளவிலான சுதந்திரப் போராட்டத் தியாகிகளை அரசின் சார்பில் பொன்னாடை அணிவித்து அவர்களைக் கெளரவப்படுத்தியதோடு மட்டுமின்றி, அவர்களுக்கு வழங்கி வந்த உதவித் தொகையினை ரூ.1000 ஆக உயர்த்தி இந்திய ஒருமைப்பாட்டிற்கு முன்னுதாரணமாக இன்றைய தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இருந்து வருகிறார்கள்" என்றார்.

இவ்விழாவில், பெரியகுளம் நாடாளுமன்ற உறுப்பினர் திரு ஆர். ராமசாமி, சுதந்திரப் போராட்டத் தியாகிகள், அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்களும் திரளாகக் கலந்து கொண்டார்கள்.

இவ்விழாவில் முன்னதாக, பள்ளி மாணவ, மாணவியரின் கலை நிகழ்ச்சி நடைபெற்றது.

முன்னதாக மாவட்ட ஆட்சித் தலைவர் திரு ஆர்.என். செளபே, இ.ஆ.ப., அவர்கள் அனைவரையும் வரவேற்றார். செய்தித்துறையின் சார்பில் இணை இயக்குநர் திரு பா. செயப்பிரகாசம் அவர்கள் நன்றி கூறினார்.

**துரை. தாமரைச் செல்வம்**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்**
**மதுரை மாவட்டம்**



கருத்துச் செல்வம் திருக்குறள்!

"திருக்குறளிலே சொல்லப்பட்ட கருத்துக்களை எப்படிப் பயன்படுத்தலாம் எந்த வகையில் பயன்படுத்தலாம் என்பதில் திருக்குறளிலே நாட்டம் உள்ளவர்கள் கவனம் செலுத்த வேண்டும். மற்றவர்கள் சொன்னதை துண்டுதுண்டாகச் இவர் ஒருவரே சொல்லி இருக்கிறார். பத்துப் பேர் சொல்லியதைத் திருவள்ளுவர் ஒருவரே சொல்லி இருக்கிறார். இன்னும் சொன்னால், இவர் சொன்ன பிறகுதான் மற்றவர்கள் எல்லாம் சொல்ல ஆரம்பித்தார்கள்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலே எழுதப்பட்ட திருக்குறளிலே ஹைட்ரஜன் இல்லையே, அணுக்குண்டு இல்லையே என்று சொல்லுவது பொருந்தாது. இந்நூல் எழுதப்பட்ட காலத்தையும் ஒப்பு நோக்க வேண்டும். முறையோடு ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.

திருக்குறள் எழுதப்பட்ட காலத்தில் அதற்கு ஒப்பான நூல் எதுவும் எழுதப்படவில்லை; உலகத்தில் மற்றவர்களிடத்தில் இல்லாத கருத்துச் செல்வமாம் திருக்குறள் நம்மிடத்திலே இருக்கிறது.

— பேரறிஞர் அண்ணா

# மனநலம்

## டாக்டர் ந. மாத்ருபூதம் அவர்களின் பதில்கள்:



**டாக்டர் ந. மாத்ருபூதம் அவர்கள், சென்னை அரசு மனநல நிலையத்தில் மனநல மருத்துவராகப் பணிபுரிந்து வருகிறார். 49 வயதான இவர், 1967-ஆம் ஆண்டு சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் பயின்றார். பின்னர், சென்னை மருத்துவக் கல்லூரியில் பயின்று டி.பி.எம்., பெற்று பின்னர் எம்.டி., பட்டமும் பெற்றார். 1991-ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழகம் இவருக்கு டாக்டர் பட்டம் வழங்கியது.**

**டாக்டர் ந. மாத்ருபூதம், ''தொழிற் சம்பந்த மான மனநலம்'' (Industrial Psychiatry Journal) என்ற ஆங்கில இதழின் ஆசிரியராக உள்ளார். மற்றும், நூற்றுக்கும் மேற்பட்ட நிகழ்ச்சிகளை, சென்னைத் தொலைக்காட்சி மற்றும் அகில இந்திய வானொலியில் அளித்துள்ளார். டாக்டர் மாத்ருபூதம் அவர்கள், பாமர மக்கள் படித்துத் தெரிந்து கொள்ளும் வகையில் மனநலம் குறித்த நூல் ஒன்றும் எழுதியுள்ளார். அவர் மனநலம் குறித்த வாசகர்களின் கேள்விகளுக்கு பதில் கூறுகிறார்:**

**எம். அன்பழகன்**
**புள்ளான்விடுதி**

**★ ஒருவரை (தெரிந்தவர்) சில நாட்களுக்குப் பின் நேருக்கு நேராகப் பார்த்தால் மனதில் பதக்கென்று ஒரு உணர்வு வருகிறதே ஏன்?**

**★ ஒன்றை நினைத்து தூங்கினால் ஏன் தூக்கம் வருவதில்லை? அதிர்ச்சிக்குள்ளான காட்சிகளைப் பார்த்தால் (ரத்தத்தை) பய உணர்வு ஏற்படுவது ஏன்?**

**★ மற்றொருவர் நினைப்பதை நான் சரியாகச் சில நேரங்களில் சொல்வதன் காரணம் என்ன?**

**★ கூட்டம் அதிகமாக இருக்கும் நேரத்தில் எழுதி னால் நடுக்கம் ஏற்படுவதன் காரணம் என்ன?**

நீங்கள் குறிப்பிட்டுள்ள அறிகுறிகள் மனப் பதட்டம் அல்லது மனப்பதட்ட நோயைச் சார்ந் தவை. உள்மனதில் திருப்தியின்மை, இனம் புரியாத பயம், நடுக்கம் முதலிய சிலசமயங்களில் பொது இடங்களிலும் குறிப்பிட்ட தருணத்திலும் (''ரத்தத்தைப் பார்த்து'' போன்ற) அதிகப் பதட்ட மாக வெளிப்படும். மனநல மருத்துவரைக் கலந் தாலோசியுங்கள். தியானத்தையும் நாடுங்கள் (Yoga, Tm etc) அதற்கும் ஒரு குரு தேவையாகும். மற்றவர் மனதில் இருப்பதைச் சிலசமயம் நீங்கள் உணர்வது உங்களுக்குள் மறைந்திருக்கும் ''பிறர் புலன் அறியும்'' (ESP) சக்தியின் காரணமாகவோ அல்லது ஒரு கூட நடக்கும் யதார்த்த சம்பவமா கவோ இருக்கலாம் (CO-INCIDENCE). இதைப் பெரிதுபடுத்தி மேலும் பதட்டத்திற்கு உள்ளாக வேண்டாம்.

**குமுதினிதேவி அன்பழகன்**
**கச்சிராபாளையம்**

**★ மனநோய் வருவதற்குக் காரணம் என்ன?...**

மனநோய் வருவதற்குப் பல காரணங்கள் உண்டு. உடற்கூறு சம்பந்தமான காரணங்கள், (BIOLOGICAL, GENETIC, BIOCHEMICAL etc.) உளக் கூறு சம்பந்தமான காரணங்கள், (Personality) (ஆளுமை) மற்றும் இதர உளவியல் காரணங்கள், சமூகக் காரணங்கள் (குடும்பம், சுற்றுப்புறச் சூழ்நிலை சம்பந்தப்பட்டவை). உதாரணமாக மனச்சிதைவு நோய் (Schizophrenia) பரம்பரை யாக, உடற்கூறு சம்பந்தமான மூளையில் ஏற்படும் ரசாயன மாறுதல் காரணங்களினால் ஏற்பட வல்லது. அதேபோல் மன எழுச்சி நோய் (Mania), தீவிர மனச்சோர்வு நோய் (Depression) கூட உடற்கூறு சம்பந்தமாக ஏற்படக்கூடியது.

ஆளுமைப் பாதிப்பு நோய்கள் (Personality Disorder) ஒருவரது சுபாவமான ஆளுமையையும், அவர் வளரும் சூழ்நிலையையும் பொறுத்து அமைகிறது. ஹிஸ்டீரியா எனப்படும் நோய்

வெளிப்படுத்தமுடியாத மனக்குழப்பம் போன்றவை உளவியல் காரணங்களால் ஏற்படும். குடிப் பழக்கத்திற்கு உடற்கூறு, ஆளுமை, சுற்றுப்புறம் மூன்றும் காரணமாக அமையலாம். பொதுவாக, எல்லா மனநோய்க்கும் இம்மூன்றும் ஓரளவு காரணமாக அமையலாம். ஆனால், அதில் நோயைப் பொறுத்து ஒன்றின் பங்கு அதிகமாக இருக்கக்கூடும் (Generally, mental illness can said to be a bio psycho social phenomenon)

கரண்ட் ட்ரீட்மெண்ட் தீவிர மனச்சோர்வு, மனச்சிதைவு நோய் போன்றவற்றிற்குச் சிறந்தது. மின்சாரம் 70-100 வோல்ட் அளவில் செலுத்திட்டால், நோயாளிக்கு ஒருசில நிமிடங்களுக்கு நினைவு தப்பிவிடும். ஆதலால், வலிக்கும் என்பதற்குச் சாத்தியம் இல்லை. ஆனால், பாதுகாப்பான முறையில் மனநல மருத்துவரால் மட்டும் இச்சிகிச்சை அளிக்கப்பட வேண்டும்.

திருடர்களிடம் மன இயல் சார்பில் அமைந்த முறைகளில் உண்மையை வரவழைக்கலாம். ஆனால், சிலரிடம் எந்த முறையிலும் வரவழைக்க முடியாது. சுயநினைவோடு சொல்லப்படாத உண்மைகள், திருடனாயிருந்தாலும், அவருக்கு எதிராக நீதி மன்றத்தில் எடுத்துக் கொள்ளப் படமாட்டாது. இது ஒருவருக்குச் சட்டம் அளிக்கும் நியாயமான பாதுகாப்பே அன்றி வேறு இல்லை.

## வழுக்கையைத் தடுக்க முடியுமா?

**வழுக்கையைத் தடுக்கக் கூடிய மருந்தொன்று அமெரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.**

**தலையில் வழுக்கை விழுவதற்குப் பல காரணங்கள் உண்டு.**

**உடலில் 'ஆண்ட்ரோஜென்' (Androgen) என்னும் ஹார்மோன் இருப்பதனாலும் வழுக்கை ஏற்படுகிறது. இத்தகைய ஹார்மோன் உள்ள ஆண்களுக்குத் தலையின் முன்பகுதியிலோ அல்லது பின்னந்தலையிலோ அல்லது தலையின் மையத்தில் வட்டவடிவமாகவோ வழுக்கை விழக்கூடும். பெண்களுக்கோ தலை முழுவதிலும் ரோமம் உதிரக்கூடும்.**

**'மினோக்ஸிடில்' (Minoxidil) என்னும் மருந்து இவ்வாறு முடி உதிர்வதை வெற்றிகரமாகத் தடுக்கிறது என்று கண்டறியப்பட்டது.**

**'ரோகெய்ன்' (Rogaine) என்னும் பெயரில் இந்த மருந்து விற்கப்படுகிறது. முடி உதிர்வதைத் தடுப்பது மட்டுமன்றி, மீண்டும் ஓரளவு முடி வளரச் செய்யவும் இந்த மருந்து துணை புரிகின்றதாம்.**

**தலையின் பின்புறத்திலும், பக்கவாட்டிலும் இருந்து எடுக்கப்படும் ரோமங்கள், வழுக்கைப் பகுதியில் அறுவைச் சிகிச்சை மூலம் பொருத்தப்பட்டு வளர விடப்படுகின்றன. இதற்கான நவீன தொழில்நுட்பம் வேகமாக வளர்ந்து வருகிறது!**

**—அமெரிக்கத் தகவல் நிலையம்**

**பாத்திமாபீபீ**
**சென்னை-2**

**★ டாக்டர், எனக்கு வயது 26, தற்போதுதான் திருமணமாகியுள்ளது (2 மாதங்கள் ஆகின்றன). ஒரு வருடத்திற்கு முன்பு எனக்குச் சீதபேதியும், ஜுரமும் இருந்தது. அதற்கான மருந்துகள் சாப்பிட்டு உடல் நிலை தேறிவிட்டது. ஆனால், அப்போது முதல் எனக்குத் திடீரென கோபம் வருகிறது அல்லது மனம் இறந்து விடுவாய் என கூறுகிறது. இதற்கான மருந்து ஏதாவது கூறுங்கள். உடல் நலமின்றி இருந்தபோது யாராவது பேசினாலும், சிரித்தாலும், சாப்பிட்டாலும் எனக்குக் கோபமாக வந்து கொண்டிருக்கிறது. ஆனால், தற்போது இவ்வாறில்லை. இருப்பினும் என்னால் சந்தோஷமான வாழ்க்கை மேற்கொள்ள இயலவில்லை. இதற்கான காரணத்தை விளக்குமாறு பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.**

உங்களுக்கு ஏற்பட்டிருப்பது ஒருவிதமான மனச்சோர்வு. இதற்குப் பேச்சு மூலமும் (Psychotherapy) தேவைப்பட்டால் மருந்துகள் மூலமாகவும் நிவர்த்தி காணலாம். மனநல மருத்துவரை அணுகுங்கள்.

**★ என்னுடைய உடல்நலமின்மை ஒருபுறம் இருக்க, அதை நினைத்து மனம் அதே கவலையாக உள்ளது. BP-Sugar - உடல் உளைச்சல் போன்றவற்றினால் மனம் அதையே நினைத்து வேதனை அடைகிறது. தூக்கமும் இல்லை. இதற்கு என்ன செய்வது ஆலோசனை கூறவும் (மருந்து சாப்பிட்டும் அதேபோல் இருக்கிறது).**

சர்க்கரை வியாதி, இரத்த அழுத்தம் போன்றவை, மனம் பதட்டம், சோர்வினால் தீவிரமடையவல்லவை. மற்றும் மூட்டுவலி, ஆஸ்த்மா போன்றவையும் அப்படியே, மருந்தோடு, உடற்பயிற்சி, தியானமுறைகள், பதட்டமின்றி இருத்தல் உடற்சோர்வையும் போக்கும். ஆகாரத்திலும் கட்டுப்பாடு தேவை. அதைவிட்டு மனதைக் குழப்பத்திற்குள்ளாக்கினால், உடல் நோய் அதிகமாகும். அது மேலும் மனச்சோர்வு குழப்பத்தை அளிக்கும் (It is a vicious circle). சுபாவத்தில் மனப்பதட்டம் உள்ளவர்கள், மாரடைப்பால் அவதியுறும்போது, அவர்களுக்கு, மனப்பதட்டம் இல்லாதவர்களை விடப் பாதிப்பு அதிகம் எனக் கண்டுபிடித்துள்ளனர். அதேபோல் மனச்சோர்வு, பதட்டம், ரத்த அழுத்தத்தை அதிகமாக்க வல்லது, இரத்தத்தில் சர்க்கரை அளவை அதிகமாக்க வல்லது. ஆதலால், தேவையானால் மனநல மருத்துவ உதவியோடு மனதைச் சமன்படுத்த முயற்சியுங்கள். உடல் நோயும் குறையும்.

**சம்பத்**
**பெரியார் மாவட்டம்**

**★ தொடர்ந்து ஒரே பிரச்சினையை இரவும் - பகலும் சிந்தித்தால் மனநலம் பாதிக்கப்படுமா? விரிவாகக் கூறவும்.**

நீங்கள் கூறுவது, திரும்பத் திரும்ப மனதை வாட்டும் அசம்பாவித அல்லது அர்த்தமற்ற

# வெய்யிலில் சுற்றாதீர்!

உலகின் சில நாடுகளில் அபாயகர மான 'தோல் புற்றுநோய்' பரவி வருவதாக உலகச் சுகாதார நிறுவனம் கவலை தெரிவித்துள்ளது. 'மாலிக்னன்ட் மெலனோமா' (Malignant Melanoma) என்று அழைக்கப்படும் இந்தத் தோல் புற்றுநோய் ஆண்டிற்கு 5 முதல் 10 சதவீதம் வரையில் பெருகி வருவதாகவும் அந்த நிறுவனம் எச்சரித்துள்ளது.

இது உயிருக்கு ஆபத்தை விளைவிக்கக் கூடிய நோய் ஆகும்; ஆனால் கவனமாக நடந்து கொண்டால் இந்த நோய் ஏற்படாமல் தடுக்க முடியும் என்று உலகச் சுகாதார நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

கடும் வெயிலில் திரிவதனால் இந்த நோய் ஏற்படுகிறது. தோலைப் பாது காக்கக் கூடிய கிரீம்களை உபயோகித்தல், தலைக்குத் தொப்பி அல்லது குல்லாய் போன்றவற்றை அணிதல், பாதுகாப் பான உடைகளை அணிதல் போன்றவற் றின் மூலம் இந்த நோய் ஏற்படாமல் தடுக்க முடியும். சிவந்த மேனி உடைய வர்கள் வெயிலில் திரிந்தால், அவர் களுக்கு இந்த நோய் ஏற்படக்கூடிய சாத் தியக்கூறு அதிகம். இவ்வாறு உலகச் சுகாதார நிறுவனம் எச்சரித்துள்ளது.

அமெரிக்கா, நியூஸிலாந்து, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளின் சில பகுதிகளில் ஆண்டுதோறும் இலட்சம் பேரில் 40 பேர் இந்த நோயால் பாதிக்கப்படுகின்றனர். பிரிட்டனில் ஆண்டிற்கு 3,500 பேர் இந்த நோயால் தாக்கப்பட்டு அவதியுறுகின்றனர். அவர்களுள் சுமார் 800 பேர் இறந்து போகின்றனர்.

ஸ்காட்லாந்தில் மட்டும் கடந்த பத்து ஆண்டுகளில் மெலனோமா நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் தொகை 80 சதவீதமாக அதிகரித்துள்ளது. வெள்ளை யர்கள் வெளிநாடுகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு, வெயிலில் அலைந்து திரிவதனால் அவர்கள் இந்த நோயின் பாதிப்புக்கு உள்ளாகின்றனர் என்று உலக சுகாதார நிறுவனம் கருத்து தெரி வித்துள்ளது.

ஐரோப்பாவிலுள்ள 76 நாடுகளில், ஸ்விட்சர்லாந்து நாட்டில்தான் தோல் புற்றுநோய் சாவுகள் அதிகமாக உள்ளன வாம். ஸ்விஸ் மக்கள் அந்நாட்டின் மலைப்பகுதிகளிலும், ஏரிப்பகுதிகளிலும் வெயிலில் அலைகின்றனர். வெயிலில் பல விளையாட்டுக்களில் ஈடுபடுகின் றனர். இதுதான் அவர்களை இந்த நோய் தாக்குவதற்குக் காரணமாகும் என்று உலக சுகாதார நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

—அமெரிக்கத் தகவல் நிலையம்

எண்ணங்களானால் அதுவே ஒரு மன நோய் ஆகும் (Obsession). ஆனால், ஒரே பிரச்சினை யைப் பற்றி நினைக்காமல் அதைத் தீர்ப்பதைப் பற்றி யோசியுங்கள். தீர்க்கமுடியாத, ஆனால், உடன் இருக்கும் பிரச்சினைகளை நிழல் போல் நினைத்து மறக்க முயற்சியுங்கள் (What cannot be cured must be endured). அதை விடுத்து தீர்க்க முடியாத அல்லது நீங்கள் தீர்க்க முயற்சிக்காத பிரச்சினையை நினைப்பதே உங்கள் தலையாய பிரச்சினை என்பதை உணருங்கள். தேவை யானால் உளவியல் நிபுணர் அல்லது மனநல மருத்துவரை அணுகுங்கள்.

**இ. குழந்தைராஜ்**
**மேல்பழங்கூர்**

**★ கடுமையான மன உழைப்பினால் (Intense mental work) மனநலம் பாதிக்கப்படுமா? என் னென்ன மனம் மற்றும் உடல் நலப் பாதிப்புகள் ஏற்படும்? தெளிவான விளக்கம் தேவை.**

உங்கள் கேள்வியைப் படித்ததும், எனது மருத்துவ மாணவ நாட்களில் எனது மருத்துவ பேராசிரியர் டாக்டர் கே.வி. திருவேங்கடம் கூறியது நினைவுக்கு வருகிறது. அவர் கூறுவார், 'பெரும் கடின உழைப்பால் உடல் பாதிக்கப்படு வதில்லை. (Nobody suffers because of hardwork) அதேபோல் கடின மன உழைப்பாலும் ஒரு அபாயமும் இல்லை. மாறாக, தீவிர சிந்தனை, பிரச்சினைகளைத் தீர்க்கவும், ஒரு விஷயத்தை ஆழமாகப் புரிந்து கொள்ளவும் உதவும். அஃதன்றி வாளாவிருப்பதே மன நோய்க்கு வழிகோலும். (Idle mind is a Devil's workshop) ஆனால், கட்டுப் படுத்தமுடியாத அளவு, நிறைய தொடர்பற்ற எண்ணங்கள் (Recurring of thoughts and flight of ideas), மன எழுச்சி நோயின் அறிகுறிகள் எனலாம்.

**எம். சீரங்கன்**
**தே. சீத்தப்பட்டி**

**★ மனநலம், உடல்நலம் இவை இரண்டிற்கும் சம்பந்தம் உண்டா? ஆசிரியர் பாடம் நடத்தும் போது எனது மனம் பல சிந்தனையுடன் அங்கு மிங்குமாக அலைகின்றது போல் இருக்கிறது. இது எதனால்? மனநலம் ஏதேனும் பாதிப்படைந் துள்ளதா? நான் அல்சரால் பாதிக்கப்பட்டு இருக் கின்றேன். அதனால் மன நலத்திற்குத் தீங்கு உண்டா? மனநலம் நன்றாக இருக்கக் கடைப் பிடிக்க வேண்டிய வழிமுறைகள் என்னவென்று கூறவும்.**

மனமும் உடலும் இணைந்து செயல்படக் கூடியவை. மனம் உடலையும், உடல் மனத்தையும் பாதிக்கக் கூடியவையே. இவற்றை உடல், உள சம்பந்தமான நோய்கள் எனக் கூறுவர் (Phycho physiological disorder). இவை தன்னிச்சை நரம்பு மண்டலம் பாதிக்கப்படுவதால் ஏற்படும். இவையே உணர்வுகளைத் தூண்டும் மையமாகவும் பல நேரம் அமையும் (Automatic nervous system). உங்களுக்கு வகுப்பில் ஏற்படுவது சிந்தனைச் சிதறல், அல்லது உந்துதல் இல்லாமை, (lack of motivation) ஈடுபாடு இல்லாமை (lack of interest) ஆகியவற்றால் ஏற்பட்ட விளைவுகள். உந்து தலோடு செய்வனவற்றில் ஈடுபாட்டை அதிகப் படுத்திக் கொள்ளுங்கள். சினிமாப் பாடலை ரசிக்கும் நீங்கள், பள்ளிப்படிப்பை உங்கள் எதிர்கால வாழ்வின் அஸ்திவாரமாக நினை யுங்கள். இதுவே உண்மையான கட்டடம். மற் றெல்லாம் காற்றில் எழுப்பப்படும் அரண்மனைக் கூடம்!

**(இன்னும் வரும்)**

## திருநெல்வேலி மத்தியக் கூட்டுறவு வங்கி லிமிடெட், திருநெல்வேலி - 627 003.

| | | |
|---|---|---|
| சேமிப்புக் கணக்கு | (Saving Deposit) | 6.50% |
| நிர்ந்தர வைப்பு | (Fixed Deposit) | 6.50% |
| 46 நாட்கள் முதல் 270 வரை | | 11.50% |
| 271 நாட்கள் முதல் 364 நாட்கள் வரை | | 11.25% |
| ஒரு வருடமும் அதற்கு மேலும் | | 11.50 |

அணையா விளக்குச் சேமிப்புத் திட்டத்தில்
முதலீடு செய்து அதிகப் பயன் பெறுவீர்

தேனருவி சிறு சேமிப்பு
ஸ்ரீ கோமதி குழந்தைகள் சிறு சேமிப்பு
திட்டங்களில் அதிகப் பலன் உண்டு

பாதுகாப்புப் பெட்டக வசதி உண்டு.

இன்னும் நல்ல பல திட்டங்களும் உண்டு.

உங்களுக்குச் சேவை செய்திடத் தலைமையகம் மற்றும் 33 கிளைகள்

ந. கந்தசாமி
செயலர்

ச. காந்தன்
தனி அலுவலர்

# ஆட்டின் நலம் காப்போம் நாட்டின் வளம் சேர்ப்போம்

**டாக்டர் சித்ரவேல், டாக்டர் ஸ்ரீதரன், டாக்டர் இராமானுஜம்.**
**திட்ட இயக்குநர் அலுவலகம்,**
**ஆடு வளர்ப்புத் திட்டம்.**
**சென்னை**



நம் நாட்டில் பசுமைப்புரட்சி மூலம், உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்றிருந்த போதிலும், ஊட்டச்சத்துக்கள் இன்னமும் சரியான அளவில் கிடைப்பதில்லை. ஊட்டச்சத்துக்களில் மிகவும் முக்கியமானது புரதச்சத்தேயாகும். தாவர புரதச்சத்தை விட, விலங்கினங்களிலிருந்து கிடைக்கும் புரதச்சத்து மிகவும் உயர்வானது. இது போன்ற உயர்வான புரதச்சத்து, முட்டை, பால், இறைச்சியிலிருந்து கிடைக்கிறது.

மக்களுக்குத் தேவையான புரதச் சத்தை ஈடுகட்ட இறைச்சி உற்பத்தியை அதிகரிக்க வேண்டிய கட்டாய நிலையில் உள்ளோம். முக்கியமாக மக்கள் விரும்பி உண்ணும் ஆட்டிறைச்சியின் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும். இதற்கு மிகவும் உகந்தது செம்மறியாடு வளர்ப்பு. வாழ்க்கைத் தரம் உயர, பொருளாதாரம் வளர வேண்டும். இதில் பெரும் பங்கு கால்நடை வளர்ப்புத்துறைக்கு உண்டு. மற்ற எந்த விவசாயத்தை சார்ந்த தொழில்களையும் விட ஆடு வளர்ப்பு நவீனமாக்கப்படவில்லை. காரணம் செம்மறியாடு வளர்ப்பு தொன்றுதொட்டு ஒரு சமுதாயத்தினரால் மட்டுமே மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவர்களின் வாழ்க்கை செம்மறியாடு வளர்ப்பை மட்டுமே நம்பி இருக்கிறது. இவர்கள் தங்களுக்குத் தெரிந்தவற்றை பரம்பரையாக கையாளப்பட்டு வந்த சில தவறான முறைகளைத்தான் இதுபோன்ற ஆடு வளர்ப்போர் மத்தியில் நிலவிவரும் மூடநம்பிக்கைகளையும் அறியாமையையும் போக்கி நவீன முறையில் செம்மறி ஆடு வளர்ப்பை மேம்படுத்தி அதனால் இறைச்சி அளவை அதிகரிக்கத் தமிழக அரசு, ஐரோப்பியப் பொருளாதார சமுதாய நிதி உதவியுடன் ஆடு வளர்ப்புத் திட்டம் ஒன்று 13 கோடியே 67 இலட்ச ரூபாய் செலவில் 1989-90-ஆம் ஆண்டில் துவக்கியுள்ளது. இத்திட்டம் திட்ட இயக்குநர் நிர்வாகப் பொறுப்பில் இயங்கி வருகிறது. இத்திட்டத்தின் ஒரு அங்கமாக ஆட்டின நோய் புலனாய்வுப் பிரிவு ஆராய்ச்சி அலுவலர் தலைமையில் இயங்கி வருகிறது.

நம் நாட்டில் 48 மில்லியன் செம்மறியாடுகள் உள்ளன. இதன் மதிப்பு ரூ.1500 கோடியாகும். நம்நாட்டில் ஆண்டுதோறும் 5 மில்லியன் டன் ஆட்டிறைச்சி உற்பத்தி செய்யப்படுகிறது. தமிழ் நாட்டில் 1982-ஆம் ஆண்டு கணக்கீட்டின்படி 5.5 மில்லியன் செம்மறி ஆடுகள் உள்ளன. இது இந்தியாவின் மொத்த எண்ணிக்கையில் 12 சதவிகிதமாகும். தமிழ்நாட்டில் செம்மறியாடுகள் பொதுவாக இறைச்சிக்காக மட்டுமே வளர்க்கப்படுகின்றன. அதே சமயம் ஆடு வளர்ப்பில் தோல் மூலமாக நாட்டிற்கு மிகவும் தேவையான அன்னியச் செலாவணி (ரூ.2000 கோடி) பெருமளவில் கிடைக்கிறது. இந்த அன்னியச் செலாவணி அதிகமான அளவில் கிடைக்க வேண்டுமானால், தோலின் தரம் உயர்ந்ததாக இருக்க வேண்டும். கால்நடைகளின் தோலுக்கு மதிப்பு அதன் தரத்தை வைத்துதான். தரமான தோல் கிடைக்க வேண்டுமானால் செம்மறியாடுகளைத் தாக்கும் சரும வியாதிகளிலிருந்து காத்தல் அவசியமாகும். பெரும்பாலான சரும வியாதிகள் ஒட்டுண்ணிகளால் ஏற்படுகிறது. ஒட்டுண்ணி தொல்லைகளினால் ஆடுகள் மெலிந்து போவதுடன் தோலின் தரத்தையும் தாழ்த்துகிறது.

தோல் உடலின் ஆரோக்கியத்தைக் காட்டுகிறது. நல்ல ஆரோக்கியமான ஆடுகளில் இருந்து தரமான தோல் கிடைக்கிறது. ஆட்டின் தோலைப் பாதிக்கும் பல நோய்களில் சொறிநோயும் ஒன்று. ஆடு வளர்ப்பில் சொறி நோய்த் தடுப்பு மிக முக்கிய அங்கமாகிறது. ஆடுகளைப் பாதிக்கும் சொறி - 'சார்காட்டிக்', 'சோராப்டிக்', 'டெமோடெக்' என மூன்று வகைப்படும். அதிகமாகக் காணப்படுவது 'சார்காட்டிக்' சொறி ஆகும். இந்நோய் சிற்றுண்ணியால் ஏற்படுகிறது.

**ஒட்டுண்ணி உடற்கூறும் இன விருத்தியும்**

'சார்க்காட்டிக்' ஒட்டுண்ணி மிகச் சிறிய அளவுடையது. 0.4 மி.மீ. அளவில் இருப்பதால் நுண்பெருக்கியால்தான் பார்க்க முடிகிறது வட்ட வடிவத் தோற்றம்; மிகக் குறுகிய கால்கள் உடலுக்கு வெளியே நீளாமல் இருக்கும்; வரிகளும் முக்கோண வடிவச் செதில்களும் உண்டு; தோலின் புறப்பாகத்தில் ஆழமான துளைகளைப் போட்டு, அதனால் தோல் திசுக்களில் இருந்து வரும் கசிவுநீரைச் சினையுள்ள ஒட்டுண்ணிகள் உண்ணும். தோலின் துளைகளில் முட்டையிடும்; முட்டைகள் மூன்று நாட்களில் பொரிந்து புழுப்பருவத்தை அடைகிறது. ஒட்டுண்ணிப் புழுக்கள் தோலின் மேற்பாகத்திற்கு வந்து திசுக்களையும், ஊநீர்க் கசிவையும் உண்ணுகிறது. புழுக்கள் வளர்ந்து முன் முதிர்வுப் பருவத்தை அடைகிறது; (ஒட்டுண்ணி நிம்ப்) தோலுப்பிற்குப் பிறகு வளர்ந்த ஒட்டுண்ணியாகிறது.

**நோய் உண்டாக்கும் முறை**

தோலின் மேற்பாகத்தில் அதிக அளவில் குழிகளை ஏற்படுத்தி திசுக்களை ஒட்டுண்ணி தனது இரம்பம் போன்ற வாய்ப்பகுதியினால் துண்டிக்கிறது. ஒட்டுண்ணியின் எச்சிலிலுள்ள நச்சுத்தன்மையாலும்,

தொடர்ந்து தோலைத் துளைப்பதாலும், ஒவ்வாமை காரணத்தாலும் தோலில் அரிப்பு ஏற்படுகிறது. இதனால் நோய் பாதித்த தோல் பகுதியை முரட்டுப் பகுதியில் தேய்க்க முயற்சிக்கிறது. ஒட்டுண்ணி எச்சிலில் உள்ள நச்சுப்பொருள் இரத்தத்தில் கலக்கும்போது கல்லீரலின் செயல்திறன் பாதிக்கப்படுகிறது.

**நோய்க்குறிகள்**

பெரும்பாலும் வயது வந்த ஆடுகளில் நோய் தாக்கல் காணப்படுகிறது. இளம் ஆடுகளில் ஒரு சதவிகிதம் அளவில் காணப்படுகிறது. சில மந்தைகளில் 25 முதல் 27 சதவிகிதம் வரை பாதிப்புடன் நோய்க்கிளர்ச்சி ஏற்படும்.

முடி குறைவாக உள்ள பகுதிகளாகிய முகம், காது, தொடைகளின் இடைவெளி, முன்தோளின் இடைவெளி ஆகியவற்றில் சொறி நோய் அதிகமாக காணப்படுகிறது. திட்டுத்திட்டாக முடிகள் உதிர்வதும், தோல் சிவந்து விடுவதும், அதன் திசுக்களின் கணப்பணிமாணம் அதிகமாவதும் (படம்-2) தோலின் மேல் பாகத்தில் ஒரு வகையான திரவம் சுரப்பதும் முக்கியமான அறிகுறிகள் ஆகும். தோலின் அரிப்புத் தன்மையால் ஆடுகள் சரியாக மேயாமலும், அமைதியின்றியும் காணப்படும்.

**சிகிச்சை மற்றும் தடுப்பு முறைகள்**

1. ஒட்டுண்ணிக் கொல்லி மருந்துகளான 'பிளச்சி', 'மாலத்தியான்', 'அசன்டால்', 'பியூடாக்ஸ்' போன்ற மருந்து வகைகளைத் தக்க அளவில் கலந்து ஆட்டைத் தோய்த்து எடுக்கும் முறை சிறந்தது.

2. தோலின் மேல் பாகத்தில் தேய்த்துவிட 'பென்சைல் பென்-சோவெட்' திரவக்கலவை மிகவும் சிறந்தது.

3. அசன்டால் (0.2 சதவிகிதம்) களிம்பு தோலில் தேய்த்தால் குணம் கிடைக்கும்.

4. ஐவர்மெய்டின் மருந்தினை ஊசிமூலம் (2 மிகி/கிலோ எடைக்கு) செலுத்தினால் நோய் குணமாகும்.

5. ஆட்டை அடைக்கும் பட்டிகள் காற்றோட்டம் உள்ளதாக இருந்தால் மிகவும் நல்லது. நெரிசலாக ஆட்டை அடைக்கக்கூடாது.

6. நிலங்களில் ஆடுகளைக் கிடை போடும்போது அவ்வப்போது மேற்படி இடங்களை மாற்றிக் கொண்டே இருக்க வேண்டும்.

7. ஆடு அடைக்கும் பட்டிகளிலும், கொட்டகைகளிலும் 0.3 சதவிகிதம் அசன்டால் தெளித்தல் நல்லது.

8. ஆடுகளுக்குத் தீவனம் போடுவதில் கவனம் செலுத்தி, தாதுஉப்பு உயிர்ச்சத்து ஆகியவற்றின் பற்றாக் குறை ஏற்படாது பராமரித்தல் வேண்டும்.

ஆடுகளுக்கு இது போன்ற சொறிநோய் ஏற்பட்டால் மற்ற ஆடுகளுக்கும் பரவும். உடனடியாக அருகில் உள்ள கால்நடை உதவி மருத்துவரை அணுக வேண்டும். ஆடு வளர்ப்போரின் நன்மைக்காக பிரத்தியேகமாக ஆடு வளர்ப்புத் திட்டம் செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர், வட ஆர்க்காடு-அம்பேத்கர், திருவண்ணாமலை-சம்புவராயர், தர்மபுரி, சேலம், தென்னார்க்காடு ஆகிய மாவட்டங்களில் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் பணிபுரியும் களப்பணியாளர்களை அணுகி தகுந்த சிகிச்சையும் அறிவுரையும் பெற கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.


**தமிழரசு** (அரசு ஏடு)

உங்கள் வீடு தேடி
வர வேண்டுமா?
உடனே
சந்தாதாரராகச்
சேருங்கள்!

ஆண்டுச் சந்தா: (தமிழ்) ... ரூ. 72
ஆங்கிலப் பதிப்பு ... ரூ. 36

தமிழரசில்
விளம்பரம் செய்து
பயனடையுங்கள்!

உள்ளே முழுப் பக்கம் ... ரூ.2000
உள்ளே அரைப் பக்கம் ... ரூ.1000

**விவரங்கட்கு:**

உதவி இயக்குநர்
'தமிழரசு' அலுவலகம்
அரசினர் தோட்டம்
சென்னை-600 002.



# கிண்டி தேசியப் பூங்கா- ஒரு வரலாற்றுப் பின்னணி!

சென்னை நகரத்தின் மையப் பிரதேசத்தில் அமைந்த மிகப் பெரிய பசுமையான வனப்பிரதேசமாக அமைந்துள்ளது கிண்டி தேசியப் பூங்கா. இது 550 புள்ளி மான்களையும் மற்றும் 100-க்கு அதிகமான வெளிமான்களையும் கொண்ட அழகான வனப்பிரதேசமாகும். இதனுடன் மேலும் சுமார் 120 வகையான பற்பல பறவை இனங்களும் இங்கு உள்ளன. இது இயற்கை எழிலை விரும்புபவர்களுக்கு ஒரு சொர்க்க பூமி ஆகும்.

பிரிட்டிஷ் அரசினர் ஆண்டு வந்த காலத்தில் திரு கில்பர்ட் ரிக்கட்ஸ் என்னும் தனிப்பட்ட குடிமகன் இந்த இடத்தில் ஒரு பெரிய கட்டடத்தை ஏற்படுத்தி வேட்டையாடும் இருப்பிடமாகப் பயன்படுத்தி வந்தார். இவர் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு 1821-இல் ரூபாய் 35,000-க்கு இந்த வனப் பிரதேசத்தை விற்றுவிட்டார். பிறகு இந்த இடம் பிரிட்டிஷ் ஆளுநரின் வாராந்திர முடிவில் தங்கும் இடமாகவும் வேட்டையாடும் இடமாகவும் பயன்படுத்தப் பட்டது.

1947-இல் இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு ஆளுநரின் மாளிகை இந்த இடத்திற்கு மாற்றப்பட்டது. இந்தக் காலத்தில் சில புள்ளி மான்கள் இந்த வனப்பிரதேசத்தில் அறிமுகப்படுத்தப் பட்டு, பிறகு அவை எண்ணிக்கையில் வளர்ச்சி அடைந்துள்ளன. இப்பிரதேசம் தேசியப் பூங்காவாக அறிவிக்கப்பட்டது. தற்போது இப்பிரதேசத்தில் விலங்குகள் மற்றும் பறவைகள் வேட்டையாடுதல் தடை செய்யப்பட்டுள்ளது.

இந்தத் தேசியப் பூங்காவில் விலங்குகளின் பராமரிப்பு மிகவும் விருப்பம் உள்ளதாகும். இந்த விலங்குகள் வறட்சிக் காலத்தில் மிகவும் கவனத்தோடு பாதுகாக்கப்படுகிறது. வறட்சிக்காலத்தில் மிகவும் கவனத்தோடு பாதுகாக்கப்படுகிறது. வறட்சிக்காலத்தில் இங்குக் காணப்படும் புல் தரைகள் மிகவும் காய்ந்து காணப்படுவதால் விலங்கினங்கள் இவற்றை உண்ண முடியாத நிலை ஏற்படுவதால் தமிழ்நாடு வனத்துறை நாள் ஒன்றுக்கு 1000 கிலோ பச்சைப்புற்களை இந்த விலங்குகளுக்கு உணவாகக் கொடுக்க ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. இந்தப் பச்சைப் புல் இனங்கள் கிண்டி தேசியப் பூங்காவில் குறிப்பிட்ட பத்து வகையான இடங்களில் கொடுக்கப்படுகின்றது. தற்போது இந்த விலங்குகளுக்குத் தண்ணீர் இழுவையோடு (Power triller)) கிடைக்கப்பட்ட தண்ணீர்த் தொட்டிகளின் மூலம் எடுத்துச் செல்லப்பட்டு பூங்காவில் ஆங்காங்கே அமைக்கப்பட்ட செயற்கையான தண்ணீர்த் தொட்டிகளில் தண்ணீர் ஊற்றப்பட்டு விலங்குகள் பருகுவதற்கு உகந்த வகையில் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

இப்பூங்காவில் சில பிறநாட்டுத் தாவர இனங்கள் வளர்க்கப்பட்டு வருகிறது. இத்தாவர இனங்களுடன் வேலிக்காத்தான் முற்செடிகளும் வளர்கின்றன. இம்முற்செடி விரும்பதகாத இனமாகும். ஆகையினால் இதனை உடனுக்குடன் வேருடன் பிடுங்கி எடுக்கப்படுகிறது. வெளிமான் இனங்கள் திறந்த பரந்த இடத்தில் மட்டும் வசிக்க விரும்புகின்றன. மற்றும் சின்ன புதர்களில் உள்ள முற்செடிகளை வேருடன் உடனுக்குடன் பிடுங்கி எடுக்கப்படுகிறது. வெளிமான்கள் விரும்பும் இடத்தை 'வெளிமான் மைதானம்' என அழைக்கிறோம்.

இப்பூங்காவில் குடியிருக்கும் பணியாளர்களுக்கும் பூங்காவில் வாழும் விலங்குகளுக்கும் குடிநீர் வழங்குவது என்பது வனத்துறையின் பொறுப்புள்ள செயலாகக் கருதப்படுவதால் இது முக்கியமான பணியாகும். இதுமட்டும் அல்லாது பொதுமக்களுக்குக் குடிநீர் வழங்க இந்தத் தேசியப் பூங்காவில் அமைந்துள்ள அப்பளாங்குளத்திலிருந்து குழாய் மூலம் எடுத்துவரப்பெற்று விநியோகிக்கப் படுகிறது. முக்கியமாக வேளச்சேரி பகுதிகளிலும் மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளிலும் சுமார் 1500 லிட்டர் தண்ணீர் பொதுமக்களுக்குத் தினமும் விநியோகம் செய்யப்படுகிறது.

குறிப்பாக, இப்பூங்காவில்வெளியிலிருந்து கொண்டு வரப்பட்ட செடி இனங்களோடு விலங்குகளும் இங்கு வாழ்கின்றது. சில பன்றிகள் இந்த வனப் பூங்காவில் உட்புகுந்து இனப்பெருக்கம் செய்து வருகின்றது. எனவே, இவ்வகையான வெளி விலங்குகளைப் பொறி வைத்து வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. மேலும், நாய்கள்

**சுகாதோ தத், இ.வ.பா.,**
**வன உயிரினக் காப்பாளர்**

# நெல் உற்பத்தியைப் பெருக்குவது எப்படி?

வல்சலம் மாணிக்கவாசகம்
வேளாண்மைத்துறை
இணை இயக்குநர்
திருநெல்வேலி

வளர்ந்து வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப உணவு தானிய உற்பத்தியை உயர்த்துவது மிகவும் இன்றியமையாதது ஆகும். இந்த இலக்கினை அடைந்திட அரசு பல வழிகளிலும் முனைப்புடன் செயல் பட்டு வருகிறது. வேளாண் விஞ் ஞானிகளால் கண்டுபிடிக்கப்படும் புதிய தொழில் நுட்பங்கள் உடனுக் குடன் விவசாயிகளைச் சென்றடைய வேளாண் துறை களப் பணி யாளர்கள் கிராமங்களில் முகாம் மேற்கொண்டு தொழில் நுட்பங் களைப் பரவலாக்குகின்றனர்.

**அரசின் குறிக்கோள்**

தற்பொழுது அரசின் குறிக் கோள் கார்ப் பருவத்தில் ஏக்கருக்கு 4.0 மெ.டன் நெல் உற்பத்தி செய்வதாகும். அதாவது ஏக்கருக்கு 2½ மேனி மகசூல் பெறுவதாகும். பல முன்னோடி விவசாயிகள் இச் சாதனையை ஏற்கெனவே அடைந் துள்ளனர். இதனை ஒப்பு நோக்கு கையில் கார்ப் பருவத்தில் ஏக்கருக்கு 4.0 மெ. டன் என்பது எளிதில் சாதனை புரியக் கூடிய ஒன்றே. இச் சாதனையை அனைத்து விவசாயி களும் பெற்றிடப் பின்வரும் தொழில் நுட்பங்களைத் தவறாது கடைப்பிடித்திடக் கேட்டுக்கொள் கிறேன்.

**கோடை உழவு**

கோடை மழை பெய்தவுடன் கோடை உழவு செய்தல் வேண்டும். இவ்வாறு செய்வதால் தொடர்ந்து பெறப்படும் மழை வயலில் சேகரிக் கப்படுகிறது. மண் அரிமானம் தவிர்க்கப்படுகிறது. களைகள் கட் டுப்படுத்தப்படுகிறது. உரிய நேரத் தில் விதைப்புப் பணி மேற்கொள்ள ஏதுவாகிறது.

**உயர் விளைச்சல் ரகங்கள்**

கார்ப் பருவத்திற்கு ஏற்ற உயர் விளைச்சல் ரகங்கள் ஐ.ஆர். 50, அம்பை 16, அம்பை 17, அம்பை 18, ஆடுதுறை 36, டி.கே.எம். 9 போன்ற ரகங்கள் ஆகும். கார்ப் பருவத்தில் பிந்திய கால விதைப்பு (ஜூலை மாதம்) மேற்கொள்ளும் போது குலைநோய்த் தாக்குதலுக்கு இலக்காகும் ஐ.ஆர். 50 டி.கே.எம்.9 போன்ற ரகங்களைத் தவிர்க்க வேண்டும்.

சான்றிதழ் பெற்ற விதைகளில் முளைப்புத்திறன், புறச்சத்தும், இனச்சத்தும் போன்றவை பராமரிக் கப்படுவதால் 10.15 சதம் உயர் மகசூலுக்கு வழி வகை காணலாம்.

விதை நேர்த்தி என்பது விதை யுடன் உயிர் உரங்கள், பூஞ்சாள மருந்துகள் போன்றவைகளை அளந்து விதைப்பதாகும்.

ஒரு ஏக்கருக்குத் தேவைப்படும் 24 கிலோ விதைக்கு 2 பொட் டலங்கள் அசோஸ் பைரில்லத்தை விதைப்பதற்கு அரை மணி நேரம் முன்னதாக அரை லிட்டர் ஆறிய வடிகஞ்சியுடன் நன்கு விரவி அரை மணி நேரம் நிழலில் உலர்த்தி விதைக்க வேண்டும். இவ்வாறு செய்வதால் நல்ல வாலிப்பான நாற்றுகள் பெறலாம்.

ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் கார்பண்டாசிம் அல்லது திரம் போன்ற பூஞ்சாள மருந்தினை விதைப்பதற்கு 24 மணி நேரம் முன்னதாகக் கலந்து வைத்திருந்து விதைப்பதால் நாற்றங்காலில் தோன்றும் நோய்கள் தவிர்க்கப் படுகிறது.

**நாற்றங்கால் நுட்பம்**

ஒரு ஏக்கருக்கு 8 செண்ட் நாற் றங்கால் தேவை. மேட்டுப்பாத்தி நாற்றங்கால் அமைத்திட வேண்டும். இதனால் வடிகால் வசதி கிடைப்ப துடன் பின்செய் நேர்த்திப் பணிகள் மேற்கொள்ள ஏதுவாகிறது.

நாற்றங்காலில் ஒரு செண்டுக்கு 2 கிலோ டை அமோனியம் பாஸ் பேட் உரமிடுவதால் நல்ல இனம் நாற்றுகள் கிடைக்கின்றன. உரிய காலத்தில் பறித்து நடவு செய்ய உள்ள இடங்களில் மட்டும் இதனை மேற்கொள்ள வேண்டும். நடவு தாமதப்படும் இடங்களில் நாற்று பறிப்பதற்கு 10 தினங்களுக்கு முன் பாக செண்ட் ஒன்றுக்கு அரை கிலோ டி.ஏ.பி. இட வேண்டும்.

நாற்றங்காலில் தோன்றும் பூச்சி களைக் கட்டுப்படுத்திட விதைத்த 10-ஆம் நாள் செண்டுக்கு 175 கிராம் காப்போபியூரான் இட வேண்டும். இவ்வாறு செய்வதால் நாற்றங்காலில் சாறு உறிஞ்சும் பூச்சிகளின் தாக்குதல் கட்டுப்படுத்து வதோடு நடவு வயலில் முதல் 45 நாட்களுக்கு இப்பூச்சிகளின் தாக்கு தல் தவிர்க்கப்படுகிறது.

**நடவு வயலில் தொழில் நுட்பம்**

நடவு வயலில் ஏக்கருக்கு 5 டன் தொழு உரம் அல்லது 2.5 டன் தழை உரம் இட வேண்டும். இவ் வாறு செய்வதால் பயிருக்குத் தேவை யுறும் சத்துகள் கிடைப்பதோடு மண்

★ ஒவ்வொன்றிற்கும் 'ஏன்' என்ற கேள்வியைப் போட்டு ஆராய்ச்சி நடத்தும் காலம் இது. மனிதருக்கு எவ்வளவு தூரம் பயன்படுகின்றது என்பதைப் பொருத்துதான், ஓர் பொருளுக்கு மதிப்பு வருகின்றது. இதற்காகத்தான் நாம் உழைக்கின்றோம்.

— தந்தை பெரியார்

ணின் வளம் அதிகரிக்கிறது.

ஒவ்வொரு விவசாயியும் பயிர்ச் சாகுபடிக்கு முன்னதாக மண் பரிசோதனை செய்து பரிந்துரைப்படி உரமிட வேண்டும். இவ்வாறு தேவை அறிந்து உரமிடுவதால் உரச் செலவில் சிக்கனம் காணலாம். மண்ணின் வளம் காக்கப்படுகிறது.

நாற்றுக்களை விதைத்த 18 முதல் 22 நாட்களில் உரிய வயதில் நடவு மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு உரிய காலத்தில் நடவு செய்வதால் பயிர் நடவு வயலில் எளிதில் நிலை கொண்டு நன்கு வளரும்.

நாற்றுகளைக் குத்திற்கு 2.3 நாற்றுகள் வீதம் வைத்து 2.3 செ.மீ.



ஆழத்தில் மேலாக நடவு செய்ய வேண்டும். இவ்வாறு செய்வதால் பயிர் எளிதில் நடவு வயலில் நிலை நிறுத்திக் கொண்டு நன்கு தூர் வெடிக்கும்.

பயிர் மகசூலில் பயிர் எண்ணிக்கை பராமரிப்பு மிகவும் முக்கியமான ஒன்றாகும். அதிகமாகத் தூர் வெடிக்கும் ரகங்களுக்கு 15 x 10 செ.மீ. இடைவெளியில் சதுர மீட்டருக்கு 66 குத்துகள் இருக்கும் வண்ணம் நடவு மேற்கொள்ளப்பட வேண்டும். மிதமாகத் தூர் வெடிக்கும் ரகமான அம்பை 16 போன்ற ரகங்களுக்கு 15 x 8 செ.மீ. இடைவெளியில் சதுர மீட்டருக்கு 80 குத்துக்கள் இருக்கும் வண்ணம் நடவு மேற்கொள்ளப்பட வேண்டும்.

நடவுக்கு முன்பாக ஏக்கருக்கு 4 பொட்டலம் அசோஸ் பரில்லம் உயிரின உரத்தைப் போதுமான தொழு உரத்துடன் கலந்து சீராகத் தூவ வேண்டும்-

பின் ஏக்கருக்கு 10 கிலோ சிங்சல்பேட் நுண் உரமிடல் வேண்டும். கிங்சல்பேட் தூள் உரமிடுவதால், பயிர் மகசூல் அதிகரிக்கிறது.

**களைகள்**

நடவு வயலில் தோன்றும் களைகளைக் கட்டுப்படுத்த நட்ட 3.5 நாட்களில் பூட்டோகுளோர்களைக் கொல்லி ஏக்கருக்கு 800-1000 மினி (அ) அலிலோ பாஸ் 500 மினி மருந்தினை 20 கிலோ மணலுடன் கலந்து வயலில் 2.5 செ.மீ. நீர் நிறுத்தி சீராகச் சீராகத் தூவ வேண்டும். பின்பு நீரை அடிக்கக் கூடாது.

நட்ட 10-ஆம் நாள் ஏக்கருக்கு 4 கிலோ நீலப்பச்சைப் பாசி விடுவதால் பயிருக்குப் பயிர்ச் சந்துகள் கிடைப்பதோடு மண்ணின் வளம் காக்கப்படுகிறது.

மேலும், பயிர்களுக்குத் தேவையான சத்துகளைப் பிரித்து அளிப்பதன் மூலம், பயிருக்குத் தேவைப்படும் சத்துகள் சீராகக் கிடைக்கிறது. மேலும் இழப்புகள் தவிர்க்கப்படுகிறது. எனவே, பயிருக்குத் தேவையுறும் தழைச் சத்தினை நான்கு சமப் பாகங்களாக பிரித்து ஒன்றை "அடி" உரமாகவும், மீதம் உள்ளவற்றைத் தூர் கட்டும் பருவம் (நட்ட 15-ஆம் நாள்) பூக்கும் பருவம். (நட்ட 30-ஆம் நாள்) பால் பிடிக்கும் பருவம், (நட்ட 45-ஆம் நாள்) என மூன்று தவணைகளில் இட வேண்டும்.

**வேப்பம் புண்ணாக்கு**

முதல் மேலுரம் இடும்பொழுது தழைச்சத்துடன் வேப்பம் புண்ணாக்கை 5:1 என்ற விகிதத்தில் கலந்து ஓர் இரவு வைத்திருந்து இட வேண்டும். இவ்வாறு இடுவதால் தழைச்சத்து பயிருக்குச் சீராகக் கிடைக்கின்றன. சாம்பல் சத்தில் 50 சதவிகிதத்தை அடி உரமாகவும் மீதமுள்ள 50 சதவிகித்தை இரண்டாமாவது மேல் உரத்துடன் கலந்து இட வேண்டும். மணிச்சத்து முழுவதும் அடி உரமாக இட வேண்டும்.

அதுபோல் ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு முறைகளைப் கடைப் பிடித்து பயிர்ப் பாதுகாப்பு பணி மேற்கொள்ள வேண்டும்.

காய்ச்சலும் பாய்ச்சலும் என்ற முறையில் கதிர் உருவாகும் பருவம் பால் பிடிக்கும் போன்ற காலங்களில் 5 செ.மீ. நீர் நிறுத்தியும் பிற காலங்களில் 2.5 செ.மீ. நீர் நிலத்திலும், அறுவடைக்கு 10.15 நாட்களுக்கு முன்பாக நீரை வடித்தும் நீர் நிர்வாகம் மேற்கொள்ளப்பட வேண்டும்.

மேற்கூறப்பட்ட அனைத்துத் தொழில் நுட்பங்களையும், வேளாண் துறைத் களப் பணியாளர்களின் உதவி கொண்டு செயல்படுத்தி, கார்ப் பருவ நெல் சாகுபடியில் ஏக்கருக்கு 4.0 மெ.டன் நெல் மகசூல் பெறலாம்.

★ ஒரு சமூகம் முன்னேற்றமடைய வேண்டுமானால் முதலாவது கல்வி, இரண்டாவது பொருளாதாரம் இவ்விரண்டும் பெற்றிராத சமூகம் முன்னேற முடியாது.

— தந்தை பெரியார்



# கடலூர் துறைமுகம் - ஒரு கண்ணோட்டம்

தென்னார்க்காடு மாவட்டத்தில் அமைந்துள்ள கடலூர் துறைமுகம் ஒரு முக்கியமான நடுத்தரத் துறைமுகமாகும். கடிலம் நதியும் பரவானர் நதியும் சங்கமிக்கும் இடத்தில் இத்துறைமுகம் அமைந்துள்ளது. சென்னையிலிருந்து இத்துறைமுகம் சுமார் 183 கி.மீ. தொலைவில் தெற்கே அமைந்துள்ளது.

கடற்கரையிலிருந்து ½ - 2 கி.மீ. தொலைவில் கப்பல்கள் நங்கூரம் பாய்ச்சி நிறுத்தப்படுகின்றன. இங்கே பலவிதமான பொருட்கள் கையாளப்படுகின்றன. ஒரே ஆண்டில் அதிகபட்சம் ரூ.5.45 இலட்சம் மதிப்புள்ள பொருட்கள் கையாளப்பட்டுள்ளன. 3வது, 4வது திட்டக்காலங்களில் ரூ.2 கோடி செலவில் இத்துறைமுகம் மேம்படுத்தப்பட்டது. ஒரே நேரத்தில் மூன்று கப்பல்களை இத்துறைமுகம் கையாளத்தக்க வசதிகளைப் பெற்றுள்ளது. கையாளப்படும் சரக்குகளைப் பொறுத்து நாளொன்றுக்கு 2500 மெட்ரிக் டன் எடையுள்ள பொருட்கள் அனுப்பப்படுகின்றன.

இங்கு கையாளப்படும் பொருட்களில் முக்கியமாக இறக்குமதி செய்யப்படுபவை உரம், உணவு தானியங்கள் ஆகும். வெங்காயம், பெல்ட்ஸ்பர், தவிடு மற்றும் பொதுச் சரக்குகள் சிங்கப்பூர், மலேசியா நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. ஆண்டு முழுவதும் இத்துறைமுகம் பணியாற்றுகிறது. எனினும், வடகிழக்குப் பருவக்காற்றின் காரணமாக அக்டோபர் முதல் டிசம்பர் வரையிலான காலகட்டத்தில் பலத்த காற்றினாலும், கடல் கொந்தளிப்பாலும் இத்துறைமுகம் பாதிக்கப்படுகிறது.

இந்தத் துறைமுகம் சாலைகளால் நன்கு இணைக்கப்பட்டுள்ளது. கடலூர் துறைமுகத்திலிருந்து அரை கிலோ மீட்டர் தொலைவில் சென்னை, திருச்சி நெடுஞ்சாலை உள்ளது. இத்துறைமுகம் மீட்டர் கேஜ் ரயில் பாதையால் கடலூருடன் இணைக்கப்பட்டுள்ளது.

கப்பல்களிலிருந்து சரக்குகளை இறக்கவும் ஏற்றவும் வசதியாக 5,575 அடிநீள wharf உள்ளது. இங்கு மூன்று கான்கிரீட் கிடங்குகளிலும் 2 திறந்தவெளி கிடங்குகளும், 80,000 ச.மீ. பரப்பளவுள்ள மணல் பரப்பும் அமைந்துள்ளது. இங்கு 10 டன் எடையை தூக்க வல்ல பளுதூக்கியும் (Crane) 20 டன் எடைத் திறன் கொண்ட எடைபாக்கும் இயந்திரமும் (Weigh bridge) உண்டு.

மேட்டூர் மின் நிலையத்திற்கு நிலக்கரி கொண்டு செல்வது பற்றி ஆராயப்பட்டு வருகிறது. தற்போது சென்னையில் நிலக்கரி இறக்குமதி செய்யப்பட்டு அங்கிருந்து சேலத்திற்கு ரயில் வண்டிகள் மூலம் கொண்டு செல்லப்படுகிறது. கடலூர் துறைமுகம் மேம்படுத்தப்பட்டால், நிலக்கரியை நேரடியாகக் கடலூரில் இறக்கி அங்கிருந்து சேலத்திற்கு இரயிலில் கொண்டு செல்லலாம். கடலூரில் மின்நிலையம் அமைக்க தமிழ்நாடு மின்வாரியம் ஏற்கெனவே முடிவு செய்துள்ளது. இத்திட்டத்திற்குத் தேவையான அனைத்து நிலக்கரிகளையும் இத்துறைமுகம் மூலமே இறக்குமதி செய்து கொள்ளலாம்.

சிப்காட்டில் அமைந்துள்ள டேன் ஃபேக் (TANFAC நிறுவனம் தனக்குத் தேவையான அனைத்துப் பொருட்களையும் இத்துறைமுகத்தின் மூலம் இறக்குமதி செய்து கொள்கிறது. 265 டிகிரி முதல் 295 டிகிரியில் புதிய கலங்கரை விளக்கம் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

அபாய காலங்களில் கப்பல்களுக்கு அபாய சமிக்ஞைகளையும் தேவையான அறிவுரைகளையும் இத்துறைமுகம் வழங்குகிறது.

இத்துறைமுகத்திற்கு வந்து போகும் கப்பல்களுக்கு சான்றிதழ்களை வழங்குவது, கப்பலுக்கும் கடற்கரைக்குமிடையே சமிக்ஞைகளை அளிப்பது, கப்பல்களை ஆய்வு செய்து லைசன்ஸ் வழங்குவது, இறக்குமதிக் கட்டணங்களை வசூலிப்பது, துறைமுக வாகன ஓட்டுநர்களைத் தேர்ந்தெடுத்தல் ஆகியவை இத்துறைமுகத்தின் சில முக்கியப் பணிகளாகும்.

இது தவிர, Merchant Shipping Act 1958-ன்படி கப்பல்களை அளந்து பதிவு செய்தல், அபாயத்திலுள்ள



# அதிமதுரச் சொல்லுடையார்!



திருவாளர் சி.என். அண்ணாதுரை அவர்களை அறியாத தமிழர் இரார். தென்னாட்டில் அவரைத் தெரியாதார் யாரும் இரார். இவர் ஆங்கிலத்தில் பண்டிதர். பட்டத்தால் மட்டும் பண்டிதராய்த் திரிபவர் பலர் உளர். எனில் எழுத்திலும் பேச்சிலும் பழுத்த மொழியாட்சியிலும் திறனுடையோர் மிகச் சிலரே. அத்தகைய நல்ல நடை வல்லவர் தம் வரிசையிலே முன் அணியில் இடம் உடையவர் இவர்.

தமிழிலோ அமிழ்துமிழும் சொல் வளமும், உணர்வெழுப்பும் தொடர்ச்சிச் செறிவும் குரவனிடம் கல்லாமல் தான் பயின்று திறம்பெற்ற சொல்லின் செல்வர், தமிழ் இளைஞர், 'புத்துலகு' விரைந்து தொழில் கேட்க நிரந்தினிது சொல்லுதல் வல்ல நாவலர்.

அதிமதுரச் சொல்லுடையார்; தளராத உள உரனும், வளரறிவும், வளமலியும் தன்னுடைமையாகக் கொண்டோர்.

— நாவலர் ச. சோமசுந்தர பாரதியார்

கப்பல்களையும், மாலுமிகளையும் காப்பாற்றுதல், மோசமான நிலையிலுள்ள கப்பல்களைத் தடுத்து நிறுத்தல், விபத்துக்களைப் பற்றி விசாரணை செய்தல் ஆகியவை மைய அரசுக்காக இத்துறைமுகம் புரியும் இதரப் பணிகளாகும்.

கடலூர் துறைமுகத்தில் கடந்த ஆறு ஆண்டுகளில் கையாளப்பட்ட சரக்குகளின் விவரம் வருமாறு:

1984-85-ஆம் ஆண்டு கப்பல்களின் எண்ணிக்கை 26, ஏற்றுமதி 18,289.5 மெ.டன், கப்பல்களின் எண்ணிக்கை 20, இறக்குமதி 3,49,539 மெ.டன், மொத்தம் 36,78,28,500; 1985-86-ஆம் ஆண்டு கப்பல்களின் எண்ணிக்கை 16, ஏற்றுமதி 22,540.0 மெ.டன், கப்பல்களின் எண்ணிக்கை 20, இறக்குமதி 2,62,794 மெ.டன், மொத்தம் .,2,85,334; 1986-87-ஆம் ஆண்டு கப்பல்களின் எண்ணிக்கை 12, ஏற்றுமதி 10,725.765 மெ.டன், கப்பல்களின் எண்ணிக்கை 10, இறக்குமதி 1,45,419 மெ.டன், மொத்தம் 1,56,145; 1987-88-ஆம் ஆண்டு கப்பல்களின் எண்ணிக்கை 6, ஏற்றுமதி 9,493 மெ.டன், கப்பல்களின் எண்ணிக்கை 2, இறக்குமதி 25,197 மெ.டன், மொத்தம் 34,690; 1988-89-ஆம் ஆண்டு கப்பல்களின் எண்ணிக்கை 2, ஏற்றுமதி 3,192 மெ.டன், கப்பல்களின் எண்ணிக்கை 17, இறக்குமதி 1,97,534 மெ.டன், மொத்தம் 2,00,726; 1989-90-ஆம் ஆண்டு கப்பல்களின் எண்ணிக்கை 2, ஏற்றுமதி 1,001 ஆடுகள், கப்பல்களின் எண்ணிக்கை 20, இறக்குமதி 2,68,602 மெ.டன், மொத்தம் 2,68,062.

கடந்த ஆண்டுகளில் வரவு செலவு விவரம்: 1985-86-ஆம் ஆண்டு வரவு 22,61,305, செலவு 20,65,206; 1986-87-ஆம் ஆண்டு வரவு 13,04,561, செலவு 22,92,741; 1987-88-ஆம் ஆண்டு வரவு 18,91,405, செலவு 23,25,653; 1988-89-ஆம் ஆண்டு வரவு 28,03,060, செலவு 25,66,283; 1989-90-ஆம் ஆண்டு வரவு 21,80,759, செலவு 32,46,313.

இத்துறைமுகத்தின் மேம்பாட்டுக்காக எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பகுதி 2 திட்டத்தின் கீழ் ரூ.50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

நிதி ஆதாரங்கள் அதிகம் ஒதுக்கப்பட்டால், நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் மேட்டூர் அனல் மின் நிலையம் ஆகியவற்றின் தேவைகள் அடிப்படையில் கடலூர் துறைமுகத்தை நன்கு மேம்படுத்தலாம். இச் சந்தர்ப்பங்களை நன்கு பயன்படுத்தி, இதைப் பெரிய துறைமுகமாக உருவாக்கும் நாள் வெகு தொலைவில் இல்லை!

—என். இளங்கோ



## தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்:

# பாரதியார் நினைவு நாள் விழா

**தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் சார்பில், பாரதியார் நினைவுநாள் விழா, 11.9.93 அன்று சென்னை மயிலை ரசிக ரஞ்சனி சபாவில் நடைபெற்றது.**

மன்றத் தலைவர் திரு குன்னக்குடி வைத்தியநாதன் அவர்கள் அனைவரையும் வரவேற்றார்.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் கல்லூரி மற்றும் பள்ளி மாணவ - மாணவியர்களிடையே பேச்சுத் திறனை ஊக்குவிக்கும் பொருட்டு, பேச்சுப் போட்டி ஒன்றிற்கு ஏற்பாடு செய்திருந்தது. இப்போட்டியில் பள்ளி மாணவ-மாணவியர் 204 பேரும், கல்லூரி மாணவ-மாணவியர் 45 பேரும் கலந்துகொண்டனர்.

நான்கு தமிழறிஞர்களைக் கொண்ட நடுவர் குழுவால் பள்ளி மாணவர்கள் நால்வரும், கல்லூரி மாணவர்கள் நால்வரும் முதல் பரிசு, இரண்டாம் பரிசு, மூன்றாம் பரிசு ஆறுதல் பரிசிற்கெனத் தேர்வு செய்யப்பட்டனர்.

தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு முதல் பரிசு ரூ.1,000, இரண்டாவது பரிசு ரூ.500, மூன்றாவது பரிசு ரூ.250, ஆறுதல் பரிசு ரூ.100 ரொக்கத் தொகையாக வழங்கவும், ஐந்தாம் வகுப்பு வரை படிக்கும், போட்டியில் கலந்து கொண்ட 8 குழந்தைகளுக்கு நினைவுப் பரிசும் வழங்கவும் முடிவு செய்திருந்தது.

மாண்புமிகு நீதியரசர் திரு கே.எஸ். பக்தவத்சலம் அவர்கள் பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற பள்ளி, கல்லூரி மாணவ-மாணவியருக்குப் பரிசுகள் வழங்கினார்.

மன்றச் செயலாளர் திரு ஆர்.எஸ்.மனோகர் நன்றி நவின்றார்.

இவ்விழா முடிவில் சென்னை அபிநயா நாட்டியாலயா பள்ளி மாணவிகள் மற்றும் பத்மா சேஷாத்திரி பள்ளி மாணவிகள் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.






## திருநெல்வேலியிலுள்ள மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக் கழகத்துக்குச் சொந்தக் கட்டடம்

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்திலுள்ள மனோன் மணீயம் சுந்தரனார் பல்கலைக் கழகத்துக்குத் தமிழக அரசு, திருநெல்வேலியிலிருந்து 4 கி.மீ. தொலைவில் தென்காசி சாலைப் பகுதியில் அமைந்துள்ள அபிஷேகப்பட்டியில் 221·30.0 எக்டேர் நிலம் ஒதுக்கியிருக்கிறது. இதில் 40 ஆயிரம் சதுர அடி பரப்பில் ரூபாய் 200 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் நிர்வாக அலுவலகக் கட்டடங்கள் கட்டப்படும்.

இந்தப் பணி, இவ்வாண்டு ஜூலை மாதம் தொடங்கப்பட்டது. 1994 மார்ச் மாத இறுதிக்குள் நிர்வாக அலுவலகக் கட்டடத்தின் 'சி' பிரிவு கட்டி முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. அடுத்த ஆண்டு செப்டம்பர் இறுதிக்குள் கட்டடத்தின் முழுப் பகுதியும் கட்டி முடிக்கப்படும்.

டாக்டர் வி. வசந்திதேவி
துணைவேந்தர்

டாக்டர் எஸ். செல்வநாதன்
பதிவாளர்

**மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகம் – திருநெல்வேலி**

ஆசிரியரும் வெளியிடுபவரும்: இரா. சம்பத், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி: தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927

# எளிமையானவை! நேர்த்தியானவை!
# மேன்மை மிகுந்தவை!
# தோற்றம் அளிப்பவை!



கோ-ஆப்டெக்ஸ்

தமிழ்நாடு கைத்தறி

* பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
* லுங்கிகள், துவாலைகள். வேட்டிகள்.
* படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ்
விற்பனை நிலையத்தை அணுகவும்.

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23

தமிழரசு









தர்மபுரி மாவட்டம் - பாலக்கோடு:
அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி
(30.8.1993)